Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை 16 செவ்வாய்க்கிழமை (02.12.2014) பக்கங்கள் 20 ஓசை – 063

## எதிரணியின் ஒப்பந்தம் நேற்று கைச்சாத்தாகியது

(கொழும்பு)

பொது எதிரணிகள் இணைந்து புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் நேற்று கைச்சாத்திட்டுக் கொண்டன. கொழும்பு விகார மகாதேவி திறந்தவெளி அரங்கில் முற்பகல் 10.31 மணிக்கு சுப வேளையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சந்திரிகா தலைமையிலான பிரிவு, ஜனநாயக மக்கள் முன்னணி, ஜனநாயக கட்சி, புதிய சிஹல உறுமய, மௌபிம ஜனதா பெரமுன, தேசிய ஐக்கிய முன்னணி உள்ளிட்ட கட்சிகளும், பொது அமைப்புக்களும் அடங்கலாக இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

## இது முழுமை இல்லாத ஒப்பந்தம் மனோகணேசன் தெரிவிப்பு

பொது எதிரணிகளின் உடன்படிக்கை இந்த நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்களின் அனைத்து பிரச்சினைகளையும் அடையாளப் படுத்தவில்லை. எங்கள் தேசிய அபிலாஷைகளுக்கு முழுமையான தீர்வுகளை தரவில்லை. ஆனால், ஒரு ஜனநாயக அடிப்படை இங்கே காணப்படுகிறது.

அது எமது எதிர்பார்ப்புகளை ஈடு செய்யும் எமது பயணத்துக்கு வழிசமைக்கும் என நாம் நம்புகின்றோம். ஆகவேதான் நம்பிக்கை வைத்து முழுமையில்லாத உடன்படிக்கையில் எதிர்பார்ப்புகளுடன் கையெழுத்திட்டுள்ளோம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார்

(19) ஆம் பக்கம் பார்க்க...

## யாழ்.குடாநாட்டில் வெள்ள அனர்த்தம்; பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி

### செயலகத்தில் அவசர கூட்டம்



குடாநாட்டில் தொடரும் அடைமழை காரணமாக மக்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகள் மற்றும் மக்களுக்கான நிவாரணம் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளை உடன் நிவர்த்தி செய்வது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

யாழ்.மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் மேற்படி கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

இதன்போது மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களது எண்ணிக்கை, தற்காலிக இருப்பிட வசதி, சமைத்த உணவு

(19) ஆம் பக்கம் பார்க்க...

# அரசியல் சட்டத்தை மீறி தமிழர்களுக்கு தீர்வு இல்லை

### இந்திய மத்திய அமைச்சர் தெரிவிப்பு



இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமைகள் வழங்கப்படுவது என்பது அந்த நாட்டின் அரசியல் சட்ட வரையறைகளுக்குள்ளேயே இருக்க வேண்டும்.

அரசியல் சட்டத்தையும் தாண்டிச் சென்று உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று இந்தியா ஒருபோதும் விரும்பியதில்லை. அரசியல் யாப்பு வரையறைக்குள் நின்று கொண்டே தமிழர்களுக்கான உரிமைகள் குறித்து இந்திய அரசு கவனம் செலுத்தும் என்றும் இந்திய மத்திய அமைச்சர் வெங்கையா நாயுடு தெரிவித்துள்ளார்.

அரசமைப்பு பொறி முறையொன்றின் ஊடாகவே இலங்கை தமிழர்களுக்கு சமஉரிமை, அந்தஸ்த்து என்பனவற்றை இல

(19) ஆம் பக்கம் பார்க்க...

## ஐ.தே.கட்சியில் இணைந்தார் நவீன்

அமைச்சர் பதவியை நேற்று முன்தினம் இராஜினாமாச் செய்துகொண்ட நவீன் திஸாநாயக்க நேற்று சிறிகொத்தாவில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக் காரியாலயத்துக்குச் சென்று அக்கட்சியில் இணைந்துகொண்டார்.

ஐ.தே.க.வின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, பிரதித்

(19) ஆம் பக்கம் பார்க்க...

## கடற்பிராந்தியத்தில் கூட்டு நடவடிக்கை



### இலங்கையுடன் இந்தியா ஒத்துழைக்கும்

(கொழும்பு)

கடற்பிராந்திய கூட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைக்காக இலங்கையுடன் இந்தியா தொடர்ச்சியாக ஒத்துழைத்துச் செயற்படும் என்று இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் தெரிவித்துள்ளார்.

காலி கலந்துரையாடல் நிகழ்வில் நேற்றுக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இதன்பொருட்டு இலங்கை வழங்க வேண்டிய பங்களிப்பு குறித்து அவர் வலியுறுத்தல் விடுத்துள்ளார்.

வெளிநாட்டவரின் அநாவசிய இராணுவ பிரசன்னங்கள் தவிர்க்கப்பட வேண்டிய விடயங்கள் என்றும் இந்திய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் குறிப்பிட்டார்.

1971 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் யோசனைப்படி, இந்து சமுத்திர பிரதேசம் ஒரு சமாதான பிரதேசமாகும்.

எனவே இந்தப் பிராந்தியத்தில் அந்நிய இராணுவ பிரசன்னங்களுக்கு இடமளிக்கக் கூடாது என்று அவர் கோரிக்கை விடுத்தார்.

இந்தியா, சுமார் 5 ஆயிரம் வருடங்களாக பிராந்தியத்தில் பலமிக்க நாடாக இருந்து வருகிறது. எனினும் எந்த நாட்டுக்கு எதிராகவும் அது ஆத்திரமூட்டும் செயல்களில் ஈடுபட்டதில்லை என்றும் டோவல் குறிப்பிட்டார்.

(19) ஆம் பக்கம் பார்க்க...

## கனமழை பொழிவு; மக்கள் இடம்பெயர்வு



(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தொடர்ச்சியாக பெய்துவரும் அடைமழையை அடுத்து தாழ்வு நிலப் பகுதிகளில் வெள்ளநிலை ஏற்பட்டதையடுத்து மக்கள் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளதுடன்

(19) ஆம் பக்கம் பார்க்க...



## கருத்தரங்கு

நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையில் சுகாதார கருத்தரங்கும், காலணி வழங்கல் வைபவமும் இன்று காலை 8.30 மணிக்கு அதிபர் தி.இரவீந்திரநாதன் தலைமையில் இடம்பெறும். பிரதம அதிதியாக றொட்டேறியன் இ.கிருபாகரன் கலந்து கொள்வார்.


## சிறு விளம்பரம்

### டயானா பிளாஸ்ரிக் ரீசைக்கிள் (மீள்சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

(இலுப்பையடிச் சந்தி அருகாமை)

021 222 8680, 077 592 5088. (C/3589)

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

சுதுமலை தெற்கில் ஒரு புதிய கல் வீடும், சகல வசதிகள் கொண்ட இன்னொரு வீடும் காணியுடன் விற்பனைக்குண்டு. பென்சன் பெறுவோர், அரச வைத்தியசாலைகளில் பணிபுரிவோர்க்கு சகாய விலைக்கு கொடுக்கப்படும். தரகர் வேண்டாம். தொடர்பு:- க.சீவறட்ணம், சம்பந்தர் ஒழுங்கை, சுதுமலை தெற்கு. (R/379)


# மத்திய கல்லூரியின் புகழ்பூத்த அதிபர் இராசதுரை ஞாபகார்த்தமாக மண்டபம்

## அமைச்சர் நேற்று திரைநீக்கம் செய்தார்

**யாழ்.மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் கணபதி இராசதுரையின் நினைவாக கல்லூரி வளாகத்தில் அவரது உருவச்சிலையை நிறுவுவதற்கு உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென அமைச்சர் டக்ளஸ் தேவனந்தா நேற்று தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியில் நேற்று இடம்பெற்ற அமரர் இராசதுரையின் நினைவு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த கல்லூரியின் மேம்பாட்டுக்காக ஆளுமைமிக்கதொரு அதிபரைத் தேடிக் கொண்டிருந்த காலப்பகுதியில் தான் அமரர் இராசதுரையின் தொடர்பு எனக்கு கிடைத்தது.

இதன்பின்னர், அவரை இக்கல்லூரியின் அதிபராக கல்வியமைச்சின் ஊடாக நியமித்திருந்தேன்.

அவர் இந்த கல்லூரியின் முன்னேற்றத்திற்காக உழைத்தவர் என்பதுடன் என்னோடிருந்த உறவின் காரணமாக அப்போது புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவரது வழிகாட்டலின் கீழ் இக்கல்லூரி பாரிய வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் கண்டுள்ளதுடன் தற்போது 2000 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

அந்தவகையில் அவரது உழைப்பிற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளும் அதேவேளை அவரது கடமையுணர்விற்காக கல்லூரி வளாகத்தில் அவரது உருவச்சிலையை நிறுவுவதற்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

கல்லூரியின் பிரதான வாயிலிலிருந்து மாணவர்களின் இசை வாத்திய அணிவகுப்புடன் அமைச்சர் மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

அங்கு வைக்கப்பட்டிருந்த கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் கணபதி இராசதுரையின் உருவப்படத்திற்கு அமைச்சர் நினைவு தீபத்தை ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து ஏனையோரும் ஏற்றிவைத்தனர்.

கல்லூரி அதிபர் எழில்வேந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அமரர் இராசதுரையின நினைவாக வடமாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட பட்டிமன்ற நிகழ்வில் 20 பாடசாலைகள் பங்குபற்றியிருந்த நிலையில் இறுதிப்போட்டியில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையும் முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

இதனிடையே யாழ்.மத்திய கல்லூரியில் அமரர் இராசதுரையை நினைவுகூரும் முகமாக கல்லூரியின் கட்டடமொன்றுக்கு அமரது பெயர் சூட்டப்பட்டு



அதன் பெயர்ப்பலகையினை அமைச்சர் திரைநீக்கம் செய்து வைத்தார்.

அமரர் இராசதுரை 1996 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரை அதிபராக இருந்து கல்வி மற்றும் விளையாட்டுத்துறைகளை வளர்த்தெடுத்து கல்லூரியின் மேம்பாட்டுக்காகவும் வளர்ச்சிக்காகவும் அர்ப்பணிப்புடன் பணிசெய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்.மத்தியகல்லூரியின் தமிழ்ச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் மாகாண ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர் அல்பிரட், அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் தயானந்தா, முன்னாள் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, அமைச்சரின் ஆலோசகர் சுந்தரம் டிவகலால, அமரர் இராசதுரையின் மகள் திருமதி ராதிகா விஜேந்திரம், மருமகன் விஜேந்திரம் பாடசாலை சமூகத்தினர் உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் உடனிருந்தனர்.

## கடத்தப்பட்ட 7 மாடுகள் சிக்கின

பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மன்னார் வீதிப் பகுதியில் சட்டவிரோதமாக இறைச்சிக்காக கடத்திச் செல்லப்பட்ட 7 மாடுகளை இராணுவத்தினர் பிடித்துள்ளதுடன், நபர்களையும் கைது செய்துள்ளனர்.

குறித்த வீதியால் யாழிலிருந்து விடத்தல் தீவுக்கு கொண்டு செல்வதற்காக எடுத்து வந்த நிலையில் இராணுவ சோதனையின் போது மாடுகள் சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்டது தெரியவந்துள்ளது. குறித்த நபர்களையும் மாட்டினையும் முழங்காவில் பொலிஸாரிடம் கையளித்துள்ளனர். (36)


## எமது ஸ்தாபகர் திரு.வாமதேவா தியாகேந்திரன் அவர்களின் 63 வது அகவையில்....



எப்படியெல்லாம் வாழலாம் என்று வாழும் இன்றைய மானிட சமூகத்தில் இப்படித்தான் வாழவேண்டும் என்று தனக்கென்று ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டு வாழும் மனிதர்கள் சிலர்!

தான் வாழ்ந்தால் போதும் என்று நினைக்கும் சமூகத்தில் தன்னை சூழ்ந்த சமூகமும் துன்பமின்றி வாழ வேண்டும் என்ற உயர்ந்த உள்ளம் எங்களில் எத்தனை பேருக்குத் தான் வரும் எல்லா வசதி வாய்ப்புக்கள் இருந்தாலும் மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற மனம் எல்லோர்க்கும் எளிதில் வருவதில்லை அந்த மனம் கோடியில் ஒருவனுக்குத்தான். அந்த கோடியினையே தனது உறவுகளுக்கே உதவும் மனமில்லாத உறவுகள் மத்தியில் முகமறியா உறவுகளுக்கு கருணை உள்ளம் கொண்ட ஒரு பிறவி தான் எங்கள் தியாகி அவர்கள் நம்ப முடியவில்லை இப்படியும் ஒரு மனிதரா! இத்தகைய ஓர் உன்னத மனிதரை இந்த பிறந்த நாளில் வாழ்த்தும் வாய்ப்பு TCT சமூகத்திற்கு கிடைத்ததையிட்டு பெரும் உவகையடைகின்றோம். அந்த மனிதன் வாழும் சூழலில் அவர் நிழலில் நாமும் வாழுகின்றோம் என்று நினைக்கையில் எமக்கும் ஓர் பெருமிதம்

அவர் தான் தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகர் உயர் திரு. வாமதேவா தியாகேந்திரன் அவர்கள். தளராதா அறச்சிந்தனை விடாமுயற்சியாய் உயர்ந்திட்ட செல்வம் பாலெனப் பொங்கிட காராம் பசுவானவர் எங்கள் தியாகி எல்லோர்க்கும் தங்கள் பேருக்கு ஏற்றாற்போல் செயல் அமைவதில்லை. இவருக்கு மட்டும் பேருக் கேற்றாற் போல குணமும் அமைந்தது தான் அதிசயம். வசதி வாய்ப்புக்கேற்ப மிடுக்கோ கர்வமோ இல்லாத ஒரு சாதாரணமான மனிதனாகத் தோன்றும் இவரா அவர் என வியக்கவைக்கும் எல்லோரிடமும் பாசத்துடனும் மிகுந்த அக்கறையுடனும் பழகுவார் மெழுகாய் உருகி ஒளியாய் திகழும் இந்த தியாக தீப ஒளியால் முதியோர், இளையோர் மாணவர்கள் என இன மத மொழி பேதமின்றி நாடு கடந்த எட்டுத்திசையிலும் வாழ்த்தொலிகள் ஒலிக்க இந்த நன்னாளில் பல்லாண்டு காலம் வாழ்க வாழ்க என இந்த நாளில் வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்*

*தியாகி அறக்கொடை நிறுவனம், ரீ.சீ.ரீ. சிறுவர் இல்லம்,*

*ரீ.சீ.ரீ. பல்பொருள் விற்பனை நிலையம், ரீ.சீ.ரீ. விருந்தினர் விடுதி*

(C/3915)

யாழ். சமூக செயற்பாட்டு மையம்
பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
ஆணுக்கு நிகராய் இங்கு பெண்களும் உழைக்கையிலே,
கொடுப்பனவுகளில் மட்டும் ஏன் கூர்மையான பாரபட்சம்.
சமசுலி பேணுவோம். சமத்துவத்தினை நிலைநாட்டுவோம்.
JSAC
16
2014

# மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வடமாகாணசபை உதவமுன்வரவில்லை

## குற்றம் சாட்டுகிறார் தியாகராசா



(யாழ்ப்பாணம்)

வட பகுதியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு வடமாகாணசபை உதவ முன்வரவில்லை என வடமாகாண சபையின் ஆளும்தரப்பு உறுப்பினர் ம.தியாகராசா குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று முன்தினம் கருத்து தெரிவிக்கையில்;

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு வவுனியாவில் தற்காலிக நலன்புரி நிலையங்களில் பலர் தங்கவைக்கப் பட்டுள்ளனர் என்ற தகவலை வட மாகாண முதலமைச்சரைத் தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியவில்லை. அதனால் தொலை நகல் மூலம் நான் உடனடியாக கடிதம் அனுப்பியிருந்தேன். எனினும் அவரிடமிருந்து எவ்வித பதிலும் கிடைக்காத நிலையில் அவைத் தலைவருடன் தொடர்பு கொண்டு, பின்னர் முதலமைச்சரின் தொடர்பு கிடைத்தது. இதன்போது மக்களின் அவலம் குறித்து தெரியப்படுத்தினேன்.

எனினும் இதுவரை வடமாகாண சபை நிதியில் இருந்தோ முதலமைச்சர் நிதியில் இருந்தோ பாதிக்கப் பட்ட மக்களுக்கு உதவ யாரும் முன்வரவில்லை என்றார்.

# விழிப்பூட்டும் செயற்பாடு



சுன்னாகம் பகுதியில் உள்ள கிணறுகளில் தண்ணீர் மாசடைந்துள்ளமை தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உடுவில், தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உள்ள கிணறுகளில் பரவலாக கழிவு ஓயில் கலந்து குடிதண்ணீர் மாசடைந்துள்ளமை, வேறு பகுதிகளுக்கும் தொடர்ந்து பரவி வருகின்றமை தொடர்பில் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப் பட்டபோது, எதிர்காலத்தில் குறிப்பிட்ட தண்ணீரைப் பருகும் பொது மக்களுக்கு ஏற்படக் கூடிய அபாயம் பற்றி தெல்லிப்பளை மற்றும் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரிகளினால் மன்றில் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து, குறிப்பிட்ட நீரைப் பருகுவதால் ஏற்படக் கூடிய அபாயம் பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும்படி மல்லாகம் நீதிமன்றம் பணித்தது. இந்த நிலையில், மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயற்றிட்டத்தை ஆரம்பிக்கும் வகையில் தெல்லிப்பளை, உடுவில் பிரதேசங்களைச் சேர்ந்த சனசமூக நிலையங்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதி நிதிகளுடனான சந்திப்பொன்று கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

# வலி.வடக்கு மக்களை கைவிட்ட வடமாகாண சபை

## கவலை தெரிவிக்கின்றனர் மக்கள்

வடக்கு மாகாண அரசு தம்மை கைவிட்டுள்ளதாக வலி.வடக்கிலிருந்து இடம்பெயந்து அகதி முகாம்களில் வாழும் மக்கள் கவலை வெளியிட்டனர். நேற்றுமுன்தினம் மக்கள் மழையால் எதிர்கொள்ளும் அவலங்களை பார்வையிட்ட செய்தியாளர்களிடமே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து பெய்து வரும் கன மழையால் இருக்க இடம் இன்றி அந்தரிக்கும் மக்கள், இதுவரை தமக்கு உதவிகள் எவையும் வடக்கு மாகாண அரசிடமிருந்து கிடைக்கவில்லை எனக் கவலை தெரிவித்தனர்.

மேலும் வடக்கு மாகாண சபையால் எமக்கு உதவ முடியாமல் இருப்பதையிட்டு நாம் கவலையடைகிறோம் எனத் தெரிவிக்கும் மக்கள் வட மாகாண சபையிடம் முன்கூட்டிய திட்டமிடல்கள் இல்லை பாதிக்கப்பட்டு நாங்கள் தெருவுக்கு வரும் நிலையில்தான் 500 சாக்குகளுடன் வருகிறார்கள். வீடுகளுக்குள் அரைவாசிக்கு வெள்ளம் வந்த பின்னர் சாக்குகளை வைத்து என்ன செய்வது எனவும் கேள்வி எழுப்புகின்றனர்.

இனியாவது வடக்கு மாகாண சபை முன் கூட்டிய திட்டமிடல்களுடன் செயற்பட வேண்டும். மத்திய அரசை விட வடக்கு மாகாண சபைக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளில் அதிக பொறுப்புண்டு. அவர்களை நாமே எமது பிரதிநிதிகளாகத் தெரிவு செய்தோம். எனவே இருக்கும் வளங்களைக் கொண்டேனும் முன்கூட்டிய திட்டமிடல்களுடன் மக்களின் பாதிப்புக்களைத் தடுக்க அல்லது குறைக்க வடக்கு மாகாண சபை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பதில் சொல்லக் கடமைப்பட்டோர் – 06

## (பகுதி – 3)




**தமிழ் ஊடகங்களை நோக்கியும் ஊடகவியலாளர்களை நோக்கியும் மேலும் சில கேள்விகள்**

26. ஈழத்தமிழர்கள் அதிகளவு நேரத்தை ஊடகங்களில் செலவு செய்கிறார்கள். ஊடகங்களை இயக்குவதற்காக ஒரு தரப்பினரும் ஊடகங்களை வாசிப்பதற்காகவும் பார்ப்பதற்காக ஏனையோரும் இந்த நேரத்தைச் செலவு செய்கின்றனர். ஆனால், இந்த நேரச் செலவுக்கேற்ற வகையில் அதற்கான பெறுமானம் உள்ளதா?

27. அரசியலாளர்களையும் சமூகச் சூழலையும் வளப்படுத்தி, அவர்களைச் சரியான திசைநோக்கிப் பயணிக்க வைக்க வேண்டிய பொறுப்பும் பணியும் ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் உரியது. ஆனால், அப்படியாக தமிழ் ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் செயற்படுவதில்லையே. இது ஏன்?

28. முறையாகச் செயற்படும் ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் செயற்பாட்டாளர்களின் மீது அழுத்தத்தை உண்டு பண்ணமுடியும். அப்படியாக அழுத்தத்தைப் பிரயோகிக்கும்போதே பொறுப்புகளில் இருந்தும் கடமைகளில் இருந்தும் மக்களிடமிருந்தும் விலகிச்செல்லும் அரசியலாளர்களைக் கட்டுப்படுத்தி அவர்களைச் சரியாக இயங்க வைக்க முடியும். அல்லது மக்கள் அவர்களை நிராகரிப்பதற்கான சூழலை உருவாக்கலாம். ஆனால், தமிழ் ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் இதை ஏன் செய்யவில்லை? அதாவது ஊடகங்களின் உயர் பெறுமானத்தைப் பயன்படுத்தாமல் அதை ஏன் சீரழிவு நிலைக்குக் கொண்டு சென்றுள்ளனர்?

29. ஊடகங்கள் பொறுப்போடும் நேர்மையாகவும் முறையாக விமர்சனத்தை வைத்தால் அதன் பயன் மக்களுக்குக் கிடைக்கும். அந்த விமர்சனம் அரசியலிலும் கல்விச் சூழலிலும் நிர்வாகத்துறைகளிலும் சட்டத்திலும் மக்களிடத்திலும் பண்பாட்டுத்தளத்திலும் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தும். ஆனால், அப்படியான ஒரு நிலையை ஏற்படுத்திருக்கிறதா? அது ஏற்படவில்லையென்றால் அதற்கான காரணம் என்ன? இந்த நிலையை மாற்றியமைப்பதற்கு யார் தயாராக உள்ளனர்?

30. கொழும்பில் இயங்கும் ஊடகங்களைத் தவிர, யாழ்ப்பாணத்திலும் புலம்பெயர் நாடுகளி லும் இயங்கி வருகின்ற ஊடகங்கள் மருந்துக்கும் கூட முஸ்லிம் மக்களைப் பற்றியும் மலை யக மக்களைப் பற்றியும் சிந்திப்பதேயில்லை. இது ஏன்?

31. யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற எந்தப் பத்திரிகை நிறுவனத்திலும் முஸ்லிம் ஊடகவியலாளர்கள் எவரும் இல்லை என்று சொல்லப்படும் குற்றச்சாட்டுக்கான பதில் என்ன?

32. தமிழ் ஊடகங்கள் மக்களை விழிப்புணர்வூட்டுவதற்குப் பதிலாக அவர்களை மூட நம்பிக்கைகள், குருட்டு நம்பிக்கைகளின் பின்னால் அணிதிரட்டுகின்றன என்ற விமர்சனத்தை மறுக்க முடியுமா?

33. தமிழ் ஊடகங்கள் எப்பொழுதும் விமர்சனத்தை வைப்பதற்குப் பதிலாக எல்லாரின் மீதும் குற்றச்சாட்டையே வைக்கின்றனவே. முக்கியமாக தங்களுக்கு விருப்பமில்லாத தரப்புகளை கடுமையாக சாட்டையால் அடிப்பதாகவும் விருப்பத்துக்குரிய தரப்புகளுக்கு ஐஸ்கிறீமும் கண்டோசும் கொடுப்பதாகவுமே தமிழ் ஊடகங்கள் இருக்கின்றன. இது ஊடகத்துறைக்கு ஆரோக்கியமானதா?

34. தமிழ் ஊடகங்கள் எப்பொழுது துரோகி – தியாகி என்ற வகைப்பாடுகளைக் கைவிடும்?

35. தமிழ் ஊடகங்களைத் தவிர, வேறு ஊடகங்களில் இந்த மாதிரியான துரோகி – தியாகி என்ற வகைப்பாடுகள் உண்டா?

36. தமிழ் ஊடகங்களை சர்வதேச நியமங்களுக்குப்பட்டதாக மாற்றியமைப்பதற்கான சாத்தியங்கள் உண்டா?

37. சில வகையான செய்திகளை – தங்களது அரசியல் நிலைப்பாட்டுக்கு மாற்றான தகவல்களை – வேண்டுமென்றே மறைப்பதும் விலக்குவதும் தமிழ் ஊடகங்களுக்கே உரிய குணாம்சமாக இருப்பதன் காரணம் என்ன? தமிழ்ச் சமூகத்தினுள் பார்க்கப்படும் சாதித்தீட்டு மனோபாவம் பத்திரிகைத் துறையிலும் அவ்வாறே கடைப்பிடிக்கப்படுகிறதா?

38. சகல தரப்பினருக்கும் இடமளிக்கும் பத்திரிகை தர்மத்தை முறையாகக் கடைப்பிடித்துவரும் தமிழ்ப் பத்திரிகை இது என்று எதையேனும் ஒன்றை உங்களால் இனங்காட்ட முடியுமா?

39. தமிழ் அரசியல்வாதிகளின் தவறுகளை, மக்களை மறந்துவிட்டு அவர்களுக்குள்ளேயே போடும் குஸ்திகளைத் தட்டிக்கேட்டு அம்பலப்படுத்தி எழுதினால் அரசுக்கு அது வாய்ப்பாகிவிடும் என்றுதான் இப்போதும் அரசின் தவறுகளை மட்டுமே எழுதிக்கொண்டிருப்பது என்று செயற்பட்டு வருகின்றனவா தமிழ் ஊடகங்கள்?

40. எங்கள் கடந்தகால நிகழ்காலத் தவறுகள் பற்றி எந்தக் கேள்விகளை எழுப்பாமலும் சுயவிமர்சனங்களைச் செய்துகொள்ளாமலும், நம்மிடம் மாற்றம் வேண்டுமா அது நிகழ்ந்திருக்கிறதா என்பதை விவாதிக்காமலும்... தமிழ் சமூகத்திற்கு வெளியே உள்ள எதிரிகளும் உள்ளே உள்ள துரோகிகளும் தான் தீர்வுக்குத் தடையாக இருக்கிறார்கள் என்று எழுதிக்கொண்டிருப்பதுடன் பத்திரிகைக் கடமை முடிந்துவிடுகிறதா?

கவலை நம் சவப்பெட்டிக்கு ஓர் ஆணி சேர்க்கிறது. கலகல வெனும் சிரிப்பு ஓர் ஆணியை கழற்றுகிறது - பீட்டர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## பாவம் அவர் உறங்கட்டும்..!

வடக்குத் தமிழர்கள் மிகப் பெரும்பான்மையான வாக்குகளை அளித்து ஒரு முதலமைச்சரைத் தேர்வு செய்து வைத்திருக்கிறார்கள். அவர் நமக்கு என்ன செய்கிறார் என்று இந்த மக்கள் எதுவும் கேட்பதில்லை.

இவ்வாறான ஒரு பெருந்தன்மை மனோபாவம் கொண்ட மக்கள் கூட்டத்தை உலகில் வேறெங்காவது காண முடியுமா? அவர் இப்படியே படுத்துத் தூங்கி முழுமையான ஐந்து வருட ஓய்வெடுத்துவிட்டு, அடுத்த தேர்தலுக்கு வந்து நின்றாலும் வாக்குகளை அப்படியே அள்ளிப் போடுவார்கள்... வெள்ளந்தியான மக்கள்!

காலையில் எழுந்து சொந்த அலுவல்களை முடித்துவிட்டு, அன்று யாராவது நிகழ்ச்சி எதற்காவது அழைத்திருக்கிறார்களா என்று கேட்டு அதை முடித்துக்கொண்டு வந்து உறங்கி ஓய்வெடுப்பாராக இருக்கும்.

மாலையில் எழுந்து பக்தி சிரத்தையாக பழைய புராணங்களை எடுத்துப் படிப்பதையோ பஜனையில் கலந்துகொள்வதையோ செய்கிறார் போலும். பிறகு அடுத்த நாளும் இந்த முதலமைச்சர் பணிகளுக்காக அவர் ஓய்வெடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும்.

எங்காவது கூட்டங்களில் உரையாற்ற வேண்டி வந்தாலோ அல்லது வெளிநாட்டிலிருந்து வந்தவர்களைச் சந்தித்தாலோ தமிழர்களுக்கு எதிராக நடந்துகொள்ளும் அரசின் மீதான புகார்ப்பட்டியல் தான் மனப்பாடமாக இருக்கிறதே!

“இராணுவத்தினரும் இங்கே இருக்கும்போது நாங்கள் என்னத்தைச் செய்ய முடியும்?... மக்களுடைய காணிகள் இன்னும் முழுமையாக அவர்களுக்கு வழங்கப்படாமலிருக்கும் சூழ்நிலையில் மாகாணசபை மக்களுக்கு என்னத்தைச் செய்ய முடியும்?... ஆளுநரையும் பிரதம செயலாளரையும் அரசு இன்னும் மாற்றாமல் வைத்திருக்கையில் நாங்கள் எந்தக் காரியமாவது செய்ய முடியுமா?...

காணி, பொலிஸ் அதிகாரங்களைத் தராமலிருக்கையில் மற்ற வேலைகளைச் செய்து மாகாண சபையை நடத்திக் காட்டினால், அப்படியே வேலைகளை செய்யட்டும் என்று எல்லோரும் விட்டு விடுவார்கள் அல்லவா? அரசு எங்களை செயற்பட விடுகுதில்லை என்று சர்வதேசத்திற்குக் காட்ட வேண்டாமா?...

இந்தியா எப்படியும் தலையிடத்தான் வேணும்... மோடி அரசு அதைச் செய்யாட்டில், ஐந்து வருடத்தில் மற்றொரு அரசு இந்தியாவில் வரும்தானே, அந்த அரசுக்கு எங்களது மக்களின் பிரச்சினைகளை போய் விரிவாக எடுத்துச் சொல்வோம்...

அவ்வளவு சொல்லியும் அவர்களும் தலையிடாவிட்டால் தான் என்ன? அமெரிக்காவில் ஒபாமா போய் மற்ற ஜனாதிபதி வருவதற்கான தேர்தல் வந்துவிடுமே...

அங்கு அடுத்த ஜனாதிபதியாக வரப்போகும் ஹிலாரி பெண் அல்லவா! நவநீதம் அம்மாவைப்போல் இலங்கை அரசின் செயல்களைக் கண்டித்துக் கருத்துக்களை உதிர்க்கும் தாய்மை உள்ளம் அவரிடமுமிருக்கும்...

ஆனால் தாயுள்ளங்களின் கண்டனத்துக்கு அஞ்சித் தன்னை மாற்றிக் கொள்ளக் கூடிய அரசல்லவே இலங்கை அரசு! எனவே ஜெனீவாவில் வரப்போகும் அமெரிக்கப் பிரேரணையில், சட்ட ரீதியாக இலங்கையை மடக்குவதற்கான சில வார்த்தைகளை சேர்த்து விடுவதற்கு நமது தேசிய ஒற்றுமை கிரிக்கெட் விளையாட்டு வீரர் சுமந்திரன் எம்.பி இருக்கிறார்...

அந்த மடக்கல் வார்த்தைகளை ஒவ்வொரு வருடமும் ஜெனீவாப் பிரேரணைகளில் அதிகப்படுத்தியபடியே வந்தால், தாமாக இயற்கை மரணம் அடைவதற்குள் மகிந்த மாட்டுப்படாமலா போவார்?...

மக்கள் இதையெல்லாம் தான் புரிந்துகொண்டபடி காத்திருக்கிறார்கள்... ஆனால் தேர்தல் மேடையில் இவ்வளவு விளக்கங்களையும் சொல்லிக் கொண்டிருக்கத் தேவையில்லை...

'பிரபாகரன் ஒரு மாவீரர்' என்று உணர்ச்சிகரமாக முழங்கிச் சொன்னால் போதும் மற்றதை யெல்லாம் அவர்கள் சரியாகவே புரிந்து கொள்வார்கள்!"

- ஆசிரியர்

# தேர்தல் முறைப்பாடுகளைப் பதிய மத்திய நிலையங்கள் அமைப்பு

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலான தேர்தல் முறைப்பாடுகளை பதிவு செய்வதற்கான மத்திய நிலையங்களை நிறுவுவதற்கான திட்டமொன்றை தேர்தல்கள் செயலகம் அறிமுகப்படுத்தவுள்ளது.

இந்த மத்திய நிலையங்கள் மாவட்ட அளவில் செயற்படும் என்றும் எதிர்வரும் திங்கட்கிழமையிலிருந்து இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ளும் பொருட்டு, ஒவ்வொரு மையங்களுக்கும் 10 பொலிஸ் உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின்றனர் என்று பொலிஸ் மா அதிபரிடம் தேர்தல்கள் ஆணையாளர் கோரிக்கை விடுத்துள்ளார். மேலும் இந்த 10 பேர் அடங்கிய பொலிஸ் குழுவுக்கு உபபொலிஸ் பரிசோதகர் அல்லது பொலிஸ் தலைமை அதிகாரி தலைமை வகிக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

# ஜனாதிபதித் தேர்தல் நீதியானதாக அமையுமா?

## சந்தேகம் கொள்ளும் சரத்

(கொழும்பு)

ஜனவரி மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் நீதியானதாக, சுதந்திரமானதாக அமையாது என முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா கருத்து தெரிவித்துள்ளார்.

சர்வதேச சஞ்சிகையொன்றிற்கு கருத்து தெரிவிக்கையிலேயே இதனை குறிப்பிட்டுள்ள அவர், தேர்தலை கண்காணிக்கும் வெளிநாட்டு அமைப்புகள், வாக்குகள் நேர்மையான முறையில் எண்ணப்படுவதை உறுதிசெய்ய வேண்டும், வாக்குப் பெட்டிகளுக்கான அச்சுறுத்தலை முடிவிற்கு கொண்டு வரவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடு, கடந்த சிலவருடங்களில் கண்டுள்ள வீழ்ச்சி குறித்து விரக்தி வெளியிட்டுள்ள அவர், வேறு வழியில்லை. இந்த நிலைதொடர அனுமதிக்க முடியாது என குறிப்பிட்டுள்ளார்.

வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக் கூறுதலை உறுதி செய்யுமாறு பிரிட்டன் உட்பட உலகநாடுகள் ஜனாதிபதிக்கு மேலும் அழுத்தத்தை கொடுக்கும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தான் சிறையில் அடைக்கப்பட்டது, ஜனாதிபதியால் பகிரங்கமாக அவமானப்படுத்தப்பட்டது குறித்தும் அவர் கருத்துதெரிவித்துள்ளார்.

நான் சிறையில் தனிமையில் அடைக்கப்பட்டேன், மாதத்திற்கு ஒரு முறை அரைமணித்தியாலம் மாத்திரம் எனது மனைவி என்னை பார்ப்பதற்கு அனுமதித்தனர், அழுத்தங்கள் காரணமாக நான் அடிபணிவேன் என அவர்கள் நினைத்தனர், எனது நிலம், வீடு, ஓய்வூதியம் என அனைத்தையும் பறித்தனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கும், அரசாங்கத்திற்கும் நாடு குறித்து எந்த நிகழ்ச்சி நிரலும் இல்லை. இலங்கை தனது அடையாளத்தை மீள பெறுவதற்கான இறுதிவாய்ப்பிது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வாழ்க்கைத் தரத்தை உயர்த்த சுயதொழில் ஊக்குவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் வவுனியா மாவட்டத்தில் பாடசாலை செல்லும் வறிய மாணவர்கள் உள்ள குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடன் 16 பேருக்கு தலா 36000 ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சுயதொழில் ஊக்குவிப்பு நன்கொடைகள் யுனிசெவ் நிறுவனத்தின் நிதியில் 2012 ஆம் ஆண்டில் மாவட்டத்திலுள்ள 4 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் 46 பேருக்கும் 2013 ஆம் ஆண்டில் 66 பேருக்கும் வழங்கப்பட்டது.

இந்த நன்கொடையைக் கொண்டு கால்நடை வளர்ப்பு சிறுகடை, சிறுகைத்தொழில் போன்ற தொழில் முயற்சிகளை பயனாளிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் இந்த சுயதொழில் நடவடிக்கைகளின் முன்னேற்றங்கள் தொடர்பாக காலத்துக்குக் காலம் மீளாய்வு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

# ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் நடக்கப் போவது என்ன?

## எதிர்வுகூறும் விதுரவிக்கிரமநாயக்க

எதிர்வரும் ஜனவரி 8 ஆம் திகதி நடத்தப்பட உள்ள ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் இலங்கை சென்றுகொண்டிருக்கும் பயணம் முற்றாக நல்ல நிலைமைக்கு வரும் அல்லது முற்றாக கெடுதியான நிலைமைக்கு செல்லக் கூடும் என ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக தெரிவானாலும் மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஜனாதிபதியாக தெரிவானாலும் திருடர்களுடன் ஆட்சியை முன்னெடுக்க வேண்டும் என்பதால், தேர்தல் முறையில் மாற்றங்களை செய்யவில்லை என்றால், நாடு முற்றாக அழிவை நோக்கி தள்ளப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் மைத்திரிபால சிறிசேன, ராஜித சேனாரத்ன ஆகியோர் அரசாங்கத்தில் இருந்து விலகிய நேரத்தில் தன்னிடம் கோப்புகள் இருப்பதாக ஜனாதிபதி கூறியது தவறானது.

எந்த நபராவது தவறு செய்திருந்தால், அவர் அரசாங்கத்தில் இருக்கும் போதே அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் விதுர விக்ரமநாயக்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# நியாயத்தை எடுத்துச் சொல்வதற்கு ஐ.நா.வில் செலவழியும் நேரம், பணம்

## அமைச்சர் பீரிஸ் கவலை

(கொழும்பு)

தன்னை நியாயப்படுத்துவதற்காக இலங்கை ஐ.நா.வில் ஆறு மாதத்திற்கு ஒருமுறை நேரத்தையும், பணத்தையும் செலவிடுகிறது. இவ்வாறு கவலை தெரிவித்துள்ளார் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ். காலியில் நேற்று ஆரம்பமான கடற்பிராந்திய பாதுகாப்பு தொடர்பான சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

சட்டவிரோத ஆட்கடத்தலுக்கு எதிராக கூட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும். பயங்கரவாதத்திற்கும் கடற்கொள்ளைக்கும் தொடர்பிருப்பது தெரியவந்துள்ளது. குறிப்பாக, இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின்போது விடுதலைப்புலிகள் பல கப்பல்களை கடத்தியுள்ளனர்.

அரசியல் நோக்கங்களை அடைவதற்கு பயங்கரவாதத்தை பயன்படுத்தும் பொருட்டு உலகின் எந்த நாடும் பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதியுதவியையோ அல்லது பயிற்சியையோ வழங்கக்கூடாது.

மனித உரிமைகள் தொடர்பாக இலங்கை ஐ.நா.வில் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை தன்னை நியாயப்படுத்த வேண்டியுள்ளது. இதற்காக நேரத்தையும், பணத்தையும் அதிகமாகச் செலவிட வேண்டியுள்ளது என்றார்.

# இனியாவது எமது மக்களை முன்னேற்றும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சிந்திக்க வேண்டும்

## நாடாளுமன்றத்தில் 2015 வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆற்றிய உரை



**கௌரவ சபாநாயகர் அவர்களே!**

இயற்கையினாலும், மனிதனாலும் ஏற்படுத்தப்பட்ட பல சவால்களை எமது அரசாங்கம் வெற்றிகரமாகக் கடந்திருக்கிறது. சுனாமியினால் சின்னாபின்னமான கரையோரப் பிரதேசங்கள் இன்று வழமைக்கு திரும்பியுள்ளன. மூன்று தசாப்த யுத்தம் முடிவுக்கு வந்தது மட்டுமல்ல, அதன் விளைவாக அழிந்து போயிருந்த உட்கட்டமைப்புகள் நவீன முறையில் மீள் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

அரசாங்க அதிபர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம், 2009 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை வடக்கின் அபிவிருத்திக்கு எனப் பாரிய தொகையான ரூபா. 290,271 மில்லியன் அரசினால் செலவிடப்பட்டுள்ளது.

யுத்தம் முடிவுற்றதிலிருந்து அரசாங்கத்தின் செயற்திட்டங்கள் பல்வேறுபட்ட திசைகளிலும் நோக்க வேண்டி இருந்தது.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் உட்கட்டமைப்புகளை மீளமைப்பது, 12,000 முன்னாள் புலிகளுக்கு மறுவாழ்வளித்து அவர்களை மீண்டும் சமூகத்தின் கட்டமைப்பிற்குள் இணைத்துக் கொள்ளல், உள்ளூரில் இடம்பெயர்ந்த 295,000 மக்களை மீளக் குடியமர்த்தல், சமூக மற்றும் ஆட்சி முறையை மீளக் கொணர்தல்,

இப் பிரதேசங்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பல், மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தல், குறிப்பாக மீன்பிடி மற்றும் விவசாயச் சமூகங்கள் மற்றும் சுய தொழிலிலும் சிறு கைத் தொழிலிலும் ஈடுபட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தல் போன்ற விடயங்கள் அரசாங்கத்தின் முன்னுரிமை பெற்றவையாகக் காணப்பட்டன.

இப்பிரதேசங்களின் அபிவிருத்தி வெகுவிரைவில் தேசிய மட்டத்தின் வளர்ச்சிக்கு சமமானதாக அமையும்.

அதேவேளை அரசாங்கமானது மின்வலு அபிவிருத்தி, துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி, அதிவேக பெருந்தெருக்கள், வீதி வலையமைப்பு மேம்பாடு, பாலங்கள், புதிய நீர்ப்பாசன திட்டங்கள், நீர் வழங்கல் திட்டங்கள் போன்றவற்றில் விசேட கவனஞ் செலுத்தி நாட்டின் அபிவிருத்திப் போக்கிற்கு அதியுயர் முன்னுரிமை வழங்கியுள்ளது.

கல்வி, சுகாதாரம் மற்றும் கிராமிய பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றுக்கும் அதேயளவு முக்கியத்துவம் வழங்கப் பட்டுள்ளது.

இவை அனைத்துமே பாதகமான சர்வதேச பொருளாதார சூழ்நிலைகளுக்கு மத்தியிலும், நாட்டிற்கெதிராக மேற்குலக நாடுகள் மேற்கொள்ளும் அவதூறு பிரசாரங்களுக்கு மத்தியிலும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன. வளமிக்க அபிவிருத்தியை நோக்கிய பாதையில் நாம் பயணிக் கிறோம்.

நடுத்தர வருமான நாடாக இலங்கை உயர்ந் துள்ளது. வருடா வருடம் தனி நபர் வருமானம் அமெரிக்க டொலர் 4000 மாக உத் தேசிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடங்களை விட இது பல மடங்கு அதிக மானது.

பயங்கரவாதத்திற்கு முடிவு கட்டிப் பொருளாதார வளர்ச்சிக்கு உகந்த நிலைப்பாடுகளை உருவாக்கியதும், அரசாங்கத்தின் நிதிக் கொள்கைகளும் தான் இப் பொருளாதார வளர்ச்சிக்கு தூண்டு காரணிகளாக அமைந்தனவாகும்.

புனருத்தாரணம், மீள் ஒருங்கிணைப்பு மற்றும் சமரசம் எனக் கட்டுக் கோப்பாகக் கடந்த கால வடுக்களை நீக்கி நாட்டை வளப்படுத்தி, நீண்ட கால நோக்கிலான சமாதானத்தைக் கட்டியெழுப்பும் காத்திரமான பணியில் அரசு செயற்படும் அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நண்பர்களும் அவர்களுடைய புலம்பெயர் நிதியாளர்களும் விரோதத்தை விதைத்துத் தமது அரசியல் வாழ்வினைத் தக்க வைப்பதற்காகத் தமிழர் சமுதாயத்தைப் பிரித்துத் தனிமைப்படுத்தவே முயற்சிக் கின்றனர்.

வட மாகாண சபையில் என்ன நிகழ்கிறது எனப் பார்க்கும்படி கூட்டமைப்பின் தலைவரை நான் வேண்டிக் கொள்ள விரும்புகின்றேன். கடந்த ஒரு வருட காலத்தில் திறமையற்ற, தகுதியற்ற சபையாகவே மாகாண சபை நிரூபிக்கப்பட்டுள்ளது.

கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர் களுக்கு ஒன்றிணைந்து செயற்பட்டு நிர்வாகத்தை நடாத்தத் தெரியவில்லை. கூட்டுக் கட்சிகள் தமக்குள் முரண்பட்டுக் கொள்கின்றன. இவற்றையெல்லாம் மறைத்து மக்களைத் திசை திருப்பக் கூட்டமைப்பினர் அரசாங்கத்தில் பிழை பிடிப்பதைத் தவிர வேறு வழியில்லை அவர்களுக்கு.

இந்த ஒரு வருடமாக அடுக்கடுக்காகத் தேவையற்ற தீர்மானங்களை எடுத்து "தீர்மான மாகாண சபை" எனப் பெயர் பெற்று விட்டது வட மாகாணசபை. அமைச்சர்களுக்கு தமது அமைச்சுக்களை எப்படி நடாத்துவது எனத் தெரியவில்லை. சமுதாயத்தின் நன்மைக்கென ஒதுக்கப்படும் நிதியினை எப்படி உபயோகிப்பது என்ற தெளிவில்லை.

அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 25.17 சதவீதம் மட்டுமே செப்டெம்பர் மாதம் வரை செலவழித்துள்ளார்கள் என நிதி அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் அபிவிருத்தி முன்னெடுப்புக்களைப் புறக்கணிப்பதன் மூலம், குறிப்பாக வடக்கின் 5 மாவட்டங்களிற்குமான மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டம், யாழ்ப்பாணத்திற்கான புகையிரத சேவை ஆரம்ப வைபவம், வடக்கின் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஸ்கூட்டர்கள் கையளிப்பு போன்ற வைபவங்களை பகிஸ்கரித்ததன் மூலம் எமது பிரதேசத்தின் அபிவிருத்தியிலும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதிலும் அவர்களுக்குள்ள அக்கறையின்மையினை கூட்டமைப்பினர் காண்பித் துள்ளனர்.

மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஸ்கூட்டர்கள் கையளிப்பு விழாவினைப் புறக் கணிக்குமாறு அரசாங்க உத்தியோகத்தர் களிடம் கூறி விட்டு, மாகாண முதலமைச்சரும் அமைச்சர்களும் சபையின் தலைவரும் தமது அலுவலர்களை ஆளுநரிடம் அனுப்பித் தமக்குரிய புத்தம் புதிய வாகனங்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர். மீண்டும் அவர்களது சுயநல அரசியல் தந்திரோபாயம் இதன் மூலம் தெட்டத் தெளிவாகிறது.

**மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஸ்கூட்டர்கள் கையளிப்பு விழாவினைப் புறக்கணிக்குமாறு அரசாங்க உத்தியோகத்தர்களிடம் கூறி விட்டு, மாகாண முதலமைச்சரும் அமைச்சர்களும் சபையின் தலைவரும் தமது அலுவலர்களை ஆளுநரிடம் அனுப்பித் தமக்குரிய புத்தம் புதிய வாகனங்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.**

**கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர்களுக்கு ஒன்றிணைந்து செயற்பட்டு நிர்வாகத்தை நடாத்தத் தெரியவில்லை. கூட்டுக் கட்சிகள் தமக்குள் முரண்பட்டுக் கொள்கின்றன. இவற்றையெல்லாம் மறைத்து மக்களைத் திசை திருப்பக் கூட்டமைப்பினர் அரசாங்கத்தில் பிழை பிடிப்பதைத் தவிர வேறு வழியில்லை அவர்களுக்கு.**

ஜனாதிபதி அவர்களின் கீழே உள்ள நிறுவகங்கள் தொடர்பாகவும் சில வார்த்தைகளை கூற விரும்புகிறேன். மும்மொழி இலங்கைக்கான ஜனாதி-பதி விசேட அணியின் நோக்கம் இன்னும் விஸ்தரிக்கப்படல் வேண்டும். அரசியலமைப்பிலே 16வது திருத்தச் சட்டத்தை முழுமையாக முன்னெடுக்கும் அதிகாரம் அதற்கு கொடுக்கப்படல் வேண்டும்.

பல அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசினால் நிர்வகிக்கப்படும் கொம்பனிகள் அரசின் மொழிக் கொள்கையினைப் பின் பற்றுவதில்லை.

ஜனாதிபதி விசேட அணியின் ஆங்கிலம், தொழில்நுட்பம் மற்றும் இலங்கை (கணணி) போன்ற திட்டங்கள் பாராட்டுக் குரியவை. கடந்த இரு தசாப்தங்களில் உலகம் மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் இந்த தகவல் தொழில் நுட்ப யுகத்தில் தொழில்நுட்ப வளர்ச்சியின் ஊடாக நாட்டின் சமூக ஒருங்கிணைப்பு, சமாதானம், பொருளாதார வளர்ச்சி மற்றும் வறுமை குறைப்பு எனப் பயணிக்கிறது நம் அரசாங்கம்.

நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப் படும் 741 கிராமிய தொலைத்தொடர்பு நிலையங்களில் 20 சதவீதம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிறுவியமைக்காக ஜனாதிபதிக்கு நன்றிகளைத் தெரிவிக்கிறேன்.

யாழ் தேவி புகையிரத சேவையின் உத்தியோகபூர்வ ஆரம்ப வைபவத்திற்கு ஜனாதிபதி யாழ்ப்பாணம் வருகை தந்த போது அவரை வரவேற்கும் முகமாக பளை முதல் யாழ்ப்பாணம் வரை புகையிரத நிலையங்களில் மாணவர்கள் ஆரவாரமாகக் கூடியிருந்தனர்.

அதற்கு முன்பு புகையிரதத்தைக் கண்டிருக்கிறார்களா என நான் அவர்களைக் கேட்ட போது அது தான் முதற் தடவை என்று பலர் கூறினர்.

தொடர்பாடல், தொழில்நுட்பம் என உலகம் அதி வேகமாகப் பயணித்து வியாபித்து நிற்கும் இந்த யுகத்தில் ஒரு புகையிரதத்தை கூடத் தெரியாமல் எம் இளைய சமுதாயம் இருக்க வேண்டும் என விரும்புகிறார்கள் எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நண்பர்கள்.

வரவு செலவுத்திட்ட விவாதத்திலும் சரி, குழு நிலை விவாதத்திலும் சரி, பேசிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் வழமைபோல் உணர்ச்சியூட்டக் கூடிய வகையிலும் கற்பனாவாதத்திலும் உண்மைக்குப் புறம்பான தகவல்களை இந்தச் சபைக்கு வழங்கி தவறான வழி நடத்தலைக் காட்டினார்கள்.

சமீபத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தேசிய மகாநாட்டில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் அவர்கள், "கடந்த காலத்தில் கிடைத்த பல சந்தர்ப்பங்களை எமது வெற்றுக் கோசங்களாலும் கற்பனாவாதங் களாலும் நாம் இழந்திருக்கின்றோம். இனியும் நாம் அப்படி இருந்து விடக்கூடாது" என்று தெரிவித்திருந்தார்.

மலையகத்தைப் பற்றியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பேசுகின்றார்கள். அண்மையில் மலையகத்தில் நடந்த மண்சரிவு அனர்த்தம் காரணமாக உண்மையாகவே அவர்கள் கவலைப்படுவதாக இருந்தால் அது வரவேற்கத்தக்கது.

மலையகத் தலைவர்கள் தங்களுடைய இணக்க அரசியல் மூலமாக அந்த மக்கள் இழந்து போயிருந்த பிரஜாவுரிமை, அரசியல் உரிமைகளைப் பெற்றுக் கொடுத்ததோடு மட்டுமல்லாது, அவர்களது வாழ்வாதாரப் பிரச்சினைகள் பலவற்றையும் தீர்த்து அவர்களைமுன்னேற்றியிருக்கின்றார்கள். மேலும் அவர்கள் முன்னேற வேண்டியிருக்கின்றது.

மலையக மக்களைப் பற்றிய இந்தக் கூட்டமைப்பினரின் கவலை உண்மையாக இருந்தால், அவ்வாறே தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மக்களுடைய நலன்களையும் கருத்திலெடுத்து, அவர்களை முன்னேற்றுவதற்குரிய சரியான வழிமுறைகளைக் கையாள வேண்டுமென்று அவர்களை மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்கின்றேன்.

## ஜே.ஆர். இன் மரத்தை வெட்ட இனந்தெரியாதோர் முயற்சி

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன, பேராதனை தாவரவியல் பூங்காவில் நாட்டிவைத்த வெள்ளை சந்தன மரத்தை வெட்டி அகற்றுவதற்கு இனந்தெரியாதோர் முயற்சித்துள்ளதாக பேராதனை பொலிஸார் தெரிவித்தனர்.

மரத்தில் இரண்டு இடங்களில் வெட்டு அடையாளங்கள் இருப்பதாகவும் மரத்தை வெட்டுவதற்கான முயற்சி கடந்த 22 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது என்றும் தெரிவித்த பேராதனை பொலிஸார் அந்த முயற்சி கைகூடவில்லை என்றும் தெரிவித்தனர்.

பேராதனை தாவரவியல் பூங்காவின் மையப்பகுதியில் நாட்டிவைக்கப்பட்ட இந்த மரத்தின் சுற்றளவு 7 அங்குலம் என்று தெரிவித்த பூங்காவின் பணிப்பாளர் நாயகம் டி.எஸ்.ஏ.விஜயசுந்தர, வெட்டுக்காயங்களினால் மரம் பட்டுப்போகாது என்றும் அதனை காபபாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பேராதனை தாவரவியல் பூங்காவில் நாட்டப்பட்டிருந்த வெள்ளைநிற சந்தன மரங்களில் இரண்டு இரண்டுவருடங் களுக்கு முன்னர் இனந்தெரியாதோரினால் வெட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வெள்ளை நிற சந்தனம் ஒரு கிலோ கிராமின் சந்தைப் பெறுமதி 5,000 ரூபாவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதியாக மைத்திரி தெரிவானால் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படும்

### எச்சரிக்கிறார் ஞானசாரதேரர்



பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்று பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞான சார தேரர் தெரிவித்துள்ளார். சிங்கள ஊடகமொன்றுக்கு அவர் அளித்துள்ள நேர்காணலில், நாட்டுக்கு எதிராக செயற்படும் எதிரி சக்திகள் குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். தேசிய பாதுகாப்பு தொடர்பில் நிலவி வரும் அச்சுறுத்தல்கள் குறித்து அம்பலப்படுத்தப்படும்.

நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் அச்சுறுத்தல்கள் குறித்து மக்களை தெளிவுபடுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளபபடும். பொது வேட்பாளர் ஐரோப்பிய நாடுகளிடம் பணம் திரட்டி வருகின்றார். வடக்கில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றுவதற்கு முயற்சிப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன. தேர்தலில் மைத்திரிபால வெற்றியீட்டினால் முகாம்கள் அகற்றப்படலாம், இந்த சூழ்ச்சித் திட்டங்கள் குறித்து எதிர்காலத்தில் மக்களை தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிற்கு ஆதரவளித்த போதிலும் ஆளும் கட்சியின் தேர்தல் பிரசார மேடைகளில் ஏறி பிரசாரம் செய்யப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் அவசரப்பட்டு முடிவு எடுக்கோம்

### என்கிறார் மாவை

தமிழரின் உரிமைப் போராட்டம் முக்கியமான காலகட்டத்தில் இருப்பதனால்தான் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவசரப்பட்டு முடிவெடுக்காமல் உள்ளது. பொது எதிரணி, அரச தரப்பு வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களை உன்னிப்பாக அவதானித்த பின்னரே யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் கூட்டமைப்பு தீர்க்கமான முடிவொன்றை எடுக்கும். - இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளருமான மாவை சேனாதிராஜா எம்.பி. தெரிவித்தார்.

ஜனாதிபதித் தொடர்பில் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், புத்திஜீவி கள் மற்றும் பொது மக்களுடன் சில தினங்களில் தொகுதி ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துரையாடல்களை ஆரம்பிக்கவுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, ஜனா திபதித் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுடன் கட்சியின் தலைமை தொடர்ந்து பேச்சு களை நடத்தும் என்றும் அவர் தெரிவித்தார்

## சர்வதேச நீதிமன்றில் ஜனாதிபதியை நிறுத்தவே நிறைவேற்று அதிகார ஒழிப்பு கோரிக்கை

### அரசாங்கம் தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை யுத்தக் குற்றச்சாட்டுடன் தொடர்பு படுத்தி சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் முன்னிலைப் படுத்துவதற்காகவே நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்க முயற்சிக்கப்படுவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக ஜனாதிபதியை தோல்வியடையச் செய்வதற்கும், நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாக கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இரத்மலானையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான சுரேஷ் என்பவர் அல் ஜசீரா தொலைக்காட்சியில் தோன்றி நிறைவேற்று ஜனாதிபதியாக செயற்படுகின்ற மகிந்த ராஜபக்ஷவை தோல்வியடையச் செய்ய வேண்டும் என தெரிவித்திருந்தார்.

நிறைவேற்று ஜனாதிபதி என்ற முறையில் அவருக்கு நீதிமன்றமொன்றிற்கு பதிலளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற நிலைமை உள்ளது.

அதனாலேயே, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தோற்கடித்து நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கி, அவரை சர்வதேச நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி மரண தண்டனை பெற்றுக்கொடுப்பதற்கு புலம்பெயர்ந்த தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் முயற்சிக்கின்றனர்.

இதற்கான முயற்சிகள் தற்போது தீவிரமாக இடம்பெற்று வருகின்றமையை சர்வதேச சமூகம் நன்றாக அறிந்துள்ளதாகவும் அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் தெரிவித்தார்.

## சுயாதீனமான ஜனாதிபதித் தேர்தல் நடாத்தப்பட வேண்டும்



நீதியானதும் சுயாதீனமானதுமான முறையில் ஜனாதிபதித்தேரதல் நடாத்தப்பட வேண்டுமென கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.

நீர்கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசியல் தலைவர்கள், ஆட்சியாளர்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்களிடம் அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

முறைகேடான வகையில் தேர்தல் நடாத்தப்படக் கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

பாப்பாண்டவர் முதலாம் பிரான்ஸிஸின் இலங்கை விஜயத்தைப் பயன்படுத்தி தங்களது பிரசாரத்தை எந்தத் தரப்பினரும் மேற்கொள்ளக் கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைதியான முறையில் மக்கள் வாக்களிப்பதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டுமென அவர் கோரியுள்ளார்.

தேர்தலுக்கு முன்னரும், தேர்தல் பிரசார காலத்திலும், தேர்தல் தினத்திலும், தேர்தலுக்கு பின்னரும் வன்முறைகள் இடம்பெறுவதனை அனுமதிக்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசாரங்களின் போது அடக்குமுறைகளை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அரசு பற்றிய கோப்புகளை பகிரங்கப்படுத்துவதற்கு தயார்

### கூறுகிறார் சம்பிக்க



(கொழும்பு)

அரசாங்கத்தின் கோப்புகள் தம்மிடமும் இருப்பதாகவும் அவற்றை தாம் பகிரங்கப்படுத்தப் போவதாகவும் ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளரான முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் இருந்து அண்மையில் வெளியேறியவர்கள் பற்றிய கோப்புகள் தன்னிடம் இருப்பதாகவும் எனினும் தான் அவற்றை பகிரங்கப்படுத்த போவதில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்த நிலையில் சம்பிக்க ரணவக்க இதனை கூறியுள்ளார்.

பெற்றோல் விலைகள் மூலம் நிதியமைச்சு பொதுமக்களிடம் பணத்தை கொள்ளையிட்டு வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எரிபொருள் மற்றும் மின்சாரத்திற்காக பெறப்படும் வரிகள் புதிய பெருந்தெருக்களை நிர்மாணிக்கவும் அவற்றை பராமரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது.

முச்சக்கர வண்டி சாரதிகள், மோட்டார் சைக்கிள்களை ஓட்டுபவர்கள் எரிபொருள் கட்டணங்களுடன் அதிவேக நெடுஞ்சாலைகளை நிர்மாணிக்க வரிகளை செலுத்திய போதிலும் அவரகள் அந்த நெடுஞ்சாலைகளை பயன்படுத்துவதில்லை.

நிலக்கரி ஒப்பந்தம் தொடர்பான அரசாங்கம் எனக்கு எதிராக குற்றச்சாட்டை சுமத்தியது. அது பற்றிய தகவல்களை நான் வெளியிட ஆரம்பித்த போது அரசாங்கம் அந்தக் குற்றச்சாட்டை விலக்கிக்கொண்டது.

எவரும் கோப்புகளை வெளியிட வேண்டியதில்லை. நாம் அவர்களை வெளியேற்றுவோம். பாரிய மெகா ஒப்பந்தங்களை செய்தவர்களை எங்களால விட்டு விட முடியாது எனவும் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

## அகற்றப்படாத பிரசார பதாகைகள் சட்ட நடவடிக்கை எடுக்க தீர்மானம்

### ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவிப்பு



சட்டவிரோதமான முறையில் வைக்கப்பட்டுள்ள தேர்தல் பிரசாரப் பதாகைகளை அகற்றாத பொலிஸ் நிலையங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கபபடும் என பவ்ரல் அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்ற சுற்றாடல் சட்டங்களுக்கு புறம்பான வகையில் நாடு முழுவதிலும் தேர்தல் பிரசார சுவரொட்டிகள் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கையை தடுத்து நிறுத்தாத பொலிஸ் நிலையங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பதாகைகளை வைப்பதற்கு வரி அறவீடு செய்து அதற்கான வரி இலக்கமொன்று வழங்கப்பட வேண்டும். எனினும் அநேகமான பதாகைகள் அவ்வாறு உள்ளூராட்சி மன்ற சட்டங்களுக்கு அமைய வைக்கப்படவில்லை.

இதனால் பாரியளவில் வரி வருமானம் இழக்கப்பட்டுள்ளதுடன் சுற்றாடலுக்கு பாதிப்பும் ஏற்பட்டுள்ளது.

பதாகைகள், சுவரொட்டிகளை அகற்றும் அதிகாரம் பொலிஸாருக்கு உள்ள போதிலும், அவர்கள் தமது கடமையை உரிய முறையில் செய்வதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

செய்தியாளர் சந்திப்பொன்றில் பங்கேற்ற போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.





உயரப்புலம் அடைக்கல நாயகி முன்பள்ளியின் ஒளிவிழா நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது நிகழ்வில் ஆனைக்கோட்டை றோ.க. த.க.பாடசாலை அதிபர் மங்கள விளக்கேற்றுவதையும், முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறுவதையும் காணலாம். (51)

## விபசாரத்தில் ஈடுபட்டவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சாவகச்சேரி பகுதியில் விருந்தினர் விடுதியொன்றில் விபசாரத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெண்ணொருவர் உட்பட ஏழு பேரையும் தொடர்ந்தும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் செ.கணபதிப்பிள்ளை, கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

விபசார விடுதியிலிருந்து, பம்பலப்பிட்டியைச் சேர்ந்த 32 வயதுடைய பெண், விடுதி முகாமையாளர், விடுதி உதவியாளர், பெண்ணை விபசாரத்துக்கு அழைத்து வந்தவர் மற்றும் மூன்று வாடிக்கையாளர்கள் ஆகியோர் கடந்த 5 ஆம் திகதி கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து, குறித்த விருந்தினர் விடுதி மற்றும் அருகிலிருந்த மேலுமொரு விருந்தினர் விடுதி என்பன நீதிமன்ற உத்தரவுக்கமைய சாவகச்சேரி நகர சபையால் சீல் வைக்கப்பட்டன.

சந்தேகநபர்கள் ஏழு பேரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது அவர்களை நீதவான் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வைத்திய சேவைகள் வழங்கப்படும்

வவுனியாவில் தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு நடமாடும் வைத்திய சேவைகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் பெய்துவரும் மழை காரணமாக இடம்பெயர்ந்து தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள தமக்கு போதுமான மருத்துவ வசதிகள் கிடைக்கவில்லை என மக்கள் முறையிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. வவுனியா புதிய வேலர்குளம், மகிழங்குளம் கிராமங்களில் இடம்பெயர்ந்து தற்காலிக நலன்புரி நிலையங்களில தங்கியுள்ளவர்களை நேரில் சந்தித்து பார்வையிட்ட போதே இவ்வாறு தெரிவித்திருந்தார்.

## வலி.கல்வி வலய கட்டடத் தொகுதியில் போதிய வசதிகள் எதுவும் இல்லை

### வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் கல்வி வலயத்தின் கடமைகளை மேற்கொள்வதற்கு, கல்வி வலய கட்டடத்தொகுதியில் போதிய இடவசதி இல்லாமல் இருப்பதாக வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா, கடந்த சனிக்கிழமை தெரிவித்துள்ளார்.

வலிகாமம் கல்வி வலயத்தின் ஏற்பாட்டில், வலிகாமம் கல்வி வலயத்தில் சாதனைகள் நிகழ்த்திய அதிபர்கள், ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.



இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்து கூறுகையில்,

வலிகாமம் கல்வி வலயம் அமைந்துள்ள கட்டடத்தொகுதியிலேயே வடமாகாண சபையின கல்வித் திணைக்களமும் அமைந்துள்ளது. இந்த அலுவலகத்தை வேறு இடத்துக்கு இடமாற்றம் செய்வதன் மூலம் வலிகாமம் கல்வி வலயத்துக்கு போதிய இடவசதிகளை பெற்றுக்கொள்ள முடியும். இது தொடர்பில் இங்கு அமர்ந்திருக்கும் பாரம்பரிய கைதொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை முன் வைக்கின்றோம்.

எமது கல்வி வலயம் இலங்கையில் அனைத்து பாகத்தினரும் திரும்பிப் பார்க்கும் வகையில விளையாட்டுத்துறையிலும் கல்வித் துறையிலும் சாதனைகள் படைத்து வருகின்றது என கல்விப்பணிப்பாளர் மேலும் கூறினார்.

## கலாசார பேரவையின் இலக்கிய விழா மன்னாரில்

(மன்னார்)

மன்னார் பிரதேச கலாசாரப் பேரவை ஏற்பாடு செய்திருந்த மன்னார் பிரதேச இலக்கிய விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

முற்பகல் 10 மணியளவில் மன்னார் பஸார் பகுதியில் உள்ள தந்தை செல்வா நினைவுச்சிலைக்கு முன்பாக விருந்தினர்கள் மாலை அணிவிக்கப்பட்டு மங்கள வாத்திய இசையுடன் மன்னார் நகர சபை மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

மன்னார் நகர சபை மண்டபத்தின் விமலன் ஆசிரியர் அரங்கில் மன்னார் பிரதேச செயலாளர் கே.எஸ்.வசந்தகுமார் தலைமையில் இந்நிகழ்வுகள் ஆரம்பமாயின.

குறித்த நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக வடமாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரன் சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் மற்றும் விசேட விருந்தினர்களாக மன்னார் பிரதேச சபை தலைவர் மாட்டீன் டயஸ் மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் அருட்தந்தை தமிழ்நேசன் அடிகளார் தள்ளாடி 54 ஆவது படைப்பிரிவு அதிகாரி மேஜர் ஜெனரல் கே.எம்.யு. விஜயரத்ன மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அஜந்த றொட்ரிகோ மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளர் எம்எம்சியான தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வன்னி மாகாண பணிப்பாளர் என்.எம்.முனவ்பர் நானாட்டான் பிரதேச செயலாளர் பரமதாஸ் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.



கலாசார நிகழ்வுகள் நடனம் சிறப்பு விவாதங்கள் ஆகியவை இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## முரசின் இன்றைய பலன்

(02.12.2014 செவ்வாய்க்கிழமை)

ஜய வருஷம் கார்த்திகை மாதம் 16 ஆம் திகதி.

ஏகாதசி / சித்தாமிர்தம்.

ரேவதி நட்சத்திரம் பின்னிரவு 01.20 வரை. பின் அஸ்வினி.

இராகு காலம 03.15 - 04.45 வரை. சுபநேரம 10.45 - 12.15 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
நோய் கட்டுப்படுத்த உணவில் கவனமெடுத்தல், வீட்டுப் பிரச்சினைகளால் அமைதிகெடல்.

**ரிஷபம்**
உதவிகேட்டு வந்த சகோதரருக்கு உதவ பின்நிற்றல், நியாயத்தை எடுத்துக் கூறியதால் சுமுகநிலை ஏற்படல்.

**மிதுனம்**
விவாகம் நிறைவேறிய பின் தரகுக்கூலியில் சிக்கல் ஏற்படல், குழப்பத்தை ஏற்படுத்தியவருக்கு எடுத்துக் கூறல்.

**கடகம்**
பணியில் சிறந்த பெயரும் புகழும் கைகூடல், தாயாரின் புத்திமதியை கேட்டதால் துயர் அற்றுப் போதல்.

**சிம்மம்**
பய உணர்ச்சி அற்றுப்போதல், திருட்டுப்போன வாகனம் கிடைகப்பெறல்.

**கன்னி**
பதவி முன்னேற்றம் கிட்டும், நட்புரீதியில் பிறரைக்கவர்ந்து காரிய சித்திபெறல்.

**துலாம்**
ஆலய கடமைகளில் பதவி கிட்டல், உறவினைப் பேணுவதால் நன்மை கிட்டுதல்.

**விருச்சிகம்**
கல்விப் புலத்தில் சிறந்து விளங்க முயற்சித்தல், அநாவசியத்தலையீட்டினால் துயர் வரலாம்.

**தனுசு**
வெளியூர் பயணம் தடையாக அமையும், அரசியல் பற்றிய விமாசனத்தால் பிரச்சினை ஏற்படல்.

**மகரம்**
சத்திர சிகிச்சை கைவிடல், பணத்தட்டுப்பாடு ஏற்படல், வெளிநாடு செல்லும் யோகம் ஏற்படல்.

**கும்பம்**
சக ஊழியர்களின் ஒத்துழைப்பினால் பணித்தேக்கம் அற்றுவிடல், உதவப்போய் பிரச்சினை ஏற்படல்.

**மீனம்**
புதிய முயற்சி தொடங்க உத்தேசித்தல், வாகனயோகங் கிட்ட சகோதரியின் உதவி கிடைத்தல்.

## விளையாட்டுச் செய்திகள்

# காலப்பந்தில் தலைகீழ் "பல்டி" தடை விதிப்பதற்குத் திட்டம்

(மும்பை)

கால்பந்து போட்டிகளில் கோல் அடித்தால் வீரர்கள் தலைகீழாக "பல்டி" அடித்து கொண்டாடும் "சோமர்சால்ட்" முறைக்கு, தடை விதிப்பது குறித்து 'பிபா' யோசித்து வருகிறது.

உலக கோப்பை கால்பந்து தொடரில் அதிக கோல் அடித்த வீரர்களில் முதலிடத்தில் (16) இருப்பவர் ஜேர்மனி வீரர் குளோஸ், (வயது-36). இவர் கோல் அடித்தவுடன் அப்படியே தலை கீழாக 'பல்டி' அடித்து கொண்டாடுவார்.

இதை அவ்வளவு எளிதில் யாரும் மறக்க முடியாது. தற்போது இந்தியாவில் நடக்கும் ஐ.எஸ்.எல்., தொடரின் முதல் போட்டியில் கொல்கத்தா, மும்பை அணிகள் மோதின.

இதில், தொடரின் முதல் கோல் அடித்தார் கொல்கத்தா வீரர் பிக்ரு. இதை விட, பிக்ரு "சோமர்சால்ட்" முறையில், 'டைவ்' அடித்தது தான் மைதானத்தில் இருந்த ஒட்டு மொத்த ரசிகர்களையும் கவர்ந்தது.

இதனிடையே, மிசோரமில் நடந்த மாநில அளவிலான பிரிமியர் லீக் கால்பந்து போட்டியில், பெத்லகேம் அணிக்காக கோல் அடித்த உற்சாகத்தைபீட்டர் ஜியாக்சங்ஜவாலா, (வயது-23), அப்படியே தலைகீழாக குதித்து கொண்டாடினார்.

அப்போது எதிர்பாராத விதமாக இவரது முதுகுத்தண்டு அடிபட, மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். ஐந்து நாட்களுக்குப் பின் சிகிச்சை பலன் தராத நிலையில், பீட்டர் மரணம் அடைந்தார்.

இறக்கும் நிலையில் தனது கண்களை தானம் செய்ய வேண்டும் என்ற வேண்டுகோள் விடுத்தார். தவிர, ஜேர்மனி வீரர் குளோஸ் மீது ஆர்வம் கொண்ட இவர், அவரைப் போல, பல்டி அடிக்க முயன்றதாக, இவரது சக வீரர் கூறியுள்ளார்.



இதையடுத்து, சோமர்சால்ட் கொண்டாட்டத்தை தடை செய்யும் முயற்சியில் சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு (பிபா) இறங்கியுள்ளதாக தெரிகிறது.

இதுகுறித்து பிபா மருத்துவக் குழுவின் தலைவர் டிஹுகே கூறுகையில், பீட்டர் மரணம் கவலை தருகிறது. கால்பந்து போட்டிகளில் பங்கேற்கும் வீரர்களின் உடல் நலத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவுள்ளோம். இது போன்ற சம்பவங்களை தடுக்க பிபா உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

## இந்திய–அவுஸ்ரேலிய டெஸ்ட் போட்டிக்கான திகதிகள் அறிவிப்பு

(சிட்னி)

இந்திய, அவுஸ்ரேலிய அணிகள் மோதும் டெஸ்ட் தொடருக்கான திகதிகளை கிரிக்கெட் அவுஸ்ரேலியா அறிவித்துள்ளது.

இரு அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் 4ஆம் திகதி நடக்கவிருந்தது. அவுஸ்ரேலிய வீரர் பிலிப் ஹியூக்ஸ் மரணமடைந்ததைத் தொடர்ந்து முதல் போட்டி ஒத்தி வைக்கப்பட்டது.

இந்நிலையில் முதல் டெஸ்ட் போட்டி வருகின்ற 9ஆம் திகதி அடிலெய்ட்டில் நடக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முதல் டெஸ்ட்:
டிசம்பர் 9-13, அடிலெய்ட்.

இரண்டாவது டெஸ்ட்:
டிசம்பர் 17-21, பிரிஸ்பேன்.

மூன்றாவது டெஸ்ட்:
டிசம்பர் 26-30, மெல்பேர்ன்.

நான்காவது டெஸ்ட்:
ஜனவரி 6-10, சிட்னி.

## மயிரிழையில் உயிர் தப்பிய பெக்காமும், புதல்வரும்



இங்கிலாந்து, ஹெர்ட்போர்ட்சைட்டில் இடம்பெற்ற கார் விபத்தில், இங்கிலாந்து கால்பந்தாட்ட அணியின் தலைவரான டேவிட் பெக்காமும் அவரின் புதல்வரும் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

ஆர்சனல் கால்பந்தாட்ட போட்டியை தொடர்ந்து, பெக்காம் தனது புதல்வரை அழைத்துச் செல்லும் வேளையிலே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

பெக்காமின் அவ்டி கார் மற்றுமொரு ஒரு வாகனத்துடன் மோதியதில் இவ் விபத்து சம்பவித்துள்ளது.

விபத்து பெரியளவில் ஏற்பட்டுள்ள போதும் காரின் வாயுப்பைகள் சரியாக செயற்பட்டமையினால் டேவிட் பெக்காம் மற்றும் அவரின் மூத்த புதல்வர் ப்ரூக்ளின் பெக்காம் ஆகியோர் எந்த வித காயமும் இன்றி தப்பித்துள்ளனர்.

ப்ரூக்ளின் பெக்கம் குறுகிய கால ஒப்பந்தத்தில் பிரீமியர் லீக் தொடருக்கான ஆர்சனல் அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

15 வயதான ப்ரூக்ளின் 16 வயதுக்குட்பட்ட ஆர்சனல் அணிக்காக ஏற்கனவே விளையாடி வருகின்றார். இவரின் இளைய சகோதரர்களும் ஆர்சனல் அணிக்காகவே விளையாடி வருகின்றனர்.

## ஹியூஸின் இறுதிச் சடங்கில் ஹோலி, ரவி சாஸ்திரி



மறைந்த அவுஸ்ரேலிய கிரிக்கெட் வீரர் பிலிப் ஹியூஸின் இறுதிச் சடங்கில், இந்திய கிரிக்கெட் கப்டன் விராட் ஹோலி, இந்திய அணியின் இயக்குநர் ரவி சாஸ்திரி, பயிற்சியாளர் பிளெட்சர் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

மேலும், நான்கு வீரர்கள் இறுதிச் சடங்கில் பங்கேற்க வாய்ப்பு இருப்பதாகவும், அவர்களது பெயர் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் கிரிக்கெட் போட்டியின்போது சீன் அபோட் வீசிய பவுன்சர் பந்து தலையில் தாக்கியதில் இறந்த பிலிப் ஹியூஸின் இறுதிச் சடங்கு, அவரது சொந்த ஊரான மாக்ஸ் விலேவில், நாளை நடைபெறவுள்ளது.

இதில் விராட் ஹோலி, ரவி சாஸ்திரி, பிளெட்சர் இந்திய அணி சார்பில் பங்கேற்கவுள்ளனர்

## ஒரு நாள் அணியில் மீண்டும் யுனிஸ்கான்

நியூசிலாந்திற்கெதிரான முதல் இரண்டு ஒரு நாள் தொடர்களில் விளையாடுவதற்கு பாகிஸ்தான் அணியில் யுனிஸ்கான் மீளவும் இணைக்கப்பட்டுள்ளார்.

அண்மைக் காலமாக தனது திறமையை வெளிப்படுத்த தவறிய யுனிஸ்கானுக்கு ஒரு நாள் அணியில் இடம் மறுக்கப்பட்டு வந்தது. ஏனினும் அவர் கடந்த 5 டெஸ்ட் போட்டிகளில் 717 ஓட்டங்களைக் குவித்ததை அடுத்து மீண்டும் அணியில் இடம்பிடித்துள்ளார். இதன்படி பாகிஸ்தான் அணி விபரம் வருமாறு:

ஒரு நாள் போட்டி: மொகமட் ஹபீஸ், அகமட் ஷேசாட், அசாத் சபீக், பில்வால் பாட்டி, ஷரீஸ் சொகைப், மிஸ்பா உல் ஹக் (கப்டன்), மொகமட் இர்பான், நசீர் ஜம்ஷெட், சர்பாஸ் அகமட் (விக்கெட் கீப்பர்), சகீட் அப்ரிடி, சொகைல் தன்வீர், உமர் அக்மல், உமர்குல், வாகப் றியாஸ், யுனிஸ்கான், சுல்பிகர் பாபர்.

ரி-20 வீரர்கள்: அகமட் ஷேசாட், அன்வர் அலி, மொகமட் ஹபீஸ், ஹரீஸ் சொகைல், மொகமட் இர்பான், அவைஸ் சியா, ரசாஹன், சாத் நசீம், சர்பாஷ் அகமட் (விக்கெட் கீப்பர்), சகீட் அப்ரிடி (கப்டன்), சொகைல் தன்வீர், உமர் அக்மல், உமர் குல், வகாப் றியாஸ்.

## வில்லியம்ஸன் கப்டன்

பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள், ருவென்ரி–20 போட்டிகளில் நியூஸிலாந்து அணியின் தலைவராக கேன் வில்லியம்ஸன் நியமிக்கப்பட்டார். பாகிஸ்தான் – நியூஸிலாந்து அணிகள் ஐக்கிய அரபு இராச்சியத்தில் கிரிக்கெட் தொடரில் விளையாடுகின்றன. இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடர் 1:1 என்ற கணக்கில் சமநிலையில் முடிந்தது. இரு அணிகளும் மோதும் ருவன்ரி–20 போட்டி எதிர்வரும் 4 ஆம் திகதி வியாழக்கிழமையும், ஒரு நாள் போட்டித் தொடர் 8 ஆம் திகதி திங்கட்கிழமையும் தொடங்குகின்றன. இந்தப் போட்டிகளுக்கான தலைவராக வில்லியம்ஸன் செயற்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. அணி விவரம்:– கேன் வில்லியம்ஸன் (அணித் தலைவர்), கோரி அண்டர்சன், பிரெளலின், அன்ரன் டேவிச், மாரட்டின் குப்தில், மட் ஹென்றி, ரொம் லதாம், மிற்சல் மக்கிளன்நாகன், நதன் மக்கலம், கெய்ல் மில்ஸ், அடம் மைல்ன், ஜேம்ஸ் நீசம், லுக் ரோஞ்சி, ரோஸ் ரெய்லர், டானியல் விற்றோரி.

## அன்புத் தம்பி ஹியூஸிற்கு கிளார்க்கின் பிறந்த நாள் அஞ்சலி



(அடிலெய்ட்)

கப்டன் மைக்கல் கிளார்க், மறைந்த அவுஸ்ரேலிய வீரர் பிலிப் ஹியூஸின் பிறந்த நாள் நினைவாக உருக்கமான அஞ்சலி கட்டுரை எழுதினார்.

பிலிப் ஹியுஸ் கடந்த 1988, நவம்பர் 30இல் பிறந்தார். நேற்று முன்தினம் இவருக்கு 26ஆவது பிறந்தநாள். இதற்கு முன் அவர் மரணத்தின் பிடியில் சிக்கியது சோகம் தான்.

இது குறித்து டெய்லி டெலிகிராப் பத்திரிகையில் அவுஸ்ரேலிய கப்டன் மைக்கல் கிளார்க் எழுதியுள்ள பிறந்த நாள் அஞ்சலி கட்டுரையில்: எனக்கு உடன் பிறந்த சகோதரர்கள் யாரும் இல்லை. மறைந்த ஹியுசை என் தம்பி என அழைப்பதில் பெருமை கொள்கிறேன். விளையாட்டைத் தாண்டி, தவறை ஏற்றுக்கொள்ளுதல், நேர்மறையான எண்ணம், குழந்தையைப் போன்ற உற்சாகம் உள்ளிட்ட குணங்கள் கொண்ட ஜென்டில்மேனாக திகழ்ந்தார். இவரின் கிரிக்கெட் வாழ்க்கை முழுமை இல்லாமல் முடிந்திருக்கலாம். ஆனால், இவர் விளையாடிய வரை சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ஒரு நேர்மையான சக வீரராக இருந்தார். இவ்வாறு கிளார்க் குறிப்பிட்டுள்ளார்.

## தெரிந்ததும் தெரியாததும்



சர்வதேச ரென்னிஸ் அரங்கில் இளம் பருவத்திலேயே சிகரத்தை தொட்டவர் ரஷ்யாவின் மரியா ஷரபோவா. 17ஆவது வயதில், விம்பிள்டன் இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்சை வீழ்த்தி, பட்டம் வென்று பரபரப்பை ஏற்படுத்தினார். கடந்த 2004 இல் தொடங்கிய அவரது இந்த வெற்றிப் பயணம் இன்றும் நீடிக்கிறது. ரென்னிஸ் மூலம் அதிகம் சம்பாதிக்கும் இவரை பேஸ்புக்கில் 1.5 கோடி ரசிகர்கள் பின்பற்றுகின்றனர். இப்படி எதிலும் முதலிடம் ஆக இருக்கும் இவர், சில விடயங்களில் தடுமாறுகிறார்.

இது குறித்து ஷரபோவா கூறியது: எனக்கு நன்றாக தெரிந்த ஒரு விடயம் ரென்னிஸ். தெரியாதது என்றால், அது நடனம் மற்றும் சமையல். 'பார்ட்டிகளில்' ஆடும் போது தடுமாறுவேன். ஒருநாள் எனக்கு குழந்தைகள் பிறக்கும். அவர்களுக்காக சமையலில் கைதேர்ந்து விளங்க வேண்டுமென ஆசைப்படுகிறேன். விரைவில் நன்கு சமைக்க கற்றுக் கொள்வேன். சமைக்கத் தெரியாதபோதும், சாப்பிடுவதில் அலாதி பிரியம் உண்டு. ரஷ்ய வகை உணவுகளை ஒருகை பார்ப்பேன். 'வோட்கா' கலந்த கொக்டெய்ல்' உற்சாக பானங்கள் மிகவும் பிடிக்கும். முகத்திற்கு 'மேக்-அப்' செய்வதால் அதிக பலன் கிடைக்காது. இயற்கையான அழகே போதுமானது. ரென்னிஸ் அரங்கில் எனது வெற்றிக்கு தன்னம்பிக்கையே முக்கிய காரணம். அதிர்ஷ்டம் எம்மைத் தேடி வராது. கடின உழைப்பின் மூலமே அதிர்ஷ்டத்தின் கதவுகளைத் தட்ட முடியும் எனத் தெரிவித்தார்.

# பன்முகப்படுத்தப்பட்ட திட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும்

## வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் தவராசா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தினூடாக வழங்கப்படும் நிதிகள் பிரதேச மக்களின் மேம்பாட்டிற்காக வழங்கப்படுவதாகவும், இந்நிதி மூலம் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்களுக்கு முக்கியதுவம் அளிக்கப்பட வேண்டும் என வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் ஆகியோரின் நிதி ஒதுக்கீட்டில் மாதர் சங்கங்களுக்கு உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நல்லூர் பிரதேச செயலர் செந்தில் நந்தனன் தலைமையில் நடைபெற்றது.




இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், இந்தநிதி யாவும் அரசினால் எம் பிரதேச மக்களின் மேம்பாட்டிற்காக வழங்கப்பட்டதாகும். அரசினால் விஷேடமாகத் தமது ஆதரவுக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படும் நிதியினால் செயற்படுத்தப்படும் திட்டங்களில் தம்மையும் பங்காளிகளாக்க வேண்டும் என அண்மையில் யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கூட்டமைப்பு உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். எமக்கு அபிவிருத்தி வேண்டாம், எமக்குத் தெருக்கள் வேண்டாம் என்று பிரசாரம் செய்தவர்கள், அபிவிருத்தியில் ஈடுபடுபவர்கள் துரோகிகள் என்று எம் மீது பழி சுமத்தியவர்கள் இன்று அவ்வாறான வேலைத்திட்டங்களில் தமக்கும் சமபங்கு வேண்டும் என்று கோரிக்கை விடுப்பதில் என்ன நியாயம் இருக்கின்றது.

அபிவிருத்தி மற்றும் வாழ்வாதார உதவிகள் மட்டுமல்ல, தமிழ் பேசும் மக்கள் எதிர்கொள்ளும் சகல பிரச்சினைகளுக்கும் எம்மால் தீர்வு கொடுக்க முடியும், அதற்கு நீங்கள் செய்ய வேண்டிய கைங்கரியம் எம்மை அரசியல் ரீதியாகப் பலப்படுத்துவதே ஆகும் என்றார்

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், நல்லூர் பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் அ.ரவீந்திரதாஸன், பிர தேச சபை உறுப்பினர் சிறிகணேஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சமூக சேவைகள் அமைச்சினால் 16 கிராமங்களுக்கு வாசிகசாலைகள்

(யாழ்ப்பாணம்)

வறிய நிலையிலுள்ள கிராம மக்களின் வாசிப்புத் திறனையும்,கல்வித் தரத்தையும் மேம்படுத்தும் நோக்குடன் சமூகசேவைகள் அமைச்சு சிசுநெண புபுது திட்டத்தின் கீழ் இவ் வருடத்தில் 16 கிராம சேவகர் பிரிவுகளுக்கு வாசிகசாலைகள் அமைச்சின் நிதி மூலமாக அமைக்கப்பட்டுள்ளது.

சமூக சேவைகள் அமைச்சின் கீழுள்ள சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் சமூகப்பணி டிப்ளோமா கற்கை நெறிகளைச் செய்யும் மாணவர்கள் தாம் களப் பணியின் போது இனங்கண்ட கிராமங்களும் இத் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு வாசிகசாலை அமைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்திலும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள இருபாலை தெற்கு கிராம அலுவலர் பிரிவிலும் இத்தகைய சிசுநெண புபுது நிலையம் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது.

நாடெங்கிலுமுள்ள 9 மாகாணங்களையும் சேர்ந்ததாக இந்த 16 கிராமங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்பட்ட கிராமத்திலுள்ள பொருத்தமான கட்டடம் ஒன்றில் வாசிகசாலை அமைப்பதன் பொருட்டு 50 000 ரூபா பெறுமதியான புத்தகங்களும் ,அவற்றை வைத்திருப்பதற்காக இரும்பிலான அலுமாரிகளும் அன்பளிப்பாக வழங்கப்படும்.

இத் திட்டம் தொடர்ச்சியாகவே சமூக சேவைகள் அமைச்சினால் வருடா வருடம் நாடு முழுவதும் செயற்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

கிராம மட்ட கல்வித் தரத்தை மேம்படுத்தும் இந்தத் திட்டத்தின் மூலம் வாசிகசாலைகள் அமைப்பதற்கு விருப்பமுள்ளவர்கள் செத்சிறிபாய பத்தரமுல்லவிலுள்ள அமைச்சின் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள முடியுமெனவும் கூறப்படுகிறது. (90)

# மாணவர்கள் கௌரவிப்பு

(இணுவில்)

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் மாவட்டம் 306 பி-1 சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினால் இவ் வருடம் உடுவில் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளியை அடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நடைபெறவுள்ளது.

இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சுன்னாக லயன்ஸ் கழகத் தலைவர் பொ.பாலகுமார் தலைமையில் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக லயன்ஸ் கழகத்தின் முதலாவது மாவட்ட உதவி ஆளுநர் லயன் கிறிஸ்ரி நாணயக்கார, லயன் சீமாட்டி சிராஞ்சி ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஜே.சந்திரராஜா, லயன்ஸ் கழகத்தின் வடக்கு செயலாளர் ரி.உதயசூரியன் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

நன்றியுரையை சுன்னாகம் லயன்ஸ் கழக செயலாளர் சி. ஹரிகரன் வழங்கவுள்ளார். (90)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை

(வலிகாமம்)

யாழ். குடாநாட்டில் தொடர்ச்சியாக பெய்து வரும் கன மழையால் வட்டுக்கோட்டைப் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை வலி. மேற்கு பிரதேச செயலர் ஏ. சோதிநாதன் முன்னெடுத்துள்ளார்.

வட்டுக்கோட்டையின் தாழ்வான பகுதியில் வாழும் மக்கள் வெள்ளம் குடியிருப்புக்குள் புகுந்து தேங்கியுள்ளதால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக, இன்பச்சோலை, முதலியகோவில், செம்பாட்டான் தோட்டம், கொட்டிகாட்டி, நல்லமாவடி மக்களே இவ்வாறு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர.

இவர்களுக்கான உடனடி உதவிகளைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளை பிரதேச செயலர் ஏ. சோதிநாதன் ஜே. 165 கிராம அலுவலர் மற்றும் நா. குமணன், சமுர்த்தி உத்தியோகத்தர், ஈ.பி.டி.பி.யைச் சேர்ந்த பிரதிநிதி க. சி. தவராசா, அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் மற்றும் வட்டு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் உள்ளிட்ட குழுவினர் இணைந்து மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் பொது இடங்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ள நிலையில் முதற்கட்டமாக வெள்ள நீரை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# சனிப் பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

## ரிஷபம்



**(கார்த்திகை 2,3,4ஆம் பாதம், ரோகினி, மிருகசீரிடம் 1,2ஆம் பாதம்)**

**உழைப்பால் உயரும் ரிஷப ராசிக்காரர்களே!**

உழைப்பால் உயரும் நீங்கள், அடுத்தவர் நிழலில் அமர யோசிப்பீர்கள். இதுவரை உங்கள் ராசிக்கு 6ஆவது வீட்டில் அமர்ந்து எதிலும் முன்னேற்றத்தை தந்த சனிபகவான் இப்போது 16.12.2014 முதல் 17.12.2017 வரை உள்ள கால கட்டங்களில் உங்கள் ராசிக்கு 7ஆவது வீட்டில் நுழைந்து பலன் தரப்போகிறார். 7ஆவது வீட்டில் சனி அமர்ந்து கண்டகச் சனி வருகிறாரே? என்று பதட்டப்படாதீர்கள். சனிபகவான் உங்களுக்கு யோகாதிபதியாக வருவதால் உங்களுக்கு ஓரளவு நன்மையே உண்டாகும். இனி எதையும் திட்டமிட்டு செய்யப் பாருங்கள்.

களத்திர ஸ்தானமான 7ஆம் வீட்டில் சனி அமர்வதால் திருமணம் தள்ளிப் போகும். உன் சொந்தம், என் சொந்தம் என்று மோதிக் கொள்ளாமல் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. குடும்பத்தில் வரும் சின்ன சின்னப் பிரச்சினைகளையெல்லாம் பெரிதுப்படுத்திக் கொண்டிருக்காதீர்கள். இருவரும் மனம் விட்டுப் பேசுவது நல்லது.

முக்கிய ஆவணங்களை கவனமாக கையாளுங்கள். தீயபழக்கமுள்ளவர்களின் நட்பை தவிர்க்கப்பாருங்கள். உறவினர், நண்பர்களுடன் உரிமையில் வரம்பு மீறிப் பேச வேண்டாம். உத்தியோகம், வியாபாரத்தின் பொருட்டு குடும்பத்தை பிரிய வேண்டி வரும்.

**சனிபகவான் நட்சத்திர சஞ்சாரப் பலன்கள்:**

16.12.2014 முதல் 24.01.2015 வரை மற்றும் 30.04.2015 முதல் 13.6.2015 வரை மற்றும் 06.9.2015 முதல் 17.10.2015 வரை உங்கள் அஷ்டம-லாபாதிபதியான குருவின் சாரத்தில் விசாக நட்சத்திரம் 4ஆம் பாதம் 7ஆம் வீட்டில் சனி செல்வதால் மனைவிக்கு மருத்துவச் செலவுகள், அலைச்சல், மனைவிவழி உறவினர்களுடன் பிணக்குகள், சிறு சிறு விபத்துகள், மூச்சுத் திணறல், வேலைச்சுமை, வீண் செலவுகள் வந்து போகும்.

14.6.2015 முதல் 5.9.2015 வரை உங்கள் ராசிக்கு 6ஆம் வீடான துலாம் ராசி விசாகம் நட்சத்திரம் 3ஆம் பாதத்தில் சனி செல்வதால் இக்கால கட்டத்தில் யாரை நம்புவது என்கிற குழப்பத்திற்கு ஆளாவீர்கள். ஒரு சொத்தை விற்று மறுசொத்தை காப்பாற்றுவீர்கள். நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை, தாமதம் ஏற்படும்.

30.04.2015 முதல் 01.08.2015 வரை குருபகவானின் விசாக நட்சத்திரத்திலேயே சனி வக்கரித்து செல்வதால் எதிர்ப்புகள் அடங்கும். வி.ஐ.பிகள் அறிமுகமாவார்கள். பணவரவு உண்டு. என்றாலும் காய்ச்சல், சளித் தொந்தரவு, சோர்வு வந்து விலகும். புது வேலைக்கு முயற்சி செய்தீர்களே! நல்ல பதில் வரும்.

உங்கள் பாதகாதிபதியான சனிபகவான் தன் சுய நட்சத்திரமான அனுஷம் நட்சத்திரத்தில் 25.01.2015 முதல் 29.04.2015 வரை மற்றும் 18.10.2015 முதல் 15.11.2016 வரை செல்வதால் இக்காலகட்டத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். பாதியில் நின்ற கல்யாணப் பேச்சுவார்த்தை சாதகமாக முடியும்.

15.3.2015 முதல் 29.04.2015 வரை மற்றும் 19.5.2016 முதல் 12.08.2016 வரை உள்ள கால கட்டங்களில் சனிபகவான் அனுஷம் நட்சத்திரத்திலேயே வக்ரமாவதால் அக்கம்-பக்கம் வீட்டாருடன் அனுசரித்துப் போங்கள். அவ்வப்போது படபடப்பு, பதட்டம் வந்து நீங்கும். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள்.

16.11.2016 முதல் 17.12.2017 வரை உங்கள் தன-பூர்வ புண்ணியாதிபதியான புதனின் கேட்டை நட்சத்திரத்தில் சனிபகவான் செல்வதால் இதமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். குடும்பத்தில் கல கலப்பான சூழல் உருவாகும். எதிர்பார்த்திருந்த தொகை வரும். பிள்ளைகளால் உறவினர், நண்பர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும்.


கன்னிப் பெண்கள் உயர்கல்வியில் போராடி வெற்றி பெறுவீர்கள். திருமணம் தாமதமாகி முடியும். மாணவ-மாணவிகளே! சமயோஜித புத்தியை பயன்படுத்துங்கள். வகுப்பறையில் முன் வரிசையில் அமருங்கள். கடைசி நேரத்தில் படிக்கும் பழக்கத்தை கைவிடுங்கள்.

இந்த சனி மாற்றம் சில நேரங்களில் உங்களை சூழ்நிலை கைதியாக மாற்றினாலும் அனுபவ அறிவாலும், சமயோஜித புத்தியாலும் பிரச்சினைகளை சமாளித்து சாதிக்க வைக்கும்.

**பரிகாரம்:**

ஆஞ்சநேயர் வழிபாடு உங்கள் வாழ்வில் தடையை அகற்றி முன்னேற்றத்தைக் கொடுக்கும். ஞானிகள், சன்னியாசிகளை சந்தித்து காணிக்கை செலுத்தி ஆசி பெறுங்கள். வியாழனன்று தட்சிணாமூர்த்திக்கு கொண்டைக் கடலை படைத்து வணங்குங்கள்.

(நாளை மிதுனம்)



# காவியத்தலைவன்

**- கருந்தேள்**

**கே**.பி. சுந்தராம்பாளின் கதையையும் எஸ்.ஜி.கிட்டப்பாவின் கதையையும் சற்றே மாறுபட்ட கற்பனை கலந்த கோணத்தில் அளித்திருப்பதே "காவியத் தலைவன்" படம்.

தமிழ்க் கலையுலகுக்கு ஒரு பிரகாசமான வரலாறு உள்ளது. அதில் எஸ்.ஜி. கிட்டப்பா, கே.பி. சுந்தராம்பாள், எம்.கே. தியாகராஜ பாகவதர், சங்கரதாஸ் சுவாமிகள், நவாப் ராஜமாணிக்கம், கன்னையா, மதுரகவி பாஸ்கரதாஸ், உடுமலை முத்துசாமிக் கவிராயர், எம்.எஸ் விஸ்வநாததாஸ் போன்ற பல கதாபாத்திரங்கள் உண்டு. ஒவ்வொருவரின் வாழ்க்கையுமே மிகவும் சுவையானது.

மிகமிகச் சுருக்கமாக எஸ்.ஜி. கிட்டப்பாவின் வாழ்க்கையைக் கவனித்தால், 1906 ஆகஸ்ட்டில் பிறந்திருக்கிறார். கிட்டப்பாவின் அண்ணன்கள் சுப்பையாவும் செல்லப்பாவும் சிறு வயதிலேயே பிச்சையெடுத்தே உணவு உண்ணும் நிலையில் இருந்ததாகவே கிட்டப்பாவைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

அவர்களது தந்தையின் பெயர், கங்காதர ஐயர். அக்காலத்தில் இருந்த பாய்ஸ் நாடகக் கம்பெனிகளில் சுப்பையாவும் செல்லப்பாவும் நடித்து வந்திருக்கின்றனர். அவர்களுடனே கங்காதர ஐயரும் கிட்டப்பாவும் இருந்திருக்கின்றனர். அப்போது சங்கரதாஸ் சுவாமிகள்தான் கிட்டப்பாவுக்குப் பாடல்கள் கற்றுக் கொடுத்திருக்கிறார் என்று அறிகிறோம்.

மிகச்சிறு வயதில் இருந்தே கிட்டப்பாவின் குரல்வளம் கேட்பவர்களை மெய்மறக்கச் செய்திருக்கிறது. ஆறு வயதில் சிங்கப்பூர் பயணப்பட்ட கிட்டப்பாவும் சகோதரர்களும், அங்கே பல நாடகங்கள் நடித்துப் புகழ்பெற்றுப் பின்னர் தென்னிந்தியாவுக்கும் (அப்போதைய) சிலோனுக்கும் பயணப்பட்டிருக்கின்றனர்.


இதன்பின்னர்தான் கன்னையா நாயுடுவின் சென்னை ஹிந்து வினோத நாடக சபாவில் சேர்ந்து சூப்பர்ஸ்டாராக விளங்கியிருக்கிறார் கிட்டப்பா.

அப்போதுதான் 1926இல் மறுபடி கொழும்புக்குச் செல்கிறார் கிட்டப்பா. அங்கே ஒரு பிரபலமான நாடக நடிகையைப் பற்றிக் கேள்விப்படுகிறார். பதினெட்டே வயதான சுந்தராம்பாள் என்ற அந்த நடிகை கொழும்புவில் மிகவும் புகழ்பெற்று விளங்குகிறார்.

கிட்டப்பாவிடமும் சுந்தராம்பாளிடமும் அவர்களை அழைத்துவந்திருந்தவர்கள், பரஸ்பரம் இருவரும் மற்றவர்களுடன் ஜோடி சேர்ந்து நடித்துவிடக்கூடாது என்று எச்சரித்திருக்கின்றனர் என்று அறிகிறோம். காரணம், ஒருவரை மற்றொருவர் கலையில் தூக்கிச் சாப்பிட்டுவிடுவர் என்பதே.

ஆனாலும் இதையெல்லாம் கவனிக்காத கிட்டப்பா, ஒரு நாள் நேரடியாக சுந்தராம்பாளைச் சந்திக்கச் செல்கிறார்.

நேராக உள்ளே செல்கிறார் கிட்டப்பா. சுந்தராம்பாள் படுத்துக்கொண்டிருக்கிறார். அவரது தாய் பாலாம்பாள், யாரோ ராஜ களையுடன் ஒரு இளைஞர் வந்திருப்பதை சுந்தராம்பாளிடம்



கிட்டப்பா - சுந்தராம்பாள்

சொல்லிக்கொண்டிருக்கும்போதே உள்ளே வந்து சுந்தராம்பாளின் படுக்கையில் அமர்ந்துவிடுகிறார் கிட்டப்பா.

கொஞ்சம் கூடக் கூச்சமே இல்லாமல் இப்படி வருகிறாரே என்று நினைக்கும்போதே பேசவும் ஆரம்பிக்கிறார். அவரது பேச்சைக்கண்டு பிரமிக்கிறார் சுந்தராம்பாள். பிரபலங்களைப் பற்றிய legends எப்படி அவர்களை பாதிக்கிறது என்பதற்கு இது ஒரு சரியான உதாரணம்.

ஏற்கெனவே கிட்டப்பாவைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருந்த சுந்தராம்பாளுக்கு அவர் மேல் பிரமிப்பு வந்ததில் வியப்பில்லை என்றுதான் தோன்றுகிறது. இருவரும் சேர்ந்து நடிக்கிறார்கள். காதலில் விழுந்து திருமணமும் செய்துகொள்கிறார்கள்.

கிட்டப்பாவுக்கும் சுந்தராம்பாளுக்கும் பிரச்னைகள் வருகின்றன. சுந்தராம்பாள் கிட்டப்பாமீது உயிரையே வைத்திருக்கிறார். கிட்டப்பா சுந்தராம்பாளை பலமுறை அடிக்கிறார். ஒரு குழந்தை பிறந்து இறக்கிறது. கிட்டப்பா மதுவில் மூழ்குகிறார்.

சுந்தராம்பாள் கிட்டப்பாவைவிட்டுப் பிரிகிறார். காதல் கடிதங்கள் எழுதுகிறார். "நீங்கள் நாசமாய்ப் போவீர்கள்" என்றும் அக்கடிதங்களில் ஒன்றில் எழுதுகிறார். சில காலத்திலேயே கிட்டப்பா தனது 27ஆம் வயதில் இறந்துபோகிறார்.

தனது குரலால் தமிழகத்தின் நாடக மேடைகளைக் கலக்கிய கிட்டப்பாவின் சுருக்கமான கதை இதுதான். காவியத்தலைவனிலும் கிட்டத்தட்ட இதில் சில அம்சங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டுக் கதை பின்னப்பட்டுள்ளது.

படம் துவங்கும்போதே அக்கால எழுத்துகளில் டைட்டில்கள் போடப்பட்டுள்ளமை ஒரு குஷியான அம்சம். கொம்பு முளைத்த ளை, னை போன்ற எழுத்துகளை நீண்டகாலம் கழித்துக் காண்பது பழைய காலக் கல்கியைப் புரட்டியதைப் போல் இருந்தது.

எனக்குத் தெரிந்து இதுதான் வசந்தபாலனின் அனைத்து உணர்வுகளும் சேர்ந்து பின்னப்பட்டுள்ள முதல் படம் என்று தோன்றுகிறது.

இன்னொரு மனிதனின் வளர்ச்சியைப் பார்த்து மனதில் புழுங்கும் ஒருவன் எத்தனை தூரத்துக்குச் செல்வான் என்ற கருவை சிறப்பாகவே காட்டியிருக்கிறது இப்படம்.

படத்தின் மிகப்பெரிய பல்மாகப் பிருத்விராஜைத்தான் சொல்வேன். இந்தப் படத்திலேயே இயல்பான, கதாபாத்திரத்துக்குத் தேவையான சரியான நடிப்பை அவர்தான் வழங்கியிருக்கிறார். பல காட்சிகளில் அவரது முகபாவம் சிவாஜி கணேசனின் சில முகபாவங்களை நினைவுபடுத்தியது. நல்ல நடிப்பு.

இவருக்கு அடுத்து வேதிகா. சிறப்பாகச் செய்திருக்கிறார். அவரது முகபாவங்களும் உடல்மொழியும் ஜோதிகாவை சில இடங்களில் நினைவுபடுத்தின (உதாரணமாக, அறிமுகப் பாடலான வாணி ஜெயராம் பாடியிருக்கும் திருப்புகழில் அப்படியே ஜோதிகா போலவே அபிநயம்).

இதன்பின் நாசர். சங்கரதாஸ் சுவாமிகளை நினைவுபடுத்தும் தவத்திரு சிவதாஸ் சுவாமிகள் என்ற வேடம். சித்தார்த் காதல் காட்சிகளில் நன்றாக நடித்திருந்தாலும், காளியப்ப பாகவதரின் பாரத்தை அவரது தோள்கள் தாங்கவில்லை. ஒருவேளை மிக இளம் வயதிலேயே எஸ்.ஜி. கிட்டப்பா இறந்துவிட்டதால் சித்தார்த்தைத் தேர்வு செய்தார்களோ என்று தோன்றுகிறது. பொன்வண்ணன் கொஞ்சமே வந்தாலும் சரியாகச் செய்திருக்கிறார்.

பாடல்கள் தனியாகக் கேட்டால் பயன் இல்லை. அவற்றைப் படத்தோடு பார்த்தால்தான் அவை சிறக்கின்றன. படத்தின் அத்தனை பாடல்களும் ரஹ்மானால் மிகச்சிறப்பாக இசையமைக்கப்பட்டிருக்கின்றன.

ஜெயமோகன் வசனம் எழுதியிருக்கிறார். நான் கடவுளில் அவரது வசனங்கள் பல இடங்களில் அட்டகாசமாக இருக்கும் என்பது அனைவருக்கும் தெரிந்த செய்தி. ஆனால் இந்தப் படத்தில் எந்தக் காட்சியிலும் கதாபாத்திரத்தின் ஆழமான உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வசனங்கள் இல்லை. நாம் பொதுவாக எந்தப் படத்திலும் கேட்கக்கூடிய வசனங்களே அதிகம். ஜெயமோகன் எதற்கு? வசந்தபாலனே அவற்றை எளிதில் எழுதியிருக்கக்கூடும்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தின் நாடக வாழ்க்கையைப் பற்றி முதன்முதலாக இப்போதிருக்கும் பார்வையாளர்களுக்கு ஒரு ஜன்னலைத் திறந்திருக்கும் வசந்தபாலன் (சில குறைகள் இருந்தாலும்) பாராட்டத்தக்கவர். இப்படி ஒரு படத்தை எடுக்க அவசியம் "தில்" வேண்டும்.

## டிசம்பர் மாதத்தில்...

### பிரபலங்களின் பிறந்த தினங்கள்

5 1901 வோல்ட் டிஸ்னி. பிரபல மிக்கி மவுஸ் கார்ட்டூன் பாத்திரங்களை உருவாக்கியவர், படத்தயாரிப்பாளர்.

11 1882 பாரதியார். மகாகவி.

12 1950 ரஜினிகாந்த். "சூப்பர் ஸ்டார்" என்று அழைக்கப்படும் திரைப்பட நடிகர்.

17 1797 ஜோச∴ப் ஹென்றி. மின் காந்த பயன்பாட்டைக் கண்ட விஞ்ஞானி.

17 1936 போப் ∴ப்ரான்ஸிஸ். தற்போதைய போப் ஆண்டவர்.

18 1878 ஸ்டாலின். ரஷ்யப் புரட்சியாளர், அதிபர்.

26 1893 மா.சே. துங். சீனப் புரட்சியாளர், பிரதமர்.

27 1822 லூயி பாஸ்டர். வெறிநாய்க் கடிக்கு மருந்து கண்ட விஞ்ஞானி.















### நினைவு தினங்கள்

2 1933 எஸ்.ஜி.கிட்டப்பா. பாடகர், நாடக சினிமா கலைஞர், கே.பி.சுந்தராம்பாளின் கணவர்.

5 2013 நெல்சன் மண்டேலா. தென்னாபிரிக்கா சுதந்திரப் போராட்ட வீரர்.

6 1956 டாக்டர் அம்பேத்கார். இந்திய அரசியல் சட்டம் இயற்றியவர்.

14 1799 ஜோர்ஜ் வோ'ிங்டன். அமெரிக்க முதல் ஜனாதிபதி.

24 1987 எம். ஜி.ராமச்சந்திரன். தமிழக முன்னாள் முதலமைச்சர்.

24 1973 ஈ.வே. ரா.பெரியார். தமிழக சீர்திருத்தவாதி. திராவிடக் கட்சி ஸ்தாபகர்.

சுதந்திரம் கொண்டாடும் நாடுகள்

1 டொமினியன் ரிபப்ளிக், போர்த்துக்கல், ஐஸ்லாந்து.

2 யுனைடட் அரேபியன் எமிரேட்ஸ்.

6 பின்லாந்து

12 கென்யா

16 கஜகஸ்தான்

21 ஆர்மேனியா

24 லிபியா

29 மங்கோலியா

### முக்கிய நிகழ்வுகள்

2 1976 ∴பிடல் காஸ்ட்ரோ கியூபாவின் தலைவராக தேர்வு செய்யப்பட்டார்.

4 1996 அமெரிக்காவின் நாசாவில் "பாத் ∴பைண்டர்" விண்கலம் செவ்வாய் கிரக ஆராய்ச்சிக்கு விண்ணில் செலுத்தப்பட்டது.

6 2006 "நாசா"வின் கண்டுபிடிப்பு! செவ்வாய் கிரகத்தில் நீர்மம் இருக்கிறது!

7 1946 ஐ.நா.சபையின் சின்னம் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது

8 1997 நியூசிலாந்தில் முதல் பெண் பிரதமராக "ஜென்னி சிப்லே" தேர்வானார்.

10 2012 ஆர்ஜென்டீனா கால்பந்து வீரர் லயோனெல் மெஸ்ஸி 86 கோல் போட்டு முன்னர் 85 கோல் போட்ட ஜெர்ட் முல்லரின் சாதனையை முறியடித்தார்.

17 1903 ரைட் சகோதரர்களின் முயற்சியில் ஆகாய விமானம் முதன் முறையாக வானில் வெற்றிகரமாக பறந்தது.

26 2004 சுனாமி! இலங்கை, இந்தியா, இந்தோனேஷியா உள்ளிட்ட நாடுகளில் 2 இலட்சத்திற்கும் மேலானோர் பலியாயினர். நில நடுக்கம் 9.00 ரிக்டர். கோடிக்கணக்கில் சேதம்!

27 1945 சர்வதேச நிதி நிறுவனம் ஆரம்பமானது.

28 1895 முதன் முதலில் லூயி பிரின்ஸ் சகோதரர்களால் முழு சினிமா உருவானது.

### முக்கிய தினங்கள்

1 எய்ட்ஸ் தினம்.

2 உலக மாசுத் தடுப்பு நாள்

2 உலக அடிமைத் தொழிலாளர் ஒழிப்பு தினம்.

3 மாற்றுத் திறனாளிகள் தினம்.

10 மனித உரிமைகள் தினம்.

ஒரு குளத்தில் பல வகையான வண்ண மீன்கள் வாழ்ந்து வந்தன. மீன் குஞ்சுகள் எப்பொழுதும் கரையோரம் கூடி விளையாடிக் கொண்டிருக்கும்.

அதில் இரண்டு மீன்கள் விளை யாடிக் கொண்டிருக்கும் போது, துள்ளிக் குதித்து விளையாடின. அப்போது கரையில் ஒரு காகம் புழுக்களைக் கொத்திக் கொண்டிருப்பதை பார்த்தன.

அதில் ஒரு மீன் "அங்கே கரையில் பார்த்தாயா? ஒருவன் எவ்வளவு கறுப்பாக இருக்கிறான்? அவன் குரலைக் கேட்டால் மிகவும் அருவருப்பாக இருக்கிறது. அவனைப் பார்த்தால் பயமாக இருக்கிறது வா போய் விடலாம்" என்றது.

அந்த மீன் சொன்னதைக் கேட்டு அடுத்த மீன் அதை ஆமோதித்து வேகமாகச் சென்றது. அதன் பின்னால் விளையாட வந்திருந்த அனைத்து மீன்களும் குளத்துக்குள் வேகமாகச் சென்றன.

அவசர அவசரமாக சிறிய மீன்கள் அனைத்தும் உள்ளே சென்றதைப் பார்த்த ஒரு பெரிய மீன், "சிறிய மீன்களே...? எதைப் பார்த்து இப்படிப் பயந்து ஓடி வருகிறீர்கள்...?" என்று கேட்டது.

சிறிய மீன்களில் ஒன்று, "கரை யில் காகம் இருக்கு. அதனோட நிறமும் குரலும் எங்களுக்குப் பயமா இருக்கு, அதான்... வேகமாக வந்து விட்டோம்" என்றது.

"ஓ....! காகமா, அதனால் நமக்கு எந்த ஆபத்தும் இல்லை. நிறத்தையும் உருவத்தையும் வைத்து யாரையும் தவறாக நினைக்கக் கூடாது" என்று அந்தப் பெரிய மீன் சொன்னது.

சிறிய மீன் குஞ்சுகள், "இந்தப் பெரிய மீனுக்கு ஒன்றுமே தெரியவில்லை, எப்பொழுதும் நமக்கு அறிவுரை சொல்லிக் கொண்டிருக்கும்..." என்றபடி சென்றன.

அடுத்த நாள் வந்தது.

சிறிய மீன் குஞ்சுகள் விளையா-டிக் கொண்டிருந்தன. அப்போது குளத்தின் கரையில் கொக்கு ஒன்று அமர்ந்து இருந்தது.

அதை பார்த்த மீன் குஞ்சுகள், "அங்கே பாருங்கள், அழகிய வெள்ளை நிறத்தில் அழகான ஒரு பறவை. உடல் முழுக்க வெள்ளை, அதன் அலகு கூட நீளமாகப் பார்க்கவே எவ்வளவு அழகாக இருக்கு" என்றன.

மீன் குஞ்சுகளின் பேச்சுச் சத்தத்தைக் கேட்ட கொக்கு மெதுவாகக் குளத்தை நோக்கி வந்தது.

இதைப் பார்த்த மீன் குஞ்சுகள், அதன் நடை கூட மிக அழகாக இருக்கிறதே என்று வியந்தன.

உடனே மீன் குஞ்சுகள் அதனுடன் நட்பு கொள்ள விரும்பின. அவைகள் மகிழ்ச்சியாக "அழகிய பறவையே, உன் பெயரென்ன?" என்று கேட்டன.

உடனே கொக்கு, "என் பெயர் கொக்கு" என்றது.

அங்கிருந்த சிறிய மீன்களில் ஒன்று, "கொக்கு அண்ணே...! நீங்க மிகவும் அழகாக இருக்கிறீங்க. நான் உங்க அலகைத் தொட்டுப் பார்க்கலாமா?" என்று கேட்டது.



# அழகிய ஆபத்து...!

[சிறுவர் கதை]

கொக்குக்கு ஒரே கொண்டாட்டம். அது உடனே, "வா, என்னைத் தொட்டுப் பார்" என்றது.

அந்த மீன் குஞ்சு கொக்கை நோக்கித் தாவியது. கொக்கு மீனைக் கவ்வியது.

மாட்டிய மீன், "கொக்கு அண்ணே என்னை விட்டு விடுங்கள்..." என்று கெஞ்சியது.


கொக்கு அந்த மீனை அப்படியே விழுங்கி விட்டது.

இதை பார்த்த மற்ற மீன் குஞ்சுகள் "ஆபத்து... ஓடுங்கள்... ஓடுங்கள்" என்று குளத்திற்குள் சென்று மறைந்தன.

அப்போது மீன் குஞ்சுகள், "அன்று அந்தப் பெரிய மீன் சொன்னது சரியாப் போச்சு. அழகை மட்டும் பார்த்து ஒருத்தரோடு பழகக் கூடாது. அப்படி பழகினால் ஆபத்துதான்" என்று உறுதி எடுத்துக் கொண்டன.

அன்று முதல் அனைத்து மீன் குஞ்சுகளும் மிகக் கவனமாக இருந்தன. மகிழ்ச்சியாக வாழ்ந்தன.

# ஈ-யடிச்சான் ராசி!



எஸ்.எஸ்.வாசன் இயக்கத்தில் ஜெமினி நடித்த படம் "வஞ்சிக்கோட்டை வாலிபன்." அந்தப் படத்துக்கான சண்டைக் காட்சி படப்பிடிப்பு அது. வில்லன் வேடத்தில் வீர வசனம் பேசி நடித்துக் கொண்டிருந்தார் பி.எஸ். வீரப்பா. காட்சி படமாகிக் கொண்டிருந்தது. "நான் உன்னை என்ன செய்கிறேன் பார்..." என்ற வசன உச்சரிப்பின் போது, பி.எஸ்.வீரப்பாவின் மூக்கின் மேல் வந்து அமர்ந்தது ஒரு ஈ. வசன உச்சரிப்பை நிறுத்த விரும்பாத பி.எஸ்.வீரப்பா அந்த ஈயை தனது இடது கை விரலால் தட்டி விட்டார். அந்தக் காட்சி நன்றாக வந்து விடவே, மேற்கொண்டு அந்தக் காட்சியை படமாக்காமல், அதே காட்சியை அப்படியே படத்தில் வைத்து வெளியிட்டார் வாசன். மிகப் பெரிய வெற்றியை பெற்ற அந்தப் படம், பின்னாளில் ஹிந்தியில் ரீமேக் ஆனது. இப்போது பி.எஸ். வீரப்பா இடத்தில் ஹிந்தி நடிகர் பிரான். அதே வசன உச்சரிப்பு வரும் போது பிரானும் மூக்கை தட்டி விடுகிறார். அங்கேயும் படம் மிகப் பெரிய வெற்றி. ராசி, அதிர்ஷ்டம் என்பதற்கு உதாரணமாக இந்த விஷயம் இப்போதும் சினிமாவில் சொல்லப்படுவதுண்டு.



# 'டீல்' சரிவராட்டில் சனங்கள் தாங்களாகவே முடிவெடுக்கட்டும்

## வெளிவாயன் வேலாயுதன் சொல்லுவது....

ஜனாதிபதி தேர்தலிலை ஆரை ஆதரிக்கப் போகினம் எண்டதுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களிலை இருந்து பிரதேச சபை உறுப்பினர்கள் வரை, புத்திசீவிகளிலையிருந்து பொது மக்கள் வரை அபிப்பிராயம் கேட்டு ஆற அமரச் சிந்தித்து கூட்டமைப்பு முடிவெடுக்கப் போகுதாம். தலைவர் சம்பந்தன் சொல்லுறார்.

ஏதோ கூட்டமைப்பு ஒரு ஜனநாயக அமைப்பு எண்ட மாதிரி அவர் பில்டப் காட்டிறார். எப்பவும் தீர்மானம் எடுக்கிற ஆக்கள் ரண்டு பேர்தான். அவைதான் ரண்டு நாடுகளின்ரை கருத்தறிஞ்சு நடப்பவை. ஒருத்தர் சம்பந்தன். மற்றவர் சுமந்திரன்.

'இவைதான் முடிவெடுக்கினை. எங்களுக்கு ஒண்டும் அறிவிக்கிறதில்லை' எண்டு கொஞ்ச நாளைக்கு முன்னுக்கு சில நாடாளுமன்ற உறுப்பினர்களே வெப்பியாரப்பட்டுச் சொல்லியிருந்ததைப் படிச்சிருப்பீர்கள். கூட்டமைப்புப் பேச்சாளருக்கே என்ன தீர்மானம் எடுக்கினை எண்டது தெரியாது.

ஆனால் சம்பந்தன் பொது எதிரணி முக்கியஸ்தர்களை இரகசியமாய்ச் சந்திச்சிருக்கிறார் எண்டு கூட்டமைப்பின் குரல் எண்டு சொல்லுற உதயனே எழுதியிருக்குது. மறுபுறத்தே சம்பந்தன் கோஸ்டியாலை அரசாங்கக் கட்சியோடை டீல் பேசப்படுகுது எண்டு இணைய வெளியிலை அரசல் புரசலாக கதைக்கப்படுகுது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலை மகிந்தவை விழுத்திறதுக்கெண்டு மிகப் பெரிய ஜனநாயகவாதியான(?) இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை ஆதரிச்சவை. அது தமிழ் மக்களின்ரை நலன் கருதி எடுக்கப்பட்ட முடிவில்லை. மாறாக டீல் மூலமாய் பணம் கை மாறினதுதான் முக்கியம் பாருங்கோ.

சரத் பொன்சேகாவை ஆதரிச்சு செய்தியளை வெளியிடுறதுக்காகவே ஒரு பத்திரிகை நிறுவன உரிமையாளருக்கு ஐம்பது மில்லியன் கைமாறினதாய் அப்ப கதைச்சவை. ஓராளுக்கே இப்பிடியெண்டால் கட்சிக்கு, அதிலை இருக்கிற ஆட்களுக்கு எப்பிடிக் கிடைச்சிருக்கும்?

மகிந்தவையும் ஏனைய ஆக்களையும் போர்க்குற்ற விசாரணைப் பொறியிலை சிக்க வச்சு, ஐ.நா. விசாரணை நடாத்தி, சர்வதேச நீதிமன்றத்திலை நிறுத்த வேணும் எண்ட நிலைப்பாட்டை கூட்டமைப்பு சனத்துக்கும், புலம்பெயர் சக்தியளுக்கும் வெளிப்படுத்திக் கொண்டிருக்குது. மறுபுறம் டீல் பேசுது.


இந்த முறை கூட்டமைப்பின்ரை டீல் பருப்பு அதிகம் வேகேல்லைப் போலை கிடக்குது. ஏனெண்டால் சுதந்திரக் கூட்டமைப்புச் செயலாளரே சொல்லிப் போட்டார் கூட்டமைப்பின்ரை ஆதரவு எங்களுக்குத் தேவையில்லையெண்டு.

அப்பிடியெண்டால் எதிரணியை ஆதரிக்கிற டீலிலைதான் ஈடுபட வேணும். இந்த டீலிலை காசு புரண்டாலும் சனத்துக்குச் சொல்லுறதுக்கு ஒண்டும் இல்லைப் பாருங்கோ. போர்க் குற்ற விசாரணைக்கு ஒத்துழைச்சு நாட்டைக் காட்டிக் குடுக்க மாட்டம் எண்டு பொது எதிரணி சொல்லிப் போட்டுது.

கனவு கண்டு எழும்பி 'மகிந்த தோற்றால் சர்வதேச நீதிமன்றத்திலை நிறுத்தப்படுவார்' எண்டு அறிக்கை விடுகிற தமிழர் பேரவை சுரேன் சுரேந்திரா மாதிரி சம்பந்தன் சனங்களுக்கு எதையும் சொல்லேலாது.

போதாக்குறைக்கு வெளிநாடுகளிலை இருக்கிற எஞ்சிய விடுதலைப் புலியளும் அழிக்கப்படுவினை எண்டு வேறை ஐக்கிய தேசியக் கட்சி சொல்லுது. அதோடை தமிழர் பிரச்சினைக்கு என்ன தீர்வெண்டு வாயே திறக்கேல்லை. ஆராவது வாயைத் திறந்தாலும் அத்துரலிய ரத்தின தேரர் பார்த்துக் கொண்டிருக்கமாட்டார் எண்டதாலை அங்கையிருந்தும் ஒரு நல்ல வார்த்தையையும் எதிர்பார்க்கேலாது.

எனவே, சம்பந்தன் சரியான டீல் பேசி விசியம் கைமாறிற வரைக்கும் பேசாமல் மதில் மேல் பூனையாகத்தான் இருக்க முடியும். ஒருவேளை ஒண்டும் சரிவராட்டால் 'எங்களுக்கு ரண்டு கட்சியளிலையும் நம்பிக்கையில்லை. சனங்கள் தாங்களாகவே முடிவெடுக்கட்டும்' எண்டு சொல்லிப் போட்டு சிவனே எண்டிருப்பார்.






ஆக, ஆரை ஆதரிக்கிறது எண்டதை மக்களல்ல, புத்திசீவிகள் அல்ல, பிரதேச சபை உறுப்பினரல்ல, நாடாளுமன்ற உறுப்பினரல்ல டீலே தீர்மானிக்கும் எண்டதை ஒருக்கால் குறிச்சு வையுங்கோ மக்களே! மகா சனங்களே!!

சனங்கள் நம்பினாலும் சில விசியந் தெரிஞ்ச வியாபார அரசியல்வாதியள் இவையை நம்பத் தயாரில்லை போலையிருக்குது. அதனாலைதான் அவை தனியத் தனிய டீல் பேசுறதாய் இணையங்களிலை பேச்சடிபடுகுது. அடுத்து வரும் நாள்களிலை அந்தக் காட்சியளையும் நாங்கள் பாக்கலாம் போலையிருக்குது.

ஒண்ணுமே புரியலை உலகத்திலை... என்னமோ நடக்குது. மர்மமாய் இருக்குது. என்னைப் போலே ஏமாளி எவனும் இல்லே... எண்டு சந்திரபாபு அண்டைக்குச் சினிமாவிலை பாடின பாட்டை நாளைக்கு நாங்களும் பாடுவம். வாக்களிச்சு ஏமாறிற சனங்களின்ரை தேசியப் பாடலாய் அது இருக்கும்.




# ஆசைக்கும் அளவுண்டு

விந்திய மலைச்சாரலில் மகரிஷி என்றொரு சாது இருந்தார். அவர் ஐம்புலன்களையும் அடக்கி உலக ஆசைகளைத் துறந்தவர். தவத்தில் வலிமையுடைய சாந்த சொரூபி.

அவரிடம் நாற்பது சீடர்கள் கல்வி பயின்று வந்தனர். அப்பகுதியைச் சுற்றிலும் ஆண்ட குறுநிலமன்னர்கள், அமைச்சர்களின் குமாரர்களே பெருமளவில் அவரிடம் கல்வி பயின்றனர்.

மகரிஷி தனது சீடர்களுக்குப் பல விதமான கலைகளையும் கற்றுக் கொடுத்தார். அவரது சீடர்களில் ரிஷிபாலன், குருபாலன் என்ற இரண்டுபேர் மட்டும் அனைத்து கலைகளிலும் சிறந்து விளங்கினர். குருவின் சொற்படி கேட்டு நடந் தார்கள். கல்வியில் வல்லமை பெற்றுத் திகழ்ந்தார்கள்.

பயிற்சி முடிவடைந்ததும் அனைத்து சீடர்களும் குருவிடமிருந்து விடைபெற்றுச் சென்றார்கள். அப் போது மகரிஷி ரிஷிபாலனை யும்,குருபாலனையும் தனியே அழைத்தார். இருவரும் பவ்யமாய் குருபக்தியுடன் அவரிடம் வந்து நின்றனர்.

“சீடர்களே.. என்னிடம் நிறைய மாணவர்கள் கல்வி கற்றுச் சென்றுள்ளார்கள். ஆனால் உங்கள் இருவரைப் போலச்சிறந்த மாண வர்களை நான் இதுவரை கண்ட தில்லை. நீங்கள் என்னை விட்டுப் பிரியும் வேளை வந்து விட்டது. அதுதான் எனக்கு வருத்தமளிக் கிறது”

“ஆமாம் குருவே.. தங்களை விட்டுப்பிரியப் போவதுதான் எங்களுக்கும் வேதனையாய் உள் ளது”..என்றான் குருபாலன்.

“என்ன குருவே?..” இருவரும் அமைதியாகக் கேட்டார்கள்.

மகரிஷி தன் குடிலுக்குள் நுழைந்து பரணில் பத்திரப்படுத்தியி ருந்த இரண்டு பழைய மண்பானை களை எடுத்தார். அவற்றைத் தூசு தட்டி இரண்டு சீடர்களிடமும் கொடுத்தார். அந்த மண்பானைகளை வாங்கிக்கொண்ட இருவரும் ஒன்றும் புரியாமல் அவற்றைப்பார்த்தார்கள்.

“ என்ன குருவே இது?”

“சீடர்களே இவற்றை சாதாரண மண் பானைகள் என்று நினைத்து விடாதீர்கள். மந்திர சக்தி வாய்ந்த பானைகள், ஆபுத்திரன் கையி லிருந்த அமுதசுரபியைப் போன்று மிகவும் சக்தி வாய்ந்தவை. இவற்றை வைத்துக்கொண்டு நீங்கள் பயன டையலாம்”

“ எங்களுக்கு ஒன்றும் புரிய வில்லை குருவே?”

“அதாவது இந்தப் பானைகள் நான் செய்த அரும்பெரும் தவத் தால் கிடைத்தவை. ரிசியமுகப் பருவதத்தில் எட்டாண்டுகள் கடும் தவம் புரிந்தேன். அப்போது நான் சிவபெருமானிடமிருந்து இப் பானை களை வேண்டிப்பெற்றேன்.

நான் சொல்லும் மந்திரத்தைச் சொல்லிக்கொண்டு இப்பானை களுக்குள் கையை விட்டால், அள்ள அள்ளக் குறையாமல் அமுதம் போன்ற உணவுப் பதார்த்தங்கள் கிடைத்துக் கொண்டே இருக்கும்.”

“ ஆச்சரியமாக இருக்கிறதே குருவே?”

“ ஆம் ரிஷிபாலா, அந்தப் பானையை இப்படித்தா..” என்று அவனிடமிருந்து பானையை வாங்கி அவர்களிடம் அந்த மந்திரத்தைச் சொல்லி கொடுத்து விட்டுப் பானைக்குள் கையை விட்டார்.

அடுத்த விநாடி, அதில் தேன்குழல், அதிரசம், இனிப்பு உருண்டை , மெதுவடை போன்ற விதவிதமான எண்ணெய்ப் பதார்த் தங்கள் இருந்தன.

இரு சீடர்களும் ஆச்சரியத்தால் திறந்த வாயை மூடவில்லை

அவர்கள் கண்களை அவர்களா லேயே நம்பமுடியவில்லை .“இதோ பாருங்கள் .. பொங்கல் வரவைக்கிறேன்” என்று சொல்லிக் கொண்டு மந்திரத்தை உச்சரித்த வாறே பானைக்குள் கையைவிட அடுத்த விநாடி பானை முழுவதும் நெய் மணக்கும் சர்க்கரைப் பொங் கல் நிறைந்திருந்தது.

இந்தச் சக்தி வாய்ந்த பானை களை உங்களுக்கே தருகிறேன்.

“ இவற்றை வைத்து என்ன செய்வது குருவே?”

“ இப் பானைகளை வைத்துக் கொண்டு பொது மக்களுக்கு உதவி செய்யுங்கள். உலகிலேயே மிகவும் கொடுமையானது பசிக் கொடுமை தான் . இன்னும் ஆறு மாதங்களில் இப்பகுதியில் கடும் பஞ்சம் வர இருக்கிறது. இதை என் ஞான திருஷ்டியின் மூலம் ஏற்கனவே கண்டுவிட்டேன். ஆகவே பசியால் வாடும் ஏழைகளுக்கு இப்பானை களின் மூலம் உணவு வரவழைத்து அதைக் கொடுத்து நீங்கள் புண்ணி யம் தேடிக்கொள்ளுங்கள்.” என்றார்.

“மிக்க நன்றி குருவே1”

ஒரு எச்சரிக்கை இந்தப் பானையைப் பத்திரமாக வைத் துக் கொள்ளுங்கள். இது மண் பானை, இது தவறிக்கீழே விழுந்து உடைந்து விட்டால் இதிலிருந்து சக்தி வெளி யேறிவிடும். பின்னர் இதைப் பயன்படுத்த முடியாது” என்று எச்சரித்தார்.

இரு சீடர்களும் குரு விடமிருந்து பிரியாவிடை பெற்றுக்கிளம்பினர்

குருவின் வாக்குப்படியே அடுத்த ஆறு மாதங்களில் அப்பகுதியில் கடும்பஞ்சம் தாக்கியது. மக்கள் உண்ண உணவின்றி வருந்தினர். பண்ணையார்களின் தானியக்கிடங்கிலிருந்து கொண்டு வரப்பட்ட தானி யங்கள் அதிக விலைக்கு விற்கப்பட்டன. அதிகமான விலை கொடுத்து அவற்றை வாங்க இயலாத ஏழை மக்கள் பசியில் வாடினர். சிலர் துடிதுடித்துப் பசியாலேயே இறந்தும் போயினர்.

இந்நிலையில் ரிஷிபால னும், குருபாலனும் அப்பகு திக்கு வந்தார்கள்.

இருவரும் ஏழை மக்களுக்குச் சக்தி வாய்ந்த பானைகளின் உதவி கொண்டு உண்ண உணவளித்தார்கள். மக்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

நாட்கள் நகர்ந்தன

நாளடைவில் குருபாலனுக்கு புத்தி குறுக்கு வழியில் போனது இந்தப் பானையின் அபூர்வ சக்தியால் விளையும் உணவுப் பொருட்களை அதிக விலைக்கு விற்றால் நல்ல இலாபம் சம்பாதிக்கலாம். பிறகு பெரும் பணக்காரன் ஆகிவிடலாம். என்று கருதினான்.

எனவே, குருபாலன் தன் அதிச யப் பானையிலிருந்து வந்த உண வுப்பொருட்களை விற்பனை செய்ய ஆரம்பித்தான். பண வசதி உடை யோர் அவற்றைப் பெற்றார்கள். ஆனால் ஏழை மக்கள் பசியால் வாடினர்.

பக்கத்துக் கிராமங்களுக்குச் சென்றிருந்த ரிஷிபாலன் தன் பானையின் மூலம் வந்த உணவுப் பொருட்களை இலவசமாக மக்க ளுக்குக் கொடுத்தான. மக்கள் மத்தியில் அவன் மதிப்பு உயர்ந்தது.

தன் நண்பன் குருபாலன் உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் செய்தியைக் கேள்விப்பட்ட ரிஷிபாலன் மிகவும் வருந்தினான்.

குருபாலனைச் சந்தித்து உணவுப்பொருட்களை விற்க வேண்டாம். அவற்றை ஏழை மக்களுக்கு அளித்து உதவவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். ஆனால் ரிஷிபாலனின் பேச்சைக் குருபாலன் கேட்கவில்லை.

நாளடைவில் குருபாலன் பெரும் பணக்கரனாகி விட்டான். பெரிய மாளிகை கட்டினான். ஆனால் ரிஷி பாலனோ ஒரு துறவியைப் போலவே இருந்தான்.

ஒருநாள் ரிஷிபாலன் ஏழை விவசாயிகளுக்கு உணவளித்து விட்டுப் பானையைப் பத்திரப்ப டுத்தும் போது பானை உடைந்ததும் அதிலிருந்த சக்தி முழுவதும் போய் விட்டது. அது ஒரு சாதாரண உடைந்த பானையாகி விட்டது. .இதனை உணர்ந்த ரிஷிபாலன் துடிதுடித்துப் போய்விட்டான்.

“அய்யோ.. இனிமேல் ஏழை மக்களுக்கு எப்படி உதவக் போகிறேன்?” என்று அழுதே



விட்டான்.

ரிஷிபாலனின் பானை உடைந்த செய்தியைப் கேள்விப்பட்ட குரு பாலன் மனதிற்குள் பூரித்துப் போனான். இனிமேல் பசியால் வாடு பவர்கள் தன்னைத்தான் நாடி வரவேண்டும் என்று இறுமாப்பு அடைந்தான்.

பானை உடைந்த பின்பு ரிஷி பாலனின் நிலைமை பரிதாபமாகிப் போனது. அவன் வயிற்றுப் பசியால் தள்ளாடித் தள்ளாடித் தன் நண்பன் குருபாலனை பார்க்க வந்தான். வழி யில் பசியால் தவித்த ஒரு மூதாட் டியை கண்டு அந்த மூதாட்டியையும் அழைத்துக் கொண்டு வந்தான்.

தன் நண்பன் ரிஷிபாலனைக் கண்ட குருபாலனின் முகம் சுருங் கிப் போயிற்று.

“ என்ன வேலையாய் என்னைப் பார்க்க வந்திருக்கிறாய்?” என்று கேட்டான். குருபாலன்

நண்பனே என் பானை உடைந்து போய்விட்டது”

“ தெரியும்”

“ பசி வயிற்றைக் கிள்ளுகிறது எனக்கும் இந்த மூதாட்டிக்கும் உணவு வேண்டி உன்னிடம் வந்தோம்”

“ ஏய் மூடனே .. உன்னிடம் அந்தப்பானை இருந்தபோதே செல்வத்தைச் சேர்த்திருந்தால் உண வுக்காக என்னிடம் கையேந்தும் அவலநிலை உனக்கு வருமா? ஏதோ குரு சொன்னார். என்பதற்காக இப்படிப் பிழைக்கத் தெரியாமல் நடந்து கொண்டாயே? போ..போ.. உனக்கு உணவு கிடையாது, என்று அடிக்காத குறையாக விரட்டினான். குருபாலன். இதைச் சற்றும் எதிர் பாராத ரிஷிபாலனுக்கு ஏமாற்றமாய்ப் போய்விட்டது.

நண்பனே.. அப்படியெல்லாம் சொல்லாதே.. பசியால் எனக்குத் தலை சுற்றுகிறது மயக்கம் வரும் போலிருக்கிறது தயவு செய்து உதவு”

“ ச் சீ ... போ! என்று நாயை விரட்டுவது போல விரட்டினான். குருபாலன்

எனக்கு உணவளிக்காவிட்டாலும் பரவாயில்லை பசியால் வாடும் இம்மூதாட்டிக்காவது உணவளி ரிஷிபாலன் மன்றாடினான்.

“ என்னை என்ன ஏமாளி என்று நினைத்தாயா? பணமில்லாமல் ஒரு சோற்றுப் பருக்கைகூடத் தரமாட்டேன் போ இங்கிருந்து என்று விரட்டினான். குருபாலன்.

ஏமாற்றமடைந்த ரிஷிபாலன் அருகி லுள்ள தெப்பக் குளத்தில் வயிராற தண்ணீர் குடித்து விட்டு அம் முதாட்டியையும் அழைத்துக் கொண்டு ஒரு மாமர நிழலுக்கு வந்தான்.

பசிமயக்கம் அவர்களை ஆரத்தழுவியது இருவரும் அப்படியே கண்மூடினார்கள். சற்று நேரம் கழித்து ரிஷி பாலன் கண்திறந்து மூதாட்டியைப் பார்த்தான். ஆனால் மூதாட்டி அசைவற் றுக்கிடந்தாள்.

“பாட்டி, பாட்டி..” என்று எழுப்பினான்.

ஆனால்,

பாவம் அந்த மூதாட்டி பசிக்கொடுமை தாங்காமல் இறந்து போயிருந்தாள்.

ரிஷிபாலன் மூதாட்டி இறந்ததை நினைத்துப் புலம் பினான். ஊர்மக்கள் அவ் விடத்தில் கூடி விட்டனர்.

அப்போது அக் கிராமத்தின் வழியாக குரு மகரிஷி வந்தார்.

கூட்டத்தை விலக்கிக் கொண்டு பார்த்த அவருக்கு அதிர்ச்சியாக இருந்தது.

“ அம்மா..” என்று அழுத வாறு அம் மூதாட் டியைத் தூக்கித் தம் மடியில் வைத் துக்கொண்டார்.

அப்போதுதான் ரிஷி பாலனுக்கு இறந்த போன மூதாட்டி தன் குருநாதனின் தாய் என்ற விவரமே புரிந்தது.

அவரிடம் நிகழ்ந்தவற்றை ஒன்று விடாமல் கூறினான். ரிஷிபாலன் குருபாலனின் பேராசையை அறிந்து கொண்ட மகரிஷி அவனது சொத் துக்கள் எல்லாம் அழிந்து போய் சக்தி வாய்ந்த பானை உடைந்து போய் அவனை ஒரு பிச்சைக் காரனாகும் படி சபித்தார்.

அடுத்த விநாடி குருபாலன் பிச்சை சக்காரனானான். பின்னர் மகரிஷி தன் தாயின் இறுதிச் சடங்குகளை முடித்தார். அவர் புறப்படும் போது தன் வாக்கைத் தவறாத உண்மை யான சீடன் ரிஷிபாலனுக்கு பழைய பானையை விடச்சக்தி வாய்ந்த தங்கப்பானையைக் கொடுத்து ஏழைமக்களுக்கு உதவும் படி கேட்டுக்கொண்டு விடை பெற்றார்.!

“ஆசைக்கும் அளவுண்டு பேராசை பெருநஷ்டம்!”

## பொலிஸ் நடமாடும் சேவை

கைதடி மேற்கு சரஸ்வதி சன சமூக நிலையத்தில் சாவகச்சேரி பொலிஸார் நடமாடும் சேவை ஒன்றை நடாத்தி வருகின்றனர்.

கடந்த 25 ஆம் திகதி ஆரம்பித்த இந்த நடமாடும் சேவை எதிர்வரும் 25ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

24 மணி நேரமும் பொலிஸாரது சேவையை இந்தக் காலப் பகுதியில் பெற்றுக் கொள்ள முடிவதுடன் காணாமற் போன ஆவணங்களின் பிரதியைப் பெறுவதற்கான பொலிஸ் முறைப்பாட்டு பிரதியைப் பெற்றுக் கொள்ளல், முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளல் போன்ற சேவைகள் இங்கு ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

தமிழ்மொழியில் சகல முறைப்பாடுகளும் பதியப்பட்டு பிரதிகள் வழங்கப்படுகின்றன. (90)

## சிறுநீரக நோயாளிகளுக்கு இரத்த மாற்று சிகிச்சை

வவுனியா பொது வைத்தியசாலை வளாகத்தில் சிறுநீரக நோயாளர்களுக்கான இரத்தமாற்று சிகிச்சை நிலையம் நாளை புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

வடக்குமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர்.ப.சத்தியலிங்கம் விடுத்த அழைப்பின்பேரில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனினால் இச்சேவை நிலையம் பொதுமக்களின் பாவனைக்கென சம்பிரதாயபூர்வமாக கையளிக்கப்பட இருக்கிறது. இச்சேவை நிலையத்தை அமைப்பதற்காக ரூ.8.5 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இலங்கையில் சிறுநீரக நோயினால் பாதிக்கப்படுகின்றவர்களின் எண்ணிக்கையில் வவுனியா மாவட்டம் இரண்டாவது இடத்திலுள்ளது. தற்போது இந்த இரத்தமாற்று சிகிச்சைக்காக நோயாளிகள் அனுராதபுரம் மற்றும் கண்டி மாவட்டங்களிற்கே சென்று சிகிச்சை பெற்று வருகிறார்கள். எனவே இவ்வாறான சிகிச்சை நிலையம் வவுனியாவில் திறக்கப்படுவது நோயாளிகளுக்கு பேருதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இத்திறப்பு விழாவினைத் தொடர்ந்து வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள பாலூட்டும் தாய்மார்களுக்கான முகாமைத்துவ நிலையம் மற்றும் இளைஞர்நல நட்புறவு நிலையம் என்பனவும் திறந்துவைக்கப்படவுள்ளன.

## பிறருக்கு பயன்படத்தக்க வகையில் வாழ்க்கை அனுபவத்தை எழுதவேண்டும்

### பேராசிரியர் தேவராஜா தெரிவிப்பு

ஈழத்து அறிஞர்கள் தமது வாழ்க்கை அனுபவங்களைப் பிறருக்குப் பயன்படத்தக்க வகையில் வரலாறாகவோ சுயசரிதையாகவோ எழுதுவதற்கு முன்வரவேண்டும். அந்த வகையில் தமிழ்த்தொண்டர் ஐ.தி.சம்பந்தன் தனது நீங்காத நினைவுகள் மூலம் சிறந்த வாழ்க்கை அனுபவங்களை வரலாற்றுப் பதிவாகத் தந்துள்ளார்.

இவ்வாறு தமிழ்த் தொண்டர் ஐ.தி.சம்பந்தனின் நீங்காத நினைவுகள் நூல் வெளியீட்டு விழாவில் தலைமையுரையாற்றிய யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வணிக முகாமைத்துவத் துறைமுன்னாள் தலைவர் பேராசிரியர் க.தேவராஜா குறிப்பிட்டார்.

இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வில் பேராசிரியர் தேவராஜா தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழ்த்தொண்டர் ஐ.தி.சம்பந்தன் ஓர் சிறந்த அரசியல் வாதி, தொழிற்சங்கவாதி, ஆன்மீகவாதி, இலக்கியவாதி, ஊடகவியலாளர் என்று பன்முக ஆளுமை மிக்கவர். இவர் புலம் பெயர் நாட்டில் களைப்படையாது தனது ஆற்றலும் அனுபவமும் கொண்டு நல் உள்ளத்துடன் பல்வேறு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இவரது சுடரொளி என்ற சஞ்சிகை நீண்டகாலமாக வெளிவந்தது. சுடரொளி வெளியீட்டுக் கழகம் அமரர் க.சி.குலரத்தினம் எழுதிய "செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்" "தமிழ்தந்த தாத்தாக்கள்" ஆகிய இரு அரிய பொக்கிசமாகக் கருதப்படும் நூல்களை வெளியிட்டது.

இவர் இன்று அறிமுகவிழா நடாத்தும் நீங்காத நினைவுகள் தனது அனுபவங்கள் ஊடாக ஈழத்தமிழர் வரலாற்றை எதிர் காலச் சந்ததிக்கு எடுத்துரைக்கும் நல்லதோர் ஆவணமாக அமைகிறது. இந்நூல் இங்கிலாந்தில் வெளியிடப்பட்டு இலங்கையில் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் அறிமுக விழாக்கள் நடாத்தப்படுகிறது.

புலம் பெயர்ந்த நிலையில் தாய்த்தமிழ் நாட்டின் உயர்வுக்காக தனி மனித சாதனையாளராக பாடுபட்டு வரும் இவரின் பவளவிழா காலத்தில் கனடா தமிழர் தகவல் மையம் விருதினையும் தங்கப்பதக்கத்தையும் வழங்கிக் கௌரவித்தமை பெருமைக்குரியது எனவும் குறிப்பிட்டார். (10)

## பாதிக்கப்பட்ட சொத்துக்கள் மாதர் சங்கத்தால் பதிவு

தொடரும் பருவமழையின் காரணமாக பல்வேறு பாதிப்புக்களுக்குட்பட்ட அச்சுவேலி தெற்கு ஜே/286 கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட 292 குடும்பங்கள் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மாதர் அபிவிருத்திச் சங்கத்திடம் தமக்கு ஏற்பட்ட சொத்திழப்புக்கள் மற்றும் ஏனைய பாதிப்புக்கள் தொடர்பாக பதிவுகளை மேற் கொண்டுள்ளதாக மாதர் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

மழை வெள்ளம் காரணமாக பாதிப்புக்குள்ளான மக்கள் தொடர்பான தகவல்களை சேகரித்து வரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மாதர் அபிவிருத்திச் சங்கம் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (03)

## வன்முறைக்கு எதிரான ஊர்வலம்



(வவுனியா)

பெண்கள் மீதான வன்முறைக்கு எதிராக வவுனியா, சிதம்பரபுரம் பெண்கள் வள நிலையத்தின் ஏற்பாட்டில், ஊர்வலம் ஒன்று வவுனியா நகரில் கடந்த சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பெண்கள் மீதான வன்முறைக்கு எதிராக பெண்கள் வள நிலையமானது 16 நாள் செயற்பாட்டினை மேற்கொண்டு வருகின்றது. அதன் ஒரு அங்கமாக, வவுனியா நகரில் பெண்கள் மீதான வன்முறைக்கு எதிரான ஊர்வலம் வவுனியா நகரின் பிரதான வீதி வழியாக வந்து நகரசபை வளாகத்தை சென்றடைந்தது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்கள், பெண்கள் மீதான வன்முறையை ஒழிப்போம், வன்முறைகள் இல்லாத சமுதாயத்தை உருவாக்குவோம், பெண்கள் நாட்டின் கண்கள், பெண்களை தாயாய், சகோதரியாய் நினையுங்கள் போன்ற கோஷங்களை எழுப்பியதுடன், பதாதைகளையும் தாங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பதிவிறக்கப் பெட்டகம்

தமிழ்ச் சூழலில் நான் எங்கே இருக்கிறேன் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். Transgressive writing என்று ஒரு பிரிவு இருக்கிறது. துரதிர்ஷ்டவசமாகவோ அதிர்ஷ்டவசமாகவோ என் இளம் பிராயத்திலிருந்தே நான் அந்த வகையில்தான் எழுதிக் கொண்டிருக்கிறேன். இந்தப் பாணி இலக்கியத்தை எழுதுபவர்கள் உலகிலேயே நான்கைந்து பேர் தான் இருக்கிறார்கள். அவர்களில் அடியேனும் ஒருவன்.

சரி, ட்ரான்ஸ்கிரெஸிவ் எழுத்து என்றால் என்ன? இதற்கு எனக்குத் தமிழ் வார்த்தை தெரியவில்லை. இவ்வகை எழுத்தில் வரும் கதாபாத்திரம் சமூகத்தால் விலக்கப்பட்ட, கூடாத சமாச்சாரங்களை செய்பவனாக இருப்பான். உதாரணம், ட்ரக் அடிக்ட். வில்லியம் பர்ரோஸ் ஒரு ட்ரான்ஸ்கிரஸெவ் எழுத்தாளர். அவருடைய நேகட் லஞ்ச் என்ற நாவலில் வரும் நாயகன் ட்ரக் அடிக்ட். இதை பர்ரோஸ் எப்படி எழுதினார்? அவரே ட்ரக் அடிக்டாக இருந்தவர். தினமும் போதை ஊசியை தன் உடம்பில் தானே போட்டுக் கொண்டு வாரம் ஒருமுறை சாப்பிட்டுக் கொண்டு வாழ்ந்தார். அப்படி வாழ்ந்த போது தன் மனதில் என்னென்ன தோன்றியதோ அதையெல்லாம் எழுதினார். அதுதான் அந்த நாவல்.

அந்த நாவலை நீங்கள் எந்தப் பக்கத்திலிருந்தும் படிக்கலாம். ஒரு கட்டத்தில் ஊசி போடுவதற்குத் தன் உடம்பில் இடமே இல்லாமல் கஷ்டப்பட்டேன் என்றும் எழுதினார். ஏன் இப்படி? அமெரிக்க அரசாங்கம் உலக நாடுகளில் செய்யும் ராணுவ அட்டூழியங்களை எதிர்த்தே இதைச் செய்தேன் என்று சொன்னார். நான் போட்டுக் கொள்ளும் ஒவ்வொரு போதை ஊசியும் அமெரிக்க ராணுவம் பிற நாடுகளில் போடும் ஒவ்வொரு குண்டுக்கு சமம் என்றார்.

நேகட் லஞ்ச்சை ஆங்கிலத்தில் எழுதப்பட்ட நூறு சிறந்த நாவல்களில் ஒன்றாக டைம் பத்திரிகை பட்டியல் இட்டிருக்கிறது. ஆனால் எழுதப்பட்ட காலத்தில் இது அமெரிக்காவில் வெளிவர முடியவில்லை. அப்போது அங்கே ஆபாச எழுத்துத் தடைச் சட்டம் அமலில் இருந்ததால் பாரிஸில்தான் வெளியாயிற்று. பிறகு நான்கு ஆண்டுகள் சென்றே அமெரிக்காவில் வெளியானது.

எல்லா புனிதங்களுக்கும் எதிரான ட்ரான்ஸ்கிரெஸிவ் எழுத்தின் நாயகர்கள் சமூக விரோதிகளாக இருப்பார்கள். மனநோயாளிகளாக இருப்பார்கள். பல்வேறு குற்றச் செயல்களிலும் ஈடுபடுபவர்களாக இருப்பார்கள்.

இப்படிப்பட்ட ட்ரான்ஸ்கிரெஸிவ் எழுத்தை எழுதும் என்னையும் சமூக மதிப்பீடுகளுக்கு எந்தப் பங்கமும் வராமல் எழுதும் மற்ற எழுத்தாளர்களையும் இந்த சமூகம் எப்படி எதிர்கொள்கிறது? ஜெயமோகன் தன்னுடைய ஒரு நாவலை தன் மாமனாருக்கு சமர்ப்பணம் செய்திருக்கிறார். நான் அப்படிச் செய்ய முடியுமா? செய்தால் அந்த நாவலைப் படித்து விட்டு என் மாமனார் என்னை அவர் வீட்டுக்குள்ளேயே அனுமதிக்க மாட்டார். ஒரு காட்சியைக் கற்பனை செய்து பாருங்கள். உங்கள் அலுவலக மேஜையில் ஒரு பக்கம் ஜெயமோகனின் மகாபாரதத் தொகுதிகளும், விஷ்ணுபுரமும் பக்கத்திலேயே என்னுடைய ராஸ லீலாவும், காமரூப கதைகளும் இருந்தால் இரண்டுக்கும் அந்த இடத்தில் எப்படிப்பட்ட மரியாதை கிடைக்கும்? யோசியுங்கள்.

ஜெயமோகனுக்குக் கடிதம் எழுதும் ஒரு இளைஞர் வெண்முரசுவை தானும் தன் தாயாரும் சேர்ந்து வாசிப்பதாக எழுதுகிறார். இதையெல்லாம் காமரூப கதைகள் எழுதிய நான் எதிர்பார்க்க முடியுமா? வீட்டில் என் நாவலை தாயாருக்கும் மனைவிக்கும் தெரியாமல் ஒளித்து ஒளித்துத்தானே படிக்க முடியும்? நீலப்படங்களை ஒத்த தமிழ் சினிமாவை குடும்பமே உட்கார்ந்து பார்க்கும். ஆனால் புத்தகம் என்று வந்து விட்டால் ஒளித்துத்தான் படிக்க வேண்டும்.

அசோகமித்திரன் வெண்முரசு தன் மனைவிக்குப் புரியவில்லை என்று சொல்கிறார். ஆனால் என் நாவல்களில் ஒரு அட்சரத்தைக் கூட அசோகமித்திரன் படித்திருக்க மாட்டார். ஒரு ட்ரான்ஸ்கிரெஸிவ் எழுத்தாளனுக்குக் கிடைப்பது விமர்சனம் கூட அல்ல; முழுமையான புறக்கணிப்பு.

இருந்தாலும் ஒரு விஷயத்துக்காக நான் சந்தோஷப்பட்டுக் கொள்ளலாம். லத்தீன் அமெரிக்க நாடுகளில் இப்படிப்பட்ட எழுத்தாளர்கள் கொல்லப் படுவார்கள் அல்லது, நாடு கடத்தப்படுவார்கள். அப்படி எதுவும் எனக்கு நடக்கவில்லை.

– சாரு நிவேதிதா

# 10 ஆம் இடத்தில் இலங்கை



2015ஆம் ஆண்டில் சுதந்திரமாகவும் அமைதியாகவும் சுற்றுலா செல்லக்கூடிய 10 நாடுகளின் வரிசையில் இலங்கை இடம்பிடித்துள்ளது.

அமெரிக்க பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் இலங்கைக்கு 10ஆவது இடம் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இதில் முதலிடம் ஐஸ்லாந்துக்கு கிடைத்துள்ளது. மொரக்கோ, வியட்நாம், அமெரிக்கா, தஸ்மேனியா, கொலம்பியா, ஜப்பான், ஆர்ஜன்டீனா, நேபாளம் ஆகிய நாடுகளும் இதில் இடம்பிடித்துள்ளன.

# இலங்கை ஜனாதிபதியாக மகிந்தவை ஜனவரி 9 இல் ஒபாமா பார்க்கலாம்

## இப்படி கூறுகிறார் டளஸ்

(கொழும்பு)

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஜனவரி 9 ஆம் திகதி இலங்கை ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்சவை பார்க்கலாம் என அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

மாத்தறை அகுரஸ்ஸையில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தின் போது அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதிக்கு கூறாமலேயே கட்சியில் இருந்து விலகி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிறார்

எனினும், ஜனாதிபதி மகிந்தவுக்கு கூறிய பின்னரே,




சரத் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார்.

பொன்சேகாவை பொறுத்த வரை அவர், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் முன்னர், மரியாதையின் அடிப்படையில் அலரிமாளிகைக்கு சென்று ஜனாதிபதித் தேர்தலில் தாம் போட்டியிடப் போவதைக் கூறினார்.

எனினும் பொதுவேட்பாளர் மைத்திரிபால எம்முடன் ஒன்றாக இருந்து தேனீர் அருந்திவிட்டு சொல்லாமலேயே அரசாங்கத்தில் இருந்து விலகிவிட்டார் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனவரி 9ஆம் திகதியன்று சி.என்.என் தொலைக் காட்சி செய்தியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை இலங்கை மக்கள் மீண்டும் தெரிவுசெய்துள்ளனர் என்ற விடயத்தை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா காணக்கூடியதாக இருக்கும் என்று அழகப்பெரும தெரிவித்தார்.

# பெரதெனிய பூங்காவில் பாதுகாப்பு அதிகரிப்பு



பெரதெனிய பூங்காவின் பாதுகாப்பை பலப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்பொருட்டு தற்போது தனியார் பாதுகாப்பு பிரிவினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பூங்காவின் பணிப்பாளர் சிறில் விஜேசுந்தர தெரிவித்தார்.

பெரதெனிய பூங்காவில் காணப்பட்ட வெள்ளை சந்தன மரங்கள் இரண்டு வெட்டப்பட்ட சம்பவங்கள் கடந்த தினத்தில் பதிவாகியிருந்தன.

இந்த நிலையிலேயே, பூங்காவின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# சந்தர்ப்பவாத அரசியல் முடிவை முஸ்லிம் காங்கிரஸ் எடுக்காது

## என்கிறார் ஹஸன் அலி

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்ற தீர்மானத்தை இன்னும் எடுக்கவில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூறிவருகின்றது.

இந்தப் பின்னணியில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை, அவரின அழைப்பின் பேரில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் கடந்த



சனிக்கிழமை மாலை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர்.

நாட்டின் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் இந்த சந்திப்பின் போது, ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்ததாக முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பைத் தொடர்ந்து, முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் விரைவில் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஹசன் அலி மேலும் தெரிவித்தார்.

அமைச்சர்களுடன் நடாத்தப்படுகின்ற பேச்சுவார்த்தையின் பின்னரே, யாரை ஆதரிப்பது என்று முஸ்லிம் காங்கிரஸின் உச்சபீடம் கூடி இறுதித் தீர்மானத்தை எடுக்கும் என்றும் அவர் கூறினார்.

வெல்லுகின்ற பக்கம் போக வேண்டும், தோற்கின்ற பக்கம் போகக்கூடாது என்பது சந்தர்ப்பவாத அரசியல். அவ்வாறான ஒரு முடிவை நாங்கள் எடுக்கத் தேவையில்லை என்று இந்த சந்திப்பு குறித்து கருத்து வெளியிட்ட ஹசன் அலி கூறினார்.

# 50 ஆவது ஆண்டில் கால் பாதிக்கும் திருமறைக் கலாமன்றம்

கலைக்காக தன் வாழ்வை அர்ப்பணித்த குருவான அருட்தந்தை நீ.மரியசேவியர் அடிகளாரின தலைமைத்துவத்தில் 1965 இல் தோற்றம் பெற்ற திருமறைக் கலாமன்றம் நாளை 3ஆம் திகதி மரியசேவியர் அடிகளார் தனது 75 ஆவது அகவையை நிறைவு செய்யும் நாளில், மன்ற தினத்தை கொண்டாடும் நாளில் பொன்விழா ஆண்டில் கால் பதிக்கின்றது.

கடந்த ஐம்பது ஆண்டுகளாக திருமறைக் கலாமன்றம் என்னும் கலைக்குடும்பம் பன்முகப்பட்ட கலைப்பணிகளில் தன்னை அர்ப்பணத்துடன் ஈடுபடுத்தி உள்ளது. 'கலைவழி இறைபணி என்ற தனது விருதுவாக்கிற்கு, கலைகள ஊடாக சமூகத்தில் நல்விழுமியங்கள் பற்றிய விழிப்புணர்வை ஊட்டி, சமூக மேம்பாட்டுக்காக உழைத்து வருவது என்ற பொருளைக் கொடுத்து இதுகாறும் செயற்பட்டு வந்துள்ளது.

ஒருபுறம், தமிழ்க் கலைகளின் பல்வேறு வடிவங்களையும் காத்தும் , பேணி வளர்த்தும், புதுமெருகூட்டியும் வந்துள்ளது. மறுபுறம், பேரவலத்தால் பாதிக்கப்பட்ட நம் சமூகத்தை ஆற்றுப்படுத்தியும், இலங்கைத்தீவில் பிளவுபட்டு நிற்கும் சமூகங்களை இணைக்கும் பாலமாக விளங்கியும், கலை உலகில் இணக்கப்பாட்டுக்கு ஓர் எடுத்துக்காட்டாகவும் செயற்பட்டுள்ளது.

இந்த மகிழ்ச்சி நிறைந்த பொன்வேளையில் இதுவரை காலமும் மன்றத்தின் பணிகள் சிறந்தோங்க துணைநின்ற எல்லோருக்கும் திருமறைக் கலாமன்றம் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், எதிர் வரும் தமிழர் திருநாளான தைப் பொங்கல் நாளில் இருந்து பொன் விழா ஆண்டு நிகழ்வுகளை ஆரம்பிக்கவுள்ளது.

பொன் விழாவை சிறப்பிக்கும் முகமாக பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன, அவற்றுள் சிறப்பாக பொன்விழா ஆண்டு நிகழ்வுகள் ஓகஸ்ட மாதத்தில் மூன்று நாட்களுக்கு நடை பெறும். இவைதவிர, ஈழத்து இசைக் கலைஞர்கள் பங்கேற்கும் இசைத்திருவிழா, நடனக் கலைஞர்கள் பங்கேற்கும் நடன சங்கமம், ஈழத்துப் படைப்பாளிகள், கலைஞர்கள் ஒன்றிணையும் கலை,இலக்கிய ஆயவரங்கு, தமிழ்விழா போன்றவையும் இன்னும் பல நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வுகள சிறப்புற அனைவரது ஒத்துழைப்பையும் திருமறைக் கலாமன்றம் எதிர்பார்த்து நிற்கின்றது.

நாளைய தினம் புதன் கிழமை (03.12.2014) காலை 6.45 மணிக்கு குருநகர் புதுமை மாதா ஆலயத்தில் நன்றித் திருப்பலியும் மு.ப 10.30 மணிக்கு இரத்ததானமும் பி.ப 4.30 மணிக்கு பொது வழிபாடும் திருமறைக் கலாமன்ற பணியகத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வுகளில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலவச சீருடை விநியோகம் தேசிய நிகழ்வு கொழும்பில்

அரச பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு 2015 ஆம் ஆண்டுக்கான இலவச சீருடை விநியோகிக்கும் தேசிய நிகழ்வு கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் இன்று நடைபெறவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

அரச பாடசாலைகளில் கல்வி பயிலும் சுமார் 40 இலட்சம் மாணவர்களுக்கு இவ் இலவச சீருடை வழங்குவதற்காக 234 கோடி ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது

# அனுராதபுரத்தில் பிரசாரம் ஆரம்பம்



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஆதரித்து இடம்பெறும் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் எதிர்வரும் 11ஆம் திகதி அனுராதபுரதத்தில ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ள 20இற்கும் மேற்பட்ட தேர்தல் பிசாரக் கூட்டங்களில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்துகொள்ளவுள்ளார். இதனைத் தவிர மாவட்டங்கள் தோறும் மக்கள் பேரணிக் கூட்டங்களும், அரசாங்கத்தினால் மக்களுக்காக மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்தும் பிரதேச வாரியான கூட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# மைத்திரியை தோற்கடிப்பதற்கு மகாசங்கத்தை அணி திரட்டுவோம்

## ராவண பலய கூறுகிறது



(கொழும்பு)

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை தோல்வியடையச் செய்ய மகா சங்கத்தினரை அணி திரட்டப் போவதாக ராவண பலய அமைப்பின் பொதுச் செயலாளர் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

அவ்வமைப்பின் இரண்டாவது வருடாந்த பொதுக் கூட்டம் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே தேரர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆட்சியில் அமர்த்துவதற்கு புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் பின்னால் இருந்து செயற்படுவதாகவும் தேரர் மேலும் கூறியுள்ளார்.

இந்தக் கூட்டத்தின் போது பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அடிப்படைவாதக் குழுக்கள் மேற்கொள்ளும் மத மாற்றத்தை நிறுத்துவதற்கு தேவையான சட்டத்தை நாட்டில் அமுல்படுத்தல், பௌத்த மதத்தை நிந்திப்பதற்கு எதிராக சட்டம் நிறைவேற்றல், பௌத்த விகாரைகளைப் பாதுகாப்பதற்கான புதிய சட்டம் கொண்டுவருதல், பௌத்த சாசனத்தைப் பாதுகாப்பதற்கான சட்டம் கொண்டுவருதல், நாட்டுக்குப் புதிய அரசியல் யாப்பொன்றை அறிமுகம் செய்தல் போன்ற யோசனைகள். இந்த மாநாட்டின் போது முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த யோசனைகளை அடுத்துவரும் சில நாட்களில் ஜனாதிபதியிடம் முன்வைக்க உள்ளதாகவும் சிங்கள ஊடகமொன்று அறிவித்துள்ளது.

# க.பொ.த(சா/த) மாணவர்களுக்கான முன்னோடிப்பரீட்சை.

# G.C.E. (O/L) Examination model Paper

## வணிகக்கல்வி

01. தனிவியாபாரியான முருகனின் ஏடுகளில் இருந்து 31.12.2011 இல் பின்வரும் பரீட்சை மீதி எடுக்கப்பட்டது

| விபரம் | பே.ப | வரவு (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|---|
| 01.01.2011 இல் தொக்கு | | 50,000.00 | |
| சம்பளம் | | 8,000.00 | |
| மூலதனம் | | | 80,000.00 |
| எழுதுகருவி | | 2,000.00 | |
| கொள்வனவு | | 35,000.00 | |
| உட்சுமை கூலி | | 3,500.00 | |
| விற்பனை | | | 47,500.00 |
| இறைகள் | | 1,500.00 | |
| அறவிடமுடியாக்கடன் | | 1,250.00 | |
| போக்குவரத்துச் செலவு | | 500.00 | |
| பெற்றகழிவு | | | 600.00 |
| கடன்பட்டோர் | | 6,000.00 | |
| கடன்கொடுத்தோர் | | | 7,000.00 |
| காணிகட்டடம் | | 27,350.00 | |
| | | 135,100.00 | 135,100.00 |

மேலதிகதகவல்கள

- 31.12.2011 இல் இருப்புரூபா 25,000
- அட்டுறு இறைகள் ரூபா 250.00
- முற்பணச்சம்பளம் ரூபா 750.00

வேண்டப்படுவது :-

31.12.2011 இல் முடிவடைந்தஆண்டுக்கான வியாபார இலாபநட்டக் கணக்கு

31.12 2011 இல் உள்ளவாறானஐந்தொகை

02. தனிவியாபாரியானவேலனின் ஏடுகளிலவ் இருந்து 31.12.2011 இல் பின்வரும் பரீட்சைமீதி எடுக்கப்பட்டது

| விபரம் | பே.ப | வரவு (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|---|
| 01.01.2011 இல் தொக்கு | | 35,000.00 | |
| கொள்வனவுகள் | | 60,000.00 | |
| விற்பனைகள் | | | 124,000.00 |
| கூலிகள் | | 1,200.00 | |
| சம்பளம் | | 10,000.00 | |
| கப்பல் கட்டணம் | | 5,000.00 | |
| மின்சாரம் | | 2,500.00 | |
| பெற்றவாடகை | | | 4,000.00 |
| உட்காவுகை | | 1,250.00 | |
| வெளிக்காவுகை | | 2,400.00 | |
| உட்திரும்பல் | | 5,000.00 | |
| வெளித்திரும்பல் | | | 6,000.00 |
| சில்லறைவருமானம் | | | 1,600.00 |
| விளம்பரம் | | 3000.00 | |
| உபகரணச்செலவு | | 4250.00 | |
| தளபாடம் | | 45,000.00 | |
| மூலதனம் | | | 94,000.00 |
| மோட்டார் வான் | | 55,000.00 | |
| | | 229,600.00 | 229,600.00 |

மேலதிகதகவல்கள

- 31.12.2011 இல் தொக்குரூபா16,500.00
- அட்டுறுவிளம்பரம் ரூபா 2000.00
- அட்டுறுமின்சாரம் ரூபா 1,500.00

வேண்டப்படுவது

- 31.12.2011 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார இலாபநட்டக்கணக்கு
- 31.12.2014 இல் உள்ளவாறானஐந்தொகை

03. தனிவியாபாரியான கந்தனின் ஏடுகளில் இருந்து 31.12.2011 இல் பின்வரும் பரீட்சை எடுக்கப்பட்டது

| விபரம் | பே.ப | வரவு (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|---|
| மூலதனம் | | | 140,000.00 |
| கொள்வனவுகள் | | 75,000.00 | |
| விற்பனைகள் | | | 100,000.00 |
| காணிகட்டடம் | | 65,000.00 | |
| 01.01.2011 இல் இருப்பு | | 30,000.00 | |
| தளபாடம் | | 25,000.00 | |
| கடன்பட்டோர் | | 15,000.00 | |
| வங்கி | | 60,000.00 | |
| காசு | | 12,500.00 | |
| பெற்றவட்டி | | | 2,500.00 |
| காப்புறுதி | | 1,850.00 | |
| கடன்கொடுத்தோர் | | | 20,000.00 |
| காகிதாதிகள் | | | |
| உட்காவுகை | | 1,500.00 | |
| வெளிக்காவுகை | | 2,350.00 | |
| வங்கிக்கட்டணம் | | 450.00 | |
| விளம்பரம் | | 4,100.00 | |
| வங்கிக்கடன் | | | 32,500.00 |
| | | 295,000.00 | 295,000.00 |

மேலதிகதகவல்கள

- 31.12.2011 இல் கையிருப்பு ரூபா 12,750.00
- பெறவேண்டிய வட்டிரூபா 750.00
- முன்னதாக செலுத்திய விளம்பரம் ரூபா 100.00
- கடன்பட்டோரில் 950.00 ரூபாவினை அறவிடமுடியாக்கடனாகப் பதிலளிக்குக

வேண்டப்படுவது :-

31.12.2011 இல் முடிவடைந்தஆண்டுக்கான வியாபார இலாபநட்டக் கணக்கு

31.12 2011 இல் உள்ளவாறானஐந்தொகை

04. தனிவியாபாரியான வேலவனின் ஏடுகளில் இருந்து 31.12.2011 இல் பின்வரும் பரீட்சைமீதி எடுக்கப்பட்டது

| விபரம் | பே.ப | வரவு (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|---|
| விற்பனை | | | 195,000.00 |
| 01.01.2011 இல் இருப்பு | | 14,500.00 | |
| கடன்பட்டோர் | | 16,500.00 | |
| கொள்வனவு | | 20.000.00 | |
| வங்கி | | 10,000.00 | |
| எழுதுகருவி | | 5,000.00 | |
| பெற்றவாடகை | | | 14,500.00 |
| கடன்கொடுத்தோர் | | | 14,500.00 |
| வங்கிக் கட்டணம் | | 500.00 | |
| சம்பளம் | | 17,500.00 | |
| மூலதனம் | | | 245,000.00 |
| காசோலைப் புத்தகக் கட்டணம் | | 725.00 | |
| காப்புறுதி | | 635.00 | |
| காசு | | 20,000.00 | |
| வெளிச்சுமை கூலி | | 4000.00 | |
| உட்சுமை கூலி | | 3,000.00 | |
| காணிகட்டடம் | | 200,000,00 | |
| பொறித்தொகுதி | | 150,000.00 | |
| | | 461,860,00 | 461,860,00 |

31.12.2011 இல் முஇருந்தபடிகையிருப்பு ரூபா 9,000.00

அறவிடமுடியாத முடியாக்கடனாக ரூபா 1,000.00 பதிவளிக்கப்படல் வேண்டும்

உரிமையாளர் சொந்தத்தேவைக்கு எடுத்துக்கொண்ட சரக்குரூபா 5,000.00 ஏடுகளில் இடம்பெறவில்லை

நிலையான சொத்துக்களுக்கு கீழ்வருமாறு தேய்விடுக

காணிகட்டடம் கிரயத்தில் 15மு

பொறித் தொகுதிகிரயத்தில் 10மு

கொடுக்கவேண்டிய காப்புறுதி ரூபா 125.00

பெறவேண்டிய வாடகை ரூபா 545.00

வேண்டப்படுவது

31.12.2011 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார இலாபநட்டக்கணக்கு

31.12.2011 இல் உள்ளவாறான ஐந்தொகை

05. தனிவியாபாரினவேல்முருகனின் ஏடுகளில் இருந்து 31.12.2011 இல் பின்வரும் பரீட்சைமீதி எடுக்கப்பட்டது

| விபரம் | பே.ப | வரவு (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|---|
| கட்டடவாடகை | | 10,000.00 | |
| 01.01.2011 இல் இருப்பு | | 55,000.00 | |
| சம்பளம் | | 22,500.00 | |
| வங்கிக் கடன் வட்டி | | 4,400.00 | |
| கொள்வனவு | | 60,000.00 | |
| காணிகட்டடம் | | 130,000.00 | |
| பொறித் தொகுதி | | 175,000.00 | |
| 01.01.2011 இல் தேய்மானஏற்பாடு | | | 37,500.00 |
| காணிகட்டடம் | | | 32,500.00 |
| பொறித் தொகுதி | | | 80,000.00 |
| 8 மூ வங்கிக் கடன் | | 11,000.00 | |
| விற்பனையாளர் பணிசை | | 40,000.00 | |
| கடன்பட்டோர் | | | 40,000.00 |
| கடன்கொடுத்தோர் | | 10,000.00 | |
| காப்புறுதி | | 7,500.00 | |
| விளம்பரம் | | 1,500.00 | |
| அறவிடமுடியாக்கடன் | | | 150,000.00 |
| விற்பனை | | 12,000.00 | |
| உட்திரும்பல் | | | 13,000.00 |
| பெற்றகழிவு | | | 170,000.00 |
| 01.01.2011 இல் மூலதனம் | | 800.00 | |
| வங்கிக் கட்டணம் | | | 8,500.00 |
| வங்கிமேலதிகப் பற்று | | | 8,200.00 |
| வெளித்திரும்பல் | | 539,700.00 | 539,700.00 |

மேலதிகதகவல்கள

- உரிமையாளர் வாராந்தம் ரூபா 100.00 பெறுமதியான பொருட்களை தனது சொந்தத் தேவைக்கு எடுத்துள்ள போதும் அவை தொடர்பான பதிவுகள் எதுவும் ஏடுகளில் இடம்பெறவில்லை
- 31.12.2011 இல் சென்மதிசெலவினங்கள்
  சம்பளம் ரூபா 2,000.00
  விளம்பரம் ரூபா 500,00
- 31.12.2011 இல் முற்பணசெலவினங்கள்
  காப்புறுதி ரூபா1,000.00
- மாதாந்த கட்டடவாடகை ரூபா 1,000.00
- நிலையான சொத்துக்களுக்கு பின்வருமாறு தேய்விடுக
  காணிகட்டடத்திற்கு நேர்கோட்டு முறையில் 15மூ
  பொறித் தொகுதிக்க ஒடுங்குபாகமீதி முறையில் 12மூ
- கடன்பட்டோரில் மேலும் 1,000.00 ரூபாவினை அறவிடமுடியாக்கடனாகப் பதிலளிப்பதுடன் ஐயக்கடன் ஏற்பாட்டிற்கு 5 மூ இனை ஏற்பாடு செய்க
- 31.12.2011 இல் இருப்புரூபா 10,000.00

வேண்டப்படுவது:-

- 31.12.2011 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார இலாபநட்டக் கணக்கு
- 31.12.2011 இல் உள்ளவாறான ஐந்தொகை

06. தனிவியாபாரியான வீநாயகரின் ஏடுகளில் இருந்து 31.03.2012 இல் பின்வரும் பரீட்சை மீதி எடுக்கப்பட்டது

| விபரம் | பே.ப | வரவு (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|---|
| காணிகட்டடம் | | 150,000.00 | |
| தளபாடமும் பொருத்துக்களும் | | 125,000.00 | |
| 01.04.2011 இல் இருப்புக்களும் | | 35,000.00 | |
| காப்புறுதி | | 2,500.00 | |
| கொடுத்தகழிவும் பெற்றகழிவும் | | 3,500.00 | 4,250.00 |
| 01.04.2011 இல் தேய்மான ஏற்பாடு | | | |
| காணிகட்டடம் | | | 45,000.00 |
| தளபாடமும் பொருத்துக்களும் | | | 52,500.00 |
| கடன்பட்டோர் | | 35,000.00 | |
| கடன்கொடுத்தோர் | | | 43,000.00 |
| காசும் வங்கியும் | | 12,500.00 | |
| மின்சாரம் | | 6,000.00 | |
| வெளிக்காவுகை | | 3,000.00 | |
| 31.03.2012 இல் இருப்புக்கள் | | 46,000.00 | |
| 12மூ வங்கிக்கடன் | | | 50,000.00 |
| வியாபார இலாபம் | | | 120,000.00 |
| 10மூ நிலையான வைப்பு | | 80,000.00 | |
| பொதுச்செலவு | | 2,300.00 | |
| விளம்பரம் | | 3,300.00 | |
| சில்லறை வருமானம் | | | 14,500.00 |
| 01.04.2011 இல் மூலதனம் | | | 174,850.00 |
| | | 504,100.00 | 504,100,00 |

செம்மையாக்கல்கள் :-

- நிலையான சொத்துக்களுக்கு நேர்கோட்டு முறையில் பின்வருமாறு தேய்வீடுக
  காணிகட்டடம் 5மூ
  தளபாடமும் பொருத்துக்களும் 10மூ
- வியாபார இலாபம் கணிப்பீடு செய்வதில் ஆரம்ப இருப்புகவனத்தில் கொள்ளபடவில்லை
- 20.03.2012 இல் நிறுவனத்தில் ஏற்பட்டதீவிபத்தினால் ரூபா 20,000.00 கிரயமான பொருட்கள் அழிவடைந்து விட்டன. இதில் 70மூ காப்புறுதி நிறுவனம் தருவதாக ஒப்புக்கொண்டுள்ளது. இது பற்றிய விபரம் ஏடுகளில் இடம்பெறவில்லை
- அட்டுறுகாப்புறுதி ரூபா 3,000.00
  முற்பணவிளம்பரம் ரூபா 800.00
- கடன்பட்டோரில் ரூபா 2,000.00 இனை அறவிடமுடியாக்கடனாகப் பதிலளிப்பதுடன் ஐயக்கடன் ஏற்பாட்டிற்கு தேறிய கடன்பட்டோரில் 6 மூ இனை ஏற்பாடு செய்க

வேண்டப்படுவது :-

- 31.03.2012 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார இலாபநட்டக்கணக்கு
- 31.03.2012 இல் உள்ளவாறான ஐந்தொகை

07. தனிவியாபாரியான பிள்ளையாரின் ஏடுகளில் இருந்து 31.03.2012 இல் பின்வரும் பரீட்சை மீதி எடுக்கப்பட்டது

| விபரம் | பே.ப | வரவு (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|---|
| காணிகட்டடம் | | 100,000.00 | |
| தளபாடமும் பொருத்திகளும் | | 50,000.00 | |
| கொள்வனவு | | 65,800.00 | |
| கடன்பட்டோரும் கடன்கொடுத்தோரும் | | 15,000.00 | |
| அறவிடமுடியாக்கடன் | | 16,500.00 | 13,900.00 |
| ஒப்படைவான் வண்டி | | 750.00 | |
| தேய்மானஏற்பாடு 01.04.2011 | | 120,000.00 | |
| ஒப்படைவான் வண்டி | | | |
| வங்கிமீதி | | 21,350.00 | |
| கையிலுள்ளகாசு | | 11,300.00 | |
| உட்திரும்பல் | | 6,000.00 | |
| அலுவலகச்செலவு | | 890.00 | |
| உட்சுமை கூலி | | 3,500.00 | |
| அனுமதிக்கழிவு | | 2,000.00 | |
| தொக்கு 01.04.2011 | | 11,000.00 | |
| விற்பனை | | | 150,000.00 |
| விளம்பரம் | | 5,500.00 | |
| வங்கிக்கட்டணம் | | 600.00 | |
| 10 மூ நிலையானவைப்பு | | 35,000.00 | |
| எடுப்பனவு | | 1,800.00 | |
| வாடகை | | | 6,000.00 |
| நானாவிதசெலவு | | 5,000.00 | |
| ஐயக்கடன் ஏற்பாடு 01.04.2011 | | | 700.00 |
| எழுதுகருவி | | 950.00 | |
| தொலைபேசி | | 375.00 | |
| மூலதனம் | | | 261,215.00 |
| | | 473,315.00 | 473,315,00 |

செம்மையான தகவல்கள் :-

- 31.03.2012 இல் இருந்தபடிமுடிவுப்பொருள் இருப்பு ரூபா 8,000.00
- அறவிடமுடியாக்கடனுக்கான ஏற்பாடு கடன்பட்டோரில் 8மூ ஆக அதிகரிக்கப்பட வேண்டும்
- முற்பணஎழுதுகருவி ரூபா 125.00
- ஒப்படைவான் வண்டிக்குகொள்விலையில் 12மூ உம் தளபாடமும் பொருத்திகளுக்கு கொள்விலையில் 8மூ உம் தேய்மானம் இடுக
- நிலையானவைப்பு மீதான வட்டி ஏடுகளில் இடம்பெறவில்லை

வேண்டப்படுவது :-

- 31.03.2012 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார இலாப நட்டக்கணக்கு
- 31.03.2012 இல் உள்ளவாறானஐந்தொகை

நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01) 1. அமுதம் 2.இறக்கம் 3. குடி 4. தேசத்திலே
(02) 1. காடு 2. கெட்ட 3. மேடு 4.வருவோம் (03).1.சத்தம் 2.வெளிச்சம் 3.மறை 4. ஓர் உறுப்பு 5. ஓா ஆயுதம் 6.சீவித்தல்
(04).1.தமிழ்மொழியில் பல சிறந்த நூல்கள் உள்ளன.2.திருவள்ளுவர் இந்தியாவில் உள்ள தமிழ்நாட்டில் வாழ்ந்தார் 3. நாம் இளமையிலே கல்வி கற்க வேண்டும்
(05).1.பாட்டி +இடம் 2.குடி +இருக்கும் 3.வேண்டும் + ஆனால் 4. வைத்து + இருப்பதை (06)1.பறவைபளபளக்கிறதுபாட்டுப்,தந்திரம்,வடை
(07).1.திருக்குறள் 2.திருக்குறள் 3. இரண்டு 4.திருக்குறள் , திருவள்ளுவர்
(08).1.ஆலமரம் 2.கிளிகள் 3.அதிபர் 4.புனிதா 5. சூரியன் (09).1.பிழை 2.பிழை 3.பிழை 4.பிழை 5.பிழை 6.பிழை (10).1.வந்தி 2.வட்டி 3.வட்டு 4.வடிவு 5.வளைவு 6.வண்டி 7.வள்ளி 8.வம்பு (12).1.மாணவி 2.தேவன் 3.அரசி 4.ஆசிரியன் 5.சீமான் 6.உத்தமன் (14).1.பட்டுத்துணி 2.கற்பாறை 3.வயற்கரை 4.கண்ணீர் 5.மண்ணரிப்பு 6.பூச்செடி 7.பல்லுடைந்து 8.மரவோ (15).1.பாதாசாரி கடவை 2. வைத்தியசாலை 3. பேருந்துதரிப்பிடம் 4.சிறுவர் கடவை (16).1.சாம்பல் 2.கறுப்பு 3.பருப்பு 4.புதினம் 5.மல்லிகை (17).1.கிராமம் 2.விருப்பம் 3.தனம் 4.மணம் 5.சந்தோஷம் 6.குருவி 7.உடல் 8.நினைத்தது 9.பாட்டு 10.சூழ்ச்சி (18).1.பேராசை 2.நறுமணம் 3.அழுதார் 4.கேடு (19).1.கணனி 2.முரசு,தீ 3. புறாக்கள் 4.முடித்தான்/நிறைவுசெய்தான் 5.தீ (20).1.இருவரும் 2.கிழக்குப் 3.மரக்கன்றுகள் 4.தேங்காய்கள் 5. நிறையத் (21).1.விவசாயம் செய்ய நீர் தேவை 2.உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் 3.மாடுகளை கலப்பையில் பூட்டி உழுவார்கள் 4.நெல் விளைந்த பின் அரிவி வெட்டுவார்கள் 5.உழவர்கள் மாரிகாலத்தில் வேலையை ஆரம்பிப்பார்கள்




ஜே/89 மணியந்தோட்டம் , உதயபுரம், அரியாலை தென்கிழக்கு நாவலடி, அரியாலை கிழக்கு நாவலடி செட்டியார் தோட்டம் ஜமுனா ஏரி 70 மற்றும் ஜே/119 கோண்டாவில் ஆகிய பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுடன் ஈ.பி.டி.பி. நல்லூர் பிரதேச அமைப்பாளர் ரவீந்திரதாஸன் கலந்துரையாடுவதைக் காணலாம்.

# கிளி.மாவட்டம் அபிவிருத்தியடைவதற்கு அர்ப்பணிப்புமிக்க கடின உழைப்பே காரணம்

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு

(கிளிநொச்சி)

அர்ப்பணிப்புமிக்க கடின உழைப்பின் மூலமே இவ்வருடத்தின் நடுப்பகுதியில் கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு அபிவிருத்திப் பணிகளுக்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் விசேட நிதி ஒதுக்கீடாக எமக்கு கிடைத்த 125 மில்லியன் ரூபாவினை மக்களின் நலனுக்காக முழுமையாக செலவு செய்துள்ளோம் என ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.



கடந்த சனிக்கிழமை கரைச்சி பிரதேச செயலக மண்டபத்தில் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 120 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கி வைத்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேற்படி நிதி கிடைத்து குறுகிய காலம் எனினும் மாவட்டத்தில் அரசியல் தலைமையின் வழிநடாத்தலில் மாவட்டத்தின் அனைத்து அதிகாரிகளினதும், உத்தியோகத்தர்களினதும் கடின உழைப்பின் மூலமும் ஒரு ரூபாவேனும் திரும்பிச் செல்ல விடாது செலவு செய்யப்பட்டிருக கிறது. இதுதான் மக்களின் நலன்களில் அக்கறையுள்ளவர்களின் செயற்பாடுகள். பாதிக்கப்பட்டுள்ள மக்களை அந்த பாதிப்புகளில் இருந்து மீட்பதற்கு கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை உச்சளவில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்

மக்களின் தேவைகளையும், பிரச்சினைகளையும் தீர்க்கின்ற அரசியல் அணுகுமுறையே புத்திசாலித்தனமானதும், விவேகமானதுமாகும் இன்றைய சூழலில் தமிழ் மக்கள் கோசங்களுக்கும்,உணர்ச்சி ஊட்டல்களுக்கும் பின்னால் செல்லாது புத்திபூர்வமாக விவேகமாக சிந்தித்து தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும்.

தொடர்ந்தும் வாய்ப்புக்களை இழக்கும் மக்களாக இருக்காது.மாற்றங்களை நோக்கி சிந்திக்கவும் செயற்படவும் வேண்டும். மக்களின் முடிவுகள் தவறாக அமையும் போது அவலங்களும் துன்பங்களுமே பரிசாக கிடைக்கின்றன கடந்த காலத்தின் அனுபவம் இது.

எனவே இதிலிருந்து எதிர் காலத்தை நோக்கி சிந்தித்து தீர்க்கமான முடிவுகளை மேற் கொள்ள வேண்டும் என்றார்.

கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப் பினர் வை.தவநாதன்,மாவட்டச் செயலக திட்டப்பணிப்பாளர் மோகனபவன்,உதவித் திட்டப் பணிப்பாளர் கேதீஸ்வரன், கரைச்சி பிரதேச சபை உறுப் பினர்கள் மனோகரன்,கிருஸ்ணசாமி, கரைச்சி பிரதேச செயலக உதவித் திட்டப்பணிப் பாளா அமல்ராஜ், மற்றும் பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மாற்றுத்திறனாளிகளின் உரிமையை பாதுகாப்பதற்கு புதிய திட்டம்

(யாழ்ப்பாணம்)

சமூக சேவைகள் அமைச்சு ஊனமுற்றோர் உரிமைகள் பாதுகாப்பு தொடர்பான புதிய சட்டங்களை உருவாக்கவும்,சைகை பாசையினை அங்கீகரிக்கப்பட்ட மொழியாக்கும் சட்டமாக தயாரிக்கவும்,வெண்பிரம்பு உபயோகிக்கும் விழிப்புலனற்றோருக்கு சட்டப்படி பாதுகாப்பை வழங்குவதற்குமான சட்டத்தை தயாரிக்கவும் குறித்த அதிகாரிகளின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

அத்துடன் எமது நாட்டில் மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய செயற்றிட்டத்தின் அச்சுப் பணிகள் நிறைவடைந்து வருவதுடன் அதனை வெளிப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளும் தற்போது ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

தொலைக்காட்சி செய்திகளின் போது முற்றிலும் வாய் பேசாதோர் விளங்கிக் கொள்ளக கூடிய வகையில் சைகை மொழியிலான நிகழ்ச்சிகளை நடத்தவும் போதுமான கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

அதுபோல விழிப்புலனற்றோருக்கான தொலைக்காட்சி செய்தி நிகழ்ச்சிகளும் தனியாக நடாத்தவும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் மூலம் நாட்டிலுள்ள 2 இலட்சம் விழிப்புலனற்றோர் நன்மை பெறக் கூடிய நிலை உருவாகி உள்ளது. (90)


வாழ்க வளமுடன்

பெயர் :வி.அக்ஷஜன்
முகவரி: 40 ஜமுனா வீதி
நல்லூர்
அகவை
3 இல்
பல்லாண்டு காலம்
வாழ்கவென
வாழ்த்துகின்றோம்



பெயர் :ஆ.நிஜீலன்
முகவரி:அச்சுவேலி வடக்கு
அச்சுவேலி
அகவை
6 இல்
பல்லாண்டு காலம்
வாழ்கவென
வாழ்த்துகின்றோம்




# பாடசாலை படம் பொறித்த கொப்பியை வாங்குமாறு மாணவர்களுக்கு வற்புறுத்தல்

## விசனமடையும் பெற்றோர்

(கரணவாய்)

நெல்லியடிப் பிரதேசத்தில் உள்ள பிரபலமான பாடசாலையில் தமது பாடசாலையின் படத்தைப் பொறித்த அப்பியாசக கொப்பிகளையே மாணவர்கள் வாங்கவேண்டும் என வற்புறுத்தப்படுவதாக பெற்றோர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அடுத்த கல்வியாண்டுக்கான மாணவர்களுக்கான அப்பியாசக்கொப்பிகளை குறித்த பாடசாலை தனது பாடசாலையின் படத்தைப் பொறித்து விற்பனைக்காக தயாரித்துள்ள நிலையில் அப்பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் இவ் அப்பியாசக்கொப்பிகளையே வாங்க வேண்டும் என பாடசாலை நிர்வாகம் மாணவர்களை கட்டாயப்படுத்துவதாக பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் அப்பியாசக்கொப்பிகளை மாணவர்களுக்கு ஆசிரியர்களே விற்பனை செய்ய வேண்டும் என பணிக்கப்படுவதாவும் குறிப்பிடும் பெற்றோர் ஆசிரியர்களின் பணி கல்வி கற்பிப்பதா? கொப்பி விற்பனை செய்வதா எனவும் கேள்வி எழுப்புகின்றனர்.

அதாவது வியாபார நிலையங்கள் செய்யும் வேலையை ஏன் பாடசாலைகள் முன்னெடுக்கின்றன என தெரிவிக்கும் பெற்றோர் இது தொடர்பில் வலயக் கல்வி அலு வலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர். (18)


வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..................................
முகவரி :- ..................................
பிறந்த ஆண்டு :- ..................................
கூப்பன் ஐந்தும், புகைப்படமும்
..................................
பெற்றோர் கையொப்பம்

## "திருமண மண்டபம்" என பெயர் சூட்டி

# அமெரிக்க தூதரகத்தை தாக்க ஏற்பாடு



சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மீது நடத்தப்படவிருந்த தற்கொலைத் தாக்குதலுக்கு திருமண மண்டபம் என்று பாகிஸ் தானிய உளவுப் பிரிவினால் பெயரிடப்பட்டிருந்ததாக, இந்தி யாவின் தேசிய புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ உளவாளியான இலங்கையை சேர்ந்த சகீர் ஹீசேனுக்கு, பூந்தம்ல்லி நீதிமன்றத்தில் தண்டனை விதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர் மூலம் பெறப்பட்டுள்ள தகவல்களை தேசிய புலனாய்வுப் பிரிவு வெளியிட்டுள்ளது.

தென்னிந்தியாவில் உள்ள பல வெளிநாட்டு தூதரகங்களில தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்த ஹீசேன், சென்னையில் உள்ள அமெரிக்க தூதரகத்துக்கும் குறி வைத்திருந்ததை தேசிய புலனாய்வு அமைப்பின் அதிகாரப் பூர்வ தகவல்கள் தற்போது உறுதி செய்துள்ளன.

கொழும்பில் உள்ள பாகிஸ்தான் தூதரக அதிகாரியான அமீர் சுபைர் சித்திக் உத்தரவின் பேரில், வெளிநாட்டு தூதரகங்களை ஒளிப்படம் எடுத்தும், முக்கிய இடங்களின் தகவல்களை சேகரித்தும் அனுப்பியதாக சகீர் ஹீசேன் தெரிவித்துள்ளார்.

அவரது மடிக்கணனியில் அதற்கான ஆதாரங்களும் சிக்கி உள்ளன.

மேலும் சகீர் ஹ்சேன் பாகிஸ்தான் தூதரக உயர் அதிகாரிகள் சிலரை பாங்கொக்கில் சந்தித்து சதித்திட்டம் தீட்டி உள்ளார்.

அப்போது, தற்கொலைக் குண்டுதாரியாக பயன்படுத்தவிருந்த 2 பேரையும் அவர் சந்தித்துள்ளார். அங்கு இரு தீவிரவாதிகள் மூலம் சென்னையில் உள்ள அமெரிக்க தூதரகத்தை தாக்கத்திட்டமிட்டுள்ளனர்.

அவர்கள் தூதரகத்துக்கு திருமண மண்டபம், தற்கொலைக் குண்டுதாரிகளுக்கு சமையல்காரர்கள், தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படும் வெடிபொருளுக்கு வாசனைப்பொருட்கள் என்ற சங்கேத சொற்களைப் பயன்படுத்த முடிவு செய்துள்ளனர்.


மாலைதீவிலிருந்து தீவிரவாதிகள் இந்தியாவுக்குள் ஊடுருவவும் திட்டமிட்டிருந்தனர். ஆனால், சகீர் ஹீசேன் பிடிபட்டதால் அவர்களின திட்டம் தோல்வி அடைந்துள்ளது.

இந்தியாவில் தாக்குதல் நடத்த சதித்திட்டம் தீட்டியதில், கொழும்பில் உள்ள பாகிஸ்தான் தூதரக அதிகாரிகளுக்கும் பங்கு இருப்பதால் அவர்களையும் இந்த வழக்கில் குற்றவாளிகளாக சேர்த்து கைது செய்யும் நடவடிக்கையில் தேசிய புலனாய்வு அமைப்பு ஈடுபட்டுள்ளது.

இலங்கையைச் சேர்ந்தவர்களுக்கும் இதில் தொடர்பிருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

எனவே, விரைவில் தேசிய புலனாய்வு குழு, சிறிலங்கா சென்று விசாரணை மேற்கொள்ளும் என கூறப்பட்டுள்ளது.

## எபோலா நோய்த்தாக்கம் ஆபிரிக்காவில் அதிகரிப்பு




எபோலா தாக்கத்தின் அச்சம் இன்னும் அதிகளவில் உள்ளதாக மேற்கு ஆபிரிக்காவின் ஐக்கிய நாடுகள் அலுவலகம் எச்சரித்துள்ளது

இந்த நோய் உலகின் பல நாடுகளுக்கும் பரவும் அபாயம் உள்ளதாக அந்த அலுவலகம் அறிவித்துள்ளது. இந்தநிலையில் எபோலா நோய்க்கு உள்ளாகியுள்ள சியாராலியோனின் தலைநகரில் உள்ள புதைகுழி ஒன்றுக்கு அதிகளவான சடலங்கள் எடுத்து வரப்பட்டு புதைக்கப்பட்டன. இந்த சடலங்கள் யாவும் எபோலா நோயால் இறந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உலகச் செய்திகள்

## சிரியாவில் குண்டு வீச்சு 50 தீவிரவாதிகள் பலி



சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் மீது வான்வழி தாக்குதலில் அமெரிக்கா மற்றும் கூட்டணி நாடுகள் ஈடுபட்டுள்ளன. அங்கு துருக்கி எல்லையில் உள்ள கொபானி நகரில் பதுங்கியுள்ள தீவிரவாதிகளின் நிலைகளின் மீது அமெரிக்க போர் விமானங்கள் குண்டு வீசி தாக்கின.

அது தவிர ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக குர்திஷ் படையினரும் சண்டை மற்றும் தற்கொலைத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இது போன்ற தாக்குதல்களால் நேற்று முன்தினம் ஒரு நாள் மட்டும் கொபானி நகரில் 50 ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் பலியாகி உள்ளனர்.

இந்த தகவலை சிரியா மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

அதே நேரத்தில் தீவிரவாதிகளுடன் நடந்த சண்டையில் குர்திஷ் படையைச் சேர்ந்த 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

## இஸ்லாமியர்களுடன் இணைந்து பாப்பரசர் பிரார்த்தனை



துருக்கியின் பிரபல மசூதி ஒன்றில் இஸ்லாமியர்களுடன் போப் பிரான்சிஸ் பிரார்த்தனை செய்துள்ளார்.

துருக்கிக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட கத்தோலிக்க மதத் தலைவர் பாப்பரசர் பிரான்சிஸ், தனது சுற்றுப் பயணத்தின் இரண்டாவது நாளான கடந்த 29 ஆம் திகதி இஸ்தான்புல் நகரில் இருக்கும் மிகப் பெரிய மசூதிக்கு சென் றுள்ளார்.

மசூதியின் வெளியே தனது காலணிகளை கழற்றிவிட்டு சென்ற அவர், இஸ்தான்புலின் இஸ்லாமிய தலைவர் முப்தி ரஹ்மி யாரன் அருகில் நின்று தலையைக் குனிந்து சில நிமிடங்கள்மௌனமாக பிரார்த்தனை செய்துள்ளார்.

## நைஜீரிய பள்ளிவாசல் தாக்குதலில் பலியானவர்கள் 200 ஆக அதிகரிப்பு



(நைஜீரியா)


நைஜீரியா பள்ளிவாசலில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 200 ஆக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நைஜீரியாவின் இரண்டாவது பெரிய நகரான கானோவில் மத்திய பள்ளிவாசலில் கடந்த வெள்ளிக்கிழமை தொழுகையில் ஈடுபட்டிருந்தோர் மீது இஸ்லாமிய தீவிரவாதிகள் என சந்தேகிக்கப்படும் ஆயுததாரிகள் துப்பாக்கியால் சுட்டுள்ளனர். பின்னர் மூன்று குண்டு வெடிப்புகளும் இடம்பெற்றன இதன் போது உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 200 ஆக அதிகரித்துள்ளதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக உள்ளதால், அவர்களுக்கு சிகிச்சை அளிப்பதில் உள்ளூர் மருத்துவமனைகளால் ஈடுகொடுக்க முடியவில்லை என்று செய்திகள் கூறுகின்றன.

இந்தத் தாக்குதலை அடுத்து கோபமடைந்துள்ள மக்கள் தமக்கு போதிய பாதுகாப்பு இல்லை என்று கூறி வீதிகளில் இறங்கி போராட்டங்களில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## மனித கழிவில் இயங்கும் பஸ் இங்கிலாந்தில் புதிய முயற்சி



மனிதக் கழிவில் இருந்து தயாராகும் எரிவாயுவில் இயங்கும் பேருந்து போக்குவரத்து, இங்கிலாந்தில் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பிரிஸ்டலைச் சேர்ந்த ஜெனகோ என்ற நிறுவனம், மனிதக் கழிவு, பயன்படாத உணவு ஆகியவற்றைக் கொண்டு, சுற்றுச்சூழலுக்கு மாசு இல்லாத, "பயோ மீத்தேன்" என்ற உயிரி எரிவாயுவை உருவாக்கியிருக்கிறது.

இந்த எரிவாயுவின் மூலம் உருவாகும் மின்சாரத்தை, அது, தேசிய மின் பகிர்மான தொகுப்பில் சேர்த்துள்ளது. இந்த மின்சாரம், 8,500 குடும்பங்களின் மின் தேவையை பூர்த்தி செய்கிறது. இப்போது ஜெனகோ, இதே எரிவாயு தொழில்நுட்பத்தை பஸ்போக்கு வரத்திற்கும், பயன்படுத்தியுள்ளது.

# தவறான வழி நடத்தல்களால் முள்ளிவாய்க்கால் வரை அவலம்

## கல்வியியற் கல்லூரியில் அமைச்சர் டக்ளஸ்

(கோப்பாய்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இடைநிறுத தப்பட்டிருந்த அழகியல் பாடங்களை அடுத்த ஆண்டுமுதல் கற்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் அதேவேளை, கல்லூரியின் வளங்களை மேலும் நிறைவு செய்து சிறப்பான வளங்களோடு இயங்குவதற்கு உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முத்தமிழ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நேற்றைய தினம் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இக்கல்லூரிச் சமூகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட முத்தமிழ் விழாவில் பங்குகொள்வதில் மகிழ்ச்சியடைவதுடன், இன்றைய இந்நிகழ்வு தமிழர்களின் கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களை பிரதிபலிக்கின்ற வகையில் ஆரம்பிக்கப்பட்டது.

எந்த சமூகமும் கலை, கலாசாரங்களை பின்பற்றுவதற்கு அல்லது தொடர்வதற்கு அமைதியான சந்தோசமான சூழல் இருக்க வேண்டும்.

அப்போதுதான் அந்தச் சமூகத்தின் கலை, கலாசார பண்பாடுகளை பாதுகாத்துக் கொள்ள முடியும். இவ்வாறானதொரு சூழல் இல்லாத போது கலை, கலாசாரங்களை பாதுகாக்க முடியாது என்பதை கடந்த கால தேவையற்ற அழிவுயுத்தத்தில் காணமுடிந்தது.

இன்று ஓர் அமைதியான சூழல் கிடைக்கப் பெற்றுள்ளது. அதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடந்த கால தமிழ் அரசியல் தலைமைகளின் தவறான வழி நடத்தல்களினால் தான் எமது மக்கள் இழப்புகளையும் இடப்பெயர்வுகளையும் சந்திக்க வேண்டி நேர்ந்தது.

அவ்வாறானதொரு நிலை எதிர்காலத்திலும் நிகழாத வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டுமென்பதுடன், எமக்கு தேவையானவற்றை பெற்றுக் கொள்வதற்கும் நாம் முயற்சிக்க வேண்டும்.

மேலும் முள்ளிவாய்க்கால் வரை எமது மக்கள் அவலங்களை சந்தித்திருந்தனர் என்றும் எதிர்காலங்களில் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

முத்தமிழ் விழாவையொட்டி வெளியிடப்பட்ட கலாசுரதி நூலை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெளியிட்டு வைக்க அதனை சிவசிதம்பர தேசிய சச்சிதானந்த ஐயர் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டதுடன், கல்லூரி பீடாதிபதியினால் அமைச்சர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இதில் இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் நந்தகுமார் ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் தர்மராசா, கல்லூரியின் சிரேஷ்ட ஆலோசனை உறுப்பினர் லயன் வைத்தியகலாநிதி தியாகராஜா, விரிவுரையாளர் லலீசன் உள்ளிட்ட விரிவுரையாளர்கள், துறைசார்ந்த பலரும் உடனிருந்தனர்.

அசாதாரண சூழ்நிலை காரணமாக செயலிழந்திருந்த யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சியின் பயனாக கடந்த 2000 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு இற்றைவரை சிறப்பாக இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மகிந்த சார்பில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது

எதிர்வரும் ஜனவரி மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போட்டியிடுகின்றார்.

கட்சியின் பொதுச்செயலாளர் சுசில் பிரேமஜயந்த் நேற்று இராஜகிரியவில் உள்ள தேர்தல் செயலகத்தில் ஜனாதிபதியின் சார்பில் கட்டுப்பணம் செலுத்தி உள்ளார்.

இதன்பின் கருத்து வெளியிட்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அனுர பிரியதர்சன யாப்பா, ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பெரும்பான்மை வாக்குகளுடன் அமோக வெற்றியீட்டுவார் எனத் தெரிவித்துள்ளார்.

தேர்தலில் வெற்றியீட்டுவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் 14 கட்சிகள் இணைந்து கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

## ஐ.தே.கட்சியில்...

தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலர், நவீன் திஸாநாயக்காவுக்கு வரவேற்பளித்தனர். முதலில், அவரது தந்தை காமினி திஸாநாயக்காவின் சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்திய நவீன், பின்னர் ஐ.தே.க.வில் இணைந்து கொண்டார்.

## கடற்பிராந்திய....

இந்தநிலையில் கடற்கொள்ளையர், போதைவஸ்து கட்டுப்பாடு, மனித கடத்தல்கள் என்பவற்றை கட்டுப்படுத்தும் வகையில் இலங்கையுடனும், மாலைதீவுடனும் சிறந்த ஒத்துழைப்பை கொண்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு ஏற்பாடு செய்துள்ள இந்தக் கலந்துரையாடலில், 36 நாடுகளைச் சேர்ந்த 100 பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர்.

## ஜனாதிபதி வேட்பாளர்கள் சொத்து பிரகடனம் செய்ய வேண்டும்

### சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற அனைத்து வேட்பாளர்களும் தமது சொத்து விவரங்களைத் தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிப்பது அவசியமென இலங்கை வழக்கறிஞர்கள் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான சட்டம் மற்றும் சொத்துகள் மற்றும் உடமைகள் தொடர்பான சட்டங்களின் கீழ் வேட்பாளர்கள் சொத்து விவரங்களை அளிப்பதென்பது அவசியம் என கொழும்பில் நடந்த செய்தியாளர் கூட்டத்தில் வழக்கறிஞர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் பத்திரன தெரிவித்துள்ளார்.

வேட்பு மனுத் தாக்கல் செய்யும்போதே சொத்து விவர அறிக்கை ஒன்றை வேட்பாளர்கள் தேர்தல் ஆணையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றிருந்தாலும் கடந்த காலங்களில் இந்த முறை கடைப்பிடிக்கப்படவோ வலியுறுத்தப்படவோ இல்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

ஒரு வேட்பாளர் சொத்து விவரங்களை தெரிவிக்க மறுத்தால் அது தேர்தல் சட்டங்களை மீறும் செயல் என்றும், அப்படி விவ்ரம் அளிக்க மறுக்கும் வேட்பு மனுவை நிராகரிக்கக் கோரி வழக்குத் தாக்கல் செய்ய பொதுமக்களுக்கு முகாந்திரம் உள்ளது என்றும் பத்திரன குறிப்பிட்டார்.

இந்த முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விண்ணப்பிக்கும் வேட்பாளர்கள் சொத்து விவரங்களை அளிக்கிறார்களா என்பதை தாங்கள் அவதானிக்கப் போவதாகவும், அப்படி அளிக்கத் தவறுகிற பட்சத்தில் தேர்தல் ஆணையாளரும் பொலிஸ் மா அதிபரும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

சட்ட நடவடிக்கை எடுக்க தேர்தல் ஆணையாளர்கள் பொலிஸ் மா அதிபர் தவறுகிற பட்சத்தில் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வழக்கறிஞர்கள் சங்கம் தீர்மானித்துள்ளதென அஜித் பத்திரன கூறினார்.

## யாழ்.குடாநாட்டில்...

களை வழங்குதல், உலருணவுப் பொருட்களை வழங்குதல், சுகாதார வசதிகள், உள்ளிட்ட மக்களுக்கான அவசர தேவைப்பாடுகள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், மக்கள் தற்போது வாழ்ந்து வரும் பகுதிகளிலுள்ள வெள்ளத்தை வெளியேற்றுவது மற்றும் அவர்களுக்குத் தேவையான கூரைத்தகடுகள், கூரை விரிப்பு, நிலவிரிப்பு, பாய்கள், போர்வை உள்ளடங்கலான அத்தியாவசிய தேவைகள் குறித்தும் இதில் அவதானம் செலுத்தப்பட்டது.

இச்சந்திப்பில் பிரதேச செயலர் பிரிவுகள் ஊடாக மக்களின் பாதிப்புக்கள் குறித்தும் அவர்களுக்கான உடனடித் தேவைகள் தொடர்பான விபரங்களை அந்தந்தப் பிரதேச செயலர்கள், பிரதேச சபைகளின் செயலாளர்கள், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இணைப்பாளர்கள், மக்கள் பிரதிநிதிகள் ஆகியோரிடம் அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

இதனடிப்படையில் பிரதேச செயலகங்களுடன் சமூக சேவைகள் அமைச்சு, இடர்முகாமைத்துவ அமைச்சு, உள்ளூராட்சி சபைகள் உள்ளிட்ட துறைசார்ந்த அனைத்து தரப்பினரும் இணைந்து மக்களுக்கான அவசரமானதும், அவசியமானதுமான உதவித் திட்டங்களை முன்னெடுக்க வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக் கொண்டார்.

மழைதொடரும் பட்சத்தில் வெள்ளத்தால் மக்களுக்கு ஏற்படக் கூடிய தொற்றுநோய், மற்றும் இடர்பாடுகள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

மக்களுக்கான சேவைகளை மேலும் விஸ்தரிக்கும் பொருட்டு பொலிஸ், கடற்படை, தரைப்படை, விமானப்படை ஆகியவற்றின் உதவிகளையும் பெற்றுக்கொள்ளும் வகையில் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், தேவையேற்படும் பட்சத்தில் படைத்தரப்பினரது உதவிகளை பெற்றுக்கொள்ள முடியுமென்றும் தெரிவித்தார்.

அத்துடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத்தை கோரும் அதேவேளை, மக்களுக்கான சேவைகளை பிரதேச செயலர்களும், பிரதேச சபை செயலாளர்களும் படைத்தரப்பினருடன் இணைந்து முன்னெடுக்கும் செயற்திட்டங்களை தமக்கு சமர்ப்பிக்குமாறும் அமைச்சர் இதன்போது கேட்டுக் கொண்டார்.

அந்தந்தப் பிரதேச செயலர் பிரிவுகளில் நீண்டகாலமாக இடம் பெயர்ந்து வாழும் மக்களை உதவித்திட்டங்களுக்குள் உள்வாங்கி அவர்களுக்கான உதவிகளை வழங்குமாறு பிரதேச செயலர்களுக்கும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுத்தமான குடிநீரைப் பெற்றுக் கொள்ளும் வகையில் துரித நடவடிக்கையினை முன்னெடுக்குமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும் அமைச்சர் விசேட பணிப்புரை விடுத்ததுடன், நடமாடும் மருத்துவ சேவையின் அவசியம் தொடர்பிலும் அவதானம் செலுத்தியிருந்தார்.

கடற்கொந்தளிப்புக் காரணமாக நெடுந்தீவிற்கு கடல்மார்க்கமான பயணத்தை மேற்கொள்ள முடியாத நிலையில் அவசர தேவைப்பாடுகள் இருப்பின் விமானப்படையின் உதவியை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் இதுவரையில் 4 ஆயிரத்து 221 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 445 அங்கத்தவர்கள் பருவகால மழையினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மழை தொடரும் பட்சத்தில் இத்தொகை மேலும் அதிகரிக்கக் கூடுமென்றும் அதற்கேற்ற வகையில் முன்ஆயத்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து அந்தந்த அரச திணைக்களங்களின் ஊடாக முன்னெடுக்கத் தயாராக இருப்பதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலன்ரின் (உதயன்), மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மோகனேஸ்வ்ரன், பிரதேச செயலர்கள், பிரதேச சபை செயலாளர்கள் துறைசார்ந்த அரச திணைக்கள உத்தியோகத்தர்கள், இராணுவ, பொலிஸ் அதிகாரிகளுடன் அமைச்சரின் இணைப்பாளர்கள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## கனமழை...

நிலையும் பாதிக்கப்பட்டுள்ளது. காற்றுடன் கூடிய மழை தொடராகப் பெய்து வரும் நிலையில் நேற்றும் இயல்பு நிலை பாதிப்படைந்திருந்தது. அத்துடன் மக்களின் நடமாட்டம் நகரப் புறங்களில் வெகு குறை வாகவே காணப்பட்டன.

அடைமழையினால் தாழ்வு நிலப் பகுதிகளில் வெள்ள நீர் தேங்கியுள்ளதுடன் வீடுகளுக்குள்ளும் புகுந்துள்ளது.

இதனால் பெருமளவான மக்கள் நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந்துள்ளதுடன் உறவினர்களின் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

அரியாலை, அரியாலை கிழக்கு, உதயபுரம், மணியந் தோட்டம், வசந்தபுரம், நாவாந்துறை, பொம்மைவெளி, வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு, பொலிகண்டி, கச்சாய், சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையம், வாதரவத்தை போன்ற பகுதிகள் உட்பட பெரும்பாலான பகுதிகளில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடந்த மூன்று நாட்களில் யாழ்ப்பாணத்தில் 69.7 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. இதேவேளை, நேற்று மட்டும் 19.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பிற்பகல் 2.30 மணி வரை பதிவாகியுள்ளதாக திருநெல்வேலி வானிலை ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது. இக்காலநிலை மேலும் சில நாட்களுக்கு நீடிக்கக் கூடும் எனவும் வானிலை அவதான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(இ, பா)

## இது முழுமை...

ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன். நேற்று கொழும்பு விகாரமகாதேவி பூங்கா திறந்தவெளி அரங்கில் நடைபெற்ற பொது எதிரணியின் புரிந்துணர்வு உடன்படிக்கை கையெழுத்திடும் வைபவத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

இன்றைய தினம் இந்த நாட்டிலே ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தினமாகும். இந்த நாட்டிலே முதன்முறையாக, பிரதான இரண்டு தேசிய கட்சிகளும் ஒரு தேசிய பயணத்தை ஆரம்பித்துள்ளன. இந்த அடிப்படையில் ஒரு பொது வேட்பாளர் முன்நிறுத்தப்பட்டுள்ளார். இந்த தேசிய பயணத்தில் நாமும் கலந்து கொள்ள வேண்டும் என நான் நம்புகிறேன் என்று தெரிவித்தார்.

## அரசியல்....

ங்கை அரசாங்கம் வழங்க வேண்டுமென்பதே இந்தியாவின் விருப்பம் ஏன மத்திய அமைச்சர் வெங்கையா நாயுடு மேலும் தெரிவித்துள்ளார். அதேவேளை இலங்கை தொடர்பான இந்தியாவின் கொள்கைகளை குறை சொல்பவர்கள், இலங்கையையோ அல்லது சீனாவையோ அல்லது வேறு எந்த அயல்நாட்டையோ இந்தியா பகைத்துக்கொள்ளக் கூடாது என்பதை நினைவில் வைத்திருக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தியப் பிரதமரின் நடவடிக்கையின் பின்னரே இலங்கை அரசாங் கம் மரணதண்டனை விதிக்கப்பட்ட மீனவர்களை விடுதலை செய்தது. இந்த உணர்வு தொடரவேண்டும். மீனவர்களை துரிதமாக விடுதலை செய்வது இருநாடுகளுக்கும் இடையிலான உறவைப் பலப்படுத்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# எந்த இனத்திற்கு எதிராகவும் நாம் போரில் ஈடுபடவில்லை

## – அலரி மாளிகையில் ஜனாதிபதி எடுத்துரைப்பு



(கொழும்பு)

தாய்நாட்டை கட்டியெழுப்புவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முற்பகல் நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே ஜனாதிபதி இவ் விடயத்தினை குறிப்பிட்டுள்ளார்.

நீண்டகாலமாக இணக்க சபையை பிரதிநிதித்துவப்படுத்திய உறுப்பினர்களை கௌரவிக்கும் நோக்கிலான இந்த நிகழ்வு ஜனாதிபதி தலைமையில் அலரி மாளிகையில் நேற்று முற்பகல் நடைபெற்றது.

எந்தவொரு இனத்தவருக்கும் எதிராக நாம் போரில் ஈடுபடவில்லை. நாட்டை ஸ்திரமற்ற நிலைக்கு கொண்டுசெல்வதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.

நாடொன்றில் ஸ்திரமற்ற நிலைமை காணப்படும் பட்சத்தில், ஒருபோதும் நாட்டை அபிவிருத்தி செய்யவும் முடியாது. அதனை அனைவரும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

நாட்டில் கட்டியெழுப்பப்பட்டுள்ள ஸ்திரதன்மையை தொடர்ந்தும் கொண்டுசெல்ல வேண்டும். அது எம் அனைவரதும் பொறுப்பாகும். சர்வதேசத்தினர், மேற்குலக நாடுகள் என்பன அவற்றுக்கு விரும்பிய விதத்தில், எம்மை ஆட்டிவைப்பதற்காக எமது நாட்டில் விரும்பிய விதத்தில் செயற்படுவதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்பதனை நாம் அவர்களுக்கு நினைவுபடுத்த வேண்டும் என்றார்.

# ரணில் பிரதமராகலாம் எவ்வித எதிர்ப்பும் கிடையாது

## தெரிவிக்கிறார் அனுர



(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க பிரதமராக தெரிவு செய்யப்படுவதில் எவ்வித எதிர்ப்பும் கிடையாது என ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பொது வேட்பாளராக போட்டியிடும் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவி வகிப்பதிலோ அல்லது பிரதமராக ரணில் விக்ரமசிங்க பதவி வகிப்பதிலோ எதிர்ப்புக் கிடையாது.

பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுக் கொண்டு தெரிவு செய்யப்படுவோர் பதவிகளுக்கு நியமிக்கப்படுவதில் எவ்வித முரண்பாடும் கிடையாது.

யார் பிரதமராக பதவி வகிக்கின்றார் என்பது பற்றிய பிரச்சினை பெரிதல்ல நாட்டின் அரசியல் சூழ்நிலை குறித்தே கவனம் செலுத்தப்படவேண்டும்.

நாடாளுமன்றின் பெரும்பான்மையின் அடிப்படையில் ரணில்விக்ரமசிங்கவோ அல்லது வேறும் ஒருவருக்கோ பிரதமர் பதவி வழங்கப்படுவதில் சிக்கல் கிடையாது எனவும், அரசாங்கம் எந்த வகையிலாவது அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்ள முயற்சிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பிளாஸ்டிக் போத்தல்களா உடன் அறியத்தரவும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு ஆளுநரின் பணிப்பிற்கமைய சேதமடையாத வெற்று குடிநீர் மற்றும் பழரச பிளாஸ்டிக் போத்தல்களை மூடியுடன் சேகரித்து அதனை பழைய பூங்காவில் அழகுபடுத்திக் காட்சிப்படுத்தும் திட்டத்திற்காக இப் போத்தல்கள் சேகரிக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் சூழல் மாசடைதல் தடுக்கப்படுவதுடன், மாணவர்களுக்கும் சிறுவர்களுக்கும் சமூக அக்கறையுடன் செயற்படுவதற்கு வேண்டிய அறிவையும், அனுபவத்தையும் பெற்றுத்தரும்.

வெற்றுப் போத்தல்கள் சூழலை மாசுபடுத்துவதோடு தொற்று நோய்க்காவிகள் உருவாகுவதற்கும் வழி வகுக்கின்றன.

இன்றைய சூழலில் ஒவ்வொருவரும் சமூக நலனில் அக்கறையோடு செயற்பட வேண்டும் என்ற காரணத்தால் மேற்படி போத்தல்களை வைத்திருப்பவர்கள் உடனடியாக 072 967 9872 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறியத்தரவும்.

# ஜனாதிபதிக்காக நடிகை ஆலயத்தில் பிரார்த்தனை



(கொழும்பு)

பிரபல சிங்கள நடிகை கயேசா பெரேரா நேற்றய தினம் கொழும்பின் புறநகர்ப் பகுதியில் உள்ள ஸ்ரீ காளி அம்பாள் ஆலயத்திற்கு சென்று மகிந்தவின் வெற்றிக்காக தேங்காய் உடைத்து மத பிரார்த்தனைகளிலும் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

வருகின்ற ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த அமோக வெற்றி பெற வேண்டும் என பிரார்த்தித்துள்ளார்.

நடிகையின் இந்தப் பிரார்த்தனை பலிக்குமா? என்று பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

# எதிரணித் தலைவர்களின் இணைந்த கூட்டம் இன்று

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளர் சார்பில் கொழும்பு ஹைட்பார்க்கில் இன்று பிரசாரக்கூட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் தேவை என்ற கருத்தை முன்கொண்டு வந்த அதில் வெற்றி கண்டுள்ள மாதுளுவாவே சோபித தேரர் இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேன, சந்திரிக்கா குமாரதுங்க, ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, முன்னாள் கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன, ஹெல உறுமய முன்னாள் அமைச்சர் அத்துரலியே ரத்தன தேரர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் எம்.பியான எம்.ஏ. சுமந்திரன் உட்பட்டோர் உரையாற்றவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மைத்திரி பொறுமைசாலி இப்படி சொல்கிறார் சந்திரிக்கா

மைத்திரிபால சிறிசேன ஒரு ஜனநாயகத் தலைவர். எதிர்க் கருத்துக்களை வெளியிடுவோரை வீதியில் கொன்றுகுவிக்காதவர்.

அடுத்தவர்களின் கருத்துக்களை செவிமடுக்கக்கூடிய, பொறுமைசாலியான தலைவராவார். எதிரணியின் இந்த புதிய போராட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கூட்டமைப்பின் குழுவொன்றே இருக்கிறது. இன்னும் பலர் வரவிருக்கின்றனர் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிரணியின் பொது வேட்பாளராகப் போட்டியிடவுள்ள மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் தற்போது கொழும்பில் கைச்சாத்திடப்பட்டு வருகின்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், தற்போதுள்ள ஊழல், மோசடி அரசாங்கத்தைப் போன்ற அரசாங்கமொன்று எந்தவொரு தசாப்தத்திலேனும் இருக்கவில்லை. இன்று எமது நாடு உள்ள இந்த அபாயகரமான சூழ்நிலையை மாற்ற வேண்டும். அதற்காக, மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்க நாம் ஒத்துழைப்பு வழங்குவோம் என்று சந்திரிக்கா குமாரதுங்க மேலும் கூறினார்.


## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 22 - 07 - 1945

இறப்பு 30 - 11 - 2014

### கு.குமார குருக்கள்

(சட்டநாதர் சிவன் கோயில் பின்வீதி, நல்லூர்)

வயல்வெளி கந்தசுவாமி ஆலயத்தின் பிரதம குருக்கள் வரிசையில் சபாரட்ண குருக்களின் பேரனும், குமாரசாமி குருக்களின் மைந்தனுமாகிய எமது ஆலயத்தின் பிரதம குரு குமார குருக்கள் இறைவனடி சேர்ந்தமையை இட்டு எமது அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்தாருக்கு தெரிவிப்பதுடன், அவரது ஆத்ம சாந்திக்காகவும் பிராத்திர்க்கின்றோம். ( இ )

ஆலய தர்மகத்தாக்கள். வயல்வெளி கந்தசுவாமி ஆலயம்.



## மரண அறிவித்தல்

### முருகேசு அருளானந்தம்



காரைநகர், பலகாட்டை பிறப்பிடமாகவும், அறுகம்புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு அருளர்னந்தம் (30.11.2014) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பகவற்சிங் குணமணி தம்பதியினரின் அன்பு மருமகனும், பத்மாவதியின் அன்புக்கணவரும், தர்சினி, மயூரன் (அவுஸ்ரேலியா), குணசீலன் (காரைநகர் பிரதேச சபை ஊழியர்) யசோதா (மருதனார் மடம் பல்கலைக்கழகம்), கம்சிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரமேஸின் மாமனாரும், நிதுஷன், கிரிஷ்னிகா, ஆகியோரின் பாசமிகு பேரனும், சரஸ்வதி, தனபாக்கியம் ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று சாம்பலோடை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.
077 512 2978

அறுகம்புலம்
காரைநகர். ( இ )


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 டிசம்பர் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.